திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

மே 2019 விலை ரூ.5/-



## ஸ்ரீபத்மாவதி ஸ்ரீநிவாச பரிணயமஹோத்ஸவம், திருமலை

**13-05-2019 முதல் 15-05-2019 வரை**

(வைசாக (வைகாசி) சுத்த நவமி, தசமி, ஏகாதசியில் நடைபெறும்)



திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# திருப்பதி
# ஸ்ரீகோவிந்தராஜஸ்வாமி
# பிரம்மோத்ஸவம்

**11-05-2019 முதல் 19-05-2019 வரை**

**11-05-2019 சனிக்கிழமை**
பகல் : துவஜாரோஹணம்
இரவு : பெரிய சேஷ வாகனம்

**12-05-2019 ஞாயிற்றுக்கிழமை**
பகல் : சிறிய சேஷ வாகனம்
இரவு : ஹம்ஸ வாகனம்

**13-05-2019 திங்கட்கிழமை**
பகல் : சிம்ம வாகனம்
இரவு : முத்துப்பந்தல் வாகனம்

**14-05-2019 செவ்வாய்க்கிழமை**
பகல் : கல்பவிருக்ஷ வாகனம்
இரவு : சர்வபூபால வாகனம்

**15-05-2019 புதன்கிழமை**
பகல் : மோஹினி அவதாரம்
இரவு : கருட வாகனம்

**16-05-2019 வியாழக்கிழமை**
பகல் : ஹனுமத்வாகனம்
மாலை : வஸந்தோத்ஸவம்
இரவு : யானை வாகனம்

**17-05-2019 வெள்ளிக்கிழமை**
பகல் : சூரியப்பிரபை வாகனம்
இரவு : சந்திரப்பிரபை வாகனம்

**18-05-2019 சனிக்கிழமை**
பகல் : திருத்தேர்
இரவு : குதிரை வாகனம்

**19-05-2019 ஞாயிற்றுக்கிழமை**
பகல் : சக்ர ஸ்நானம்
இரவு : துவஜாவரோஹணம்



*ய: சாஸ்த்ரவிதி$_4$முத்ஸ்ருஜ்ய*
*வர்ததே காமகாரத: |*
*ந ஸ ஸித்$_3$தி$_4$மவாப்நோதி*
*ந ஸுக$_2$ம் ந பராம் க$_3$திம் ||*

எவன் சாஸ்திர முறையைத் துறந்து,
தன் மனம் போனபடி நடந்து
கொள்கிறானோ, அவன்
வெற்றியை அடைவதில்லை.
பெரும்பேற்றை – மேலான
நிலையை – அடைவதில்லை;
சுகத்தையும் அடைவதில்லை.

*– ஸ்ரீமத் பகவத் கீதை 16–23*

*நாராயணதே நமோ நமோ*
*நாரத$_3$ சன்னுத நமோ நமோ*

*முரஹர ப$_4$வஹர முகுந்த$_2$ மாத$_4$வ*
*க$_3$ருடக$_3$மன பங்கஜ நாப$_4$*
*பரம புருஷ ப$_4$வ ப$_3$ந்த$_4$ விமோசன*
*நரம்ருக$_3$ சரீர நமோ நமோ*

*ஜலதி$_4$சயன ரவிசந்த்$_3$ர விலோசன*
*ஜலருஹ ப$_4$வனுத சரணயுக$_3$*
*ப$_3$லி ப$_3$ந்த$_4$ன கே$_3$ாபவதூ$_4$ வல்லப$_4$*
*நலினோத$_3$ர தே நமோ நமோ*

*ஆதி$_3$தே$_3$வ சகலாக$_3$ம பூஜித*
*யாத$_3$வகுல மோஹன ரூப*
*வேதே$_3$ாத்$_3$த$_4$ர ஸ்ரீவேங்கட நாயக*
*நாத$_3$ப்ரிய தே நமோ நமோ*



நாரதரால் புகழப்படும் நாராயணனே, முரனை அழித்தவனும், பிறவிப்பிணியை போக்குபவனும், மோட்சத்தை தர வல்லவனும், திருமகள் நாதனும், கருடனின் நடையழகும், பிரம்மனைத் தாங்கும் நாபி கமலம் உடையவனும், புருஷர்களிலே சிறந்தவனும், பிறப்பறுப்பவனும், நரசிம்ம வடிவில் அவதரித்தவனும், திருபாற்கடலில் பள்ளி கொண்ட சூரிய சந்திரர்களை கண்களாகக் கொண்ட திருமகள் வருடும் அழகிய மென்மையான பாதங்களையுடையவனும், பலிச் சக்கரவர்த்தியின் கர்வத்தை அடக்கியவனும், கோபிகாஸ்த்ரீகளின் காதல் நாயகனும், தாமரைக் கண்களையுடயவனும், முழுமுதற் கடவுளும், யாதவக்குலத் தோன்றலும், வேதச் சரீரனும், இசைவிரும்பியுமான திருமலை நாயகனே உனக்கே ஆட்செய்வோம்.

*- அன்னமய்யா கீர்த்தனை*

# ஸ்வஸ்தி ஸ்ரீ விகாரி வருஷம் சித்திரை/வைகாசி மாதம் உத்தராயணம் வஸந்தருது சகவருஷம் 1941 கலியுகாதி 5120 மே 2019.

| ஆங் | தமிழ் | கிழமை | திதி | நட்ச. | விசேஷம் |
|---|---|---|---|---|---|
| 1 | 18 | புதன் | துவா | பூரட் | மே தினம். |
| 2 | 19 | வியா | திர | உத்ரட் | |
| 3 | 20 | வெள்ளி | சசி | ரேவ | மாத சிவராத்ரி. |
| 4 | 21 | சனி | அமா | அஸ் | சர்வ அமாவாசை. |
| 5 | 22 | ஞாயிறு | பிர | பர | இரவு 2ம.44நி. அக்னி நட்சத்திரம் ஆரம்பம், வைசாக சுத்த கிருத்திகை. |
| 6 | 23 | திங்கள் | துவி | கார் | இயற்கைச் சீற்றம், சந்தர தர்சனம். |
| 7 | 24 | செவ் | திரு | ரோகி | அக்ஷய திருதியை, ஸ்ரீபரசுராம ஜயந்தி, மாதங்கி ஜயந்தி செவ்வாய் மிதுனம், திருப்பதி கங்கை அம்மன் சித்திரை திருவிழா ஆரம்பம், ஸ்ரீபிருகு மஹரிஷி திருநட்சத்திரம். |
| 8 | 25 | புதன் | சது | மிரு | மாத சதுர்த்தி. |
| 9 | 26 | வியா | பஞ் | திரு | ஸ்ரீ சங்கர ஜயந்தி, ஸ்ரீராமானுஜர் ஜயந்தி. புதன் கி.அஸ்தமனம், ஸ்ரீபாஷ்யகாரர் சாத்துமுறை, ஸ்ரீநம்மாழ்வார் உத்ஸவாரம்பம். |
| 10 | 27 | வெள்ளி | சஷ் | புன | ஸ்ரீராம ஜெயந்தி.ஸ்ரீமுதலியாண்டான் திருநட்சத்திரம், திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜஸ்வாமி பிரம்மோத்ஸவம் அங்குரார்ப்பணம், கீலபட்ல ஸ்ரீகோனேடிராயஸ்வாமி பிரம்மோத்ஸவம் அங்குரார்ப்பணம். |
| 11 | 28 | சனி | சப் | பூச | கங்காஸப்தமி, திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி பிரம்மோத்ஸவம் ஆரம்பம், துவஜாரோஹணம், கீலபட்ல ஸ்ரீகோனேடிராய ஸ்வாமி பிரம்மோத்ஸவம் ஆரம்பம், துவஜாரோஹணம். |
| 12 | 29 | ஞாயிறு | அஷ் | ஆயி | மாத துர்காஷ்டமி பகாளமுகி ஜயந்தி, கத்தரி ஆரம்பம், இ.12ம. 08நி. |
| 13 | 30 | திங்கள் | நவ | மக | ஸீதா நவமி, திருமலையில் ஸ்ரீபத்மாவதி ஸ்ரீநிவாச பரிணயம் ஆரம்பம். |
| 14 | 31 | செவ் | தச | பூர | திதித்வயம் பருத்தி, எண்ணெய் வித்துக்கள் பயிரிட, திருப்பதி கங்கை அம்மன் சித்திரை திருவிழா நிறைவு, திருமலையில் பத்மாவதி ஸ்ரீநிவாச பரிணயம். |
| 15 | 1 | புதன் | ஏகா | உத்/ஹஸ | மோஹினி ஏகாதசி. சூரியன், ரிஷபம், ப.11ம.01நி. விஷ்ணுபதி, திருப்பதி ஸ்ரீகோவிந்த ராஜ ஸ்வாமி கருட சேவை, ரிஷிகேஷ்-நாராயணவனம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம் அங்குரார்ப்பணம், ஜம்மலமடுகு ஸ்ரீதேவி பூதேவி சமேத ஸ்ரீநாராபுர வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம் அங்குரார்ப்பணம், திருமலையில் ஸ்ரீபத்மாவதி ஸ்ரீநிவாச பரிணயம் நிறைவு. |
| 16 | 2 | வியா | துவா | சித் | பிரதோஷம், திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் வஸந்தோத்ஸவம் அங்குரார்ப்பணம், ரிஷிகேஷ்-நாராயண வனம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம் ஆரம்பம், துவஜாரோஹணம், ஜம்மலமடுகு ஸ்ரீதேவி பூதேவி சமேத ஸ்ரீநாராபுர வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம் ஆரம்பம், துவஜாரோஹணம், தேவுனி கடப்பா ஸ்ரீலக்ஷ்மி வேங்கடேஸ்வர ஸ்வாமி தெப்போத்ஸவம் ஆரம்பம். |
| 17 | 3 | வெள்ளி | திர | சுவா | க்ஷய திதி ஸ்ரீ நரசிம்ம ஜெயந்தி, வ்யசிரா,மாத்ருஸ்ரீதரிகொண்ட வெங்கமாம்பா ஜெயந்தி. |
| 18 | 4 | சனி | பௌ | விசா | பௌர்ணமி. வைகாசி விசாகம், ஆகாமாவை, புதன்-ரிஷபம், ஸ்ரீகூர்ம ஜெயந்தி, ஸ்ரீஅன்னமாச்சார்யா ஜெயந்தி, திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி திருத்தேர், ஸ்ரீநம்மாழ்வார் சாத்துமுறை, நகரி ஸ்ரீகரிய மாணிக்க ஸ்வாமி கருட சேவை. தேவுனி கடப்பா ஸ்ரீலக்ஷ்மி வேங்கடேஸ்வர ஸ்வாமி தெப்போத்ஸவம் நிறைவு, கீலபட்ல ஸ்ரீகோனேடி ராய ஸ்வாமி திருத்தேர். |
| 19 | 5 | ஞாயிறு | பிர | அனு | திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் வஸந்தோத்ஸவம் நிறைவு, திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி பிரம்மோத்ஸவம் அவப்ருதம், சக்கர ஸ்நானம், துவஜாவரோஹணம், கீலபட்ல ஸ்ரீகோனேடி ராய ஸ்வாமி பிரம்மோத்ஸவம் அவப்ருதம், சக்கர ஸ்நானம், துவஜாவரோஹணம். |
| 20 | 6 | திங்கள் | துவி | கேட் | ரிஷி கேஷ்-நாராயணவனம் கருடசேவை, கீலபட்ல ஸ்ரீகோனேடிராய ஸ்வாமி புஷ்பயாகம். |
| 21 | 7 | செவ் | திரு | மூல | கரிநாள். |
| 22 | 8 | புதன் | சது | பூரா | சங்கடஹர சதுர்த்தி, ஸ்ரீநிவாசமங்காபுரம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி வஸந்தோத்ஸவம் ஆரம்பம். |
| 23 | 9 | வியா | பஞ் | உத்ரா | ரிஷிகேஷ்-நாராயணவனம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி திருத்தேர். |
| 24 | 10 | வெள்ளி | சஷ் | உத்ரா | சஷ்டி ச்ரவணம், விருத்தி திதி, ஸ்ரீநிவாசமங்காபுரம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி வஸந்தோத்ஸவம் நிறைவு, ரிஷிகேஷ்-நாராயண வனம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம் அவப்ருதம், சக்கர ஸ்நானம், துவஜாவரோஹணம், நாகுலாபுரம் ஸ்ரீவேத நாராயண ஸ்வாமி புஷ்பயாகம். ஜம்மலமடுகு ஸ்ரீதேவி பூதேவி சமேத நாராபுர வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம் அவப்ருதம், சக்கர ஸ்நானம், துவஜாவரோஹணம். |
| 25 | 11 | சனி | சஷ் | திவோ | கார்வேடி நகரம் ஸ்ரீவேணு கோபால ஸ்வாமி பிரம்மோத்ஸவம் அங்குரார்ப்பணம், ஜம்மலமடுகு ஸ்ரீதேவி பூதேவி சமேத நாராபுர வேங்கடேஸ்வர ஸ்வாமி புஷ்பயாகம். |
| 26 | 12 | ஞாயிறு | சப் | அவி | கார்வேடி நகரம் ஸ்ரீவேணு கோபால ஸ்வாமி பிரம்மோத்ஸவம் ஆரம்பம், துவஜாரோஹணம். |
| 27 | 13 | திங்கள் | அஷ் | சத | |
| 28 | 14 | செவ் | நவ | பூரட் | |
| 29 | 15 | புதன் | தச | உத்ரட் | கத்திரி முடிவு கா.7ம.46நி., பாதாள மண்டபத்தில் ஸ்ரீஹனுமத் ஜெயந்தி, ரிஷிகேஷ் ஸ்ரீபார்வதி சமேத ஸ்ரீசந்திரமௌலீஸ்வர ஸ்வாமி பஞ்ஜாஹ்ணிக திருக்கல்யாண மஹோத்ஸவ அங்குரார்ப்பணம். |
| 30 | 16 | வியா | ஏகா | ரேவ | அபரா ஏகாதசி, கார்வேடி நகரம் ஸ்ரீவேணு கோபால ஸ்வாமி கருட சேவை, ஸ்ரீமஹி ஜெயந்தி. |
| 31 | 17 | வெள்ளி | துவா | அஸ் | பிரதோஷம், கரிநாள். |




# ஸப்தகிரி

சமயமாத இதழ்


வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்


**மே 2019** மலர் 49 இதழ் 12


## உள்ளுறை


| | பக்கம் |
|---|---|
| அருளிச்செயல்களில் கூர்மாவதாரம் - திரு. வளவ துரையன், கடலூர். | 7 |
| நரசிம்ம அவதார சிறப்பு - முனைவர். ஜே. விஸ்வநாதன், விழுப்புரம். | 10 |
| ஆறாம் அவதாரம் பரசுராமாவதாரம் - திரு. டி.டி. வரதராஜன், அடையார். | 13 |
| ஆழ்வார்கள் காட்டும் வாழ்க்கை நெறிகள் – 17 நம்மாழ்வாரும் திருமலையப்பனும் - திரு. எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி. | 16 |
| வடுக நம்பி அருளிய யதிராஜ வைபவம் - திரு. பி.டி. சேஷாத்ரி, சென்னை. | 20 |
| நமது திருக்கோயில் : ஸ்ரீஅழகு மல்லாரி கிருஷ்ண ஸ்வாமி ஆலயம் (மன்னாரு போலூரு) -திருமதி. பா. காயத்ரி, கேரளா. | 24 |
| பச்சை தோரணம் : ஸ்ரீபத்மாவதி ஸ்ரீநிவாச பரிணயம்!! -திருமதி. எஸ். வைஷ்ணவி, திருப்பதி. | 31 |
| அநுமனின் சரணாகதி - திரு. வி.பி. அர்த்தநாரி, கோவை. | 34 |
| ஆதிசங்கரரும் பஜகோவிந்தமும் - திரு. வி. சீதாராமன், சென்னை. | 36 |
| ஸ்ரீமத்பாகவத கதை சாகரம்–தக்ஷன் வேள்வியழித்தது - டாக்டர். சி.கோவிந்தசாமி, புத்தூர். | 39 |
| சிறார் வாக்கு : அக்ஷய திரிதியை - செல்வன். அனிருத் கிருஷ்ணன், கேரளா. | 42 |
| அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும் - உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை. | 44 |
| 108 திவ்யதேச வைபவம் – திருத்தலைச் சங்கநாண்மதியம் - உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை. | 47 |
| பகவத் கீதை–இளைய சமுதாயம் வெற்றிக்கான உயிர் நாடி - திரு. வ.ஓ. சுரேஷ், சத்திரவாடா. | 49 |
| ஆயுர்வேதம் – நாயுருவி - திருமதி. வி.உஷா, திருப்பதி. | 51 |
| 2019, மே மாத ராசி பலன் - திரு. பராசரம் பாலசுப்ரமண்யம், திருச்சானூர். | 53 |



சிறப்பு ஆசிரியர் :
**திரு. அனில்குமார் சிங்ஹால்,** ஐ.ஏ.எஸ்.,
செயலாட்சித் தலைவர், தி.தி.தே.
பிரதான ஆசிரியர் :
Dr. K.**ராதாரமணா,** எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.,
ஆசிரியர் :
Dr. V.G.**சொக்கலிங்கம்,** எம்.ஏ., பி.எச்டி.,
அச்சிடுபவர் :
**திரு. R.V. விஜயகுமார்,** பி.ஏ. பி.எட்.,
துணை செயலாட்சித் தலைவர்
(பதிப்பகம் மற்றும் அச்சகம்), தி.தி.தே.,
தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
ஓவியம் :
**திரு. P.சிவப்பிரஸாத் (ஓய்வு)**
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.
புகைப்படங்கள் :
**திரு. P.N. சேகர்**
**திரு. B. வெங்கடரமணா**



**பிரதிகளுக்கு:**
THE CHIEF EDITOR,
"Sapthagiri", T.T.D., Tirupati-517 507.
0877- 2264543, 2264363
அலைபேசி எண் : 98663 29955



நீங்கள் ஸப்தகிரி இதழை www.tirumala.org யில் பார்த்து, படித்து மகிழலாம். ஆலோசனைகள்/கருத்துக்கள்/புகார்களுக்கு
sapthagiri_helpdesk@tirumala.org



| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.5/- |
| வருடச்சந்தா | ரூ.60/- |
| ஆயுள் சந்தா | ரூ.500/- |



இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர். -பிரதான ஆசிரியர்


**அட்டைப்பட விளக்கம்**


முன்னட்டை : **ஸ்ரீபத்மாவதி ஸ்ரீநிவாச பரிணயோத்ஸவம், திருமலை.**

பின்னட்டை : **உபய நாச்சிமார்களுடன் ஸ்ரீகோவிந்த ராஜ ஸ்வாமி, திருப்பதி.**



## உங்களுடன்...

# ஆதிகுருவும் ஜகத்குருவும்



“அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு” என்கிறார் வள்ளுவர்.

அதாவது எழுத்துக்கள் “அ”கரத்தை முதலாக, அடிப்படையாகக் கொண்டிருப்பதைப் போன்று உலகம் “அ” கார வாசகனான பகவான் ஸ்ரீமந்நாராயணனை பரம்பொருளாகக் கொண்டிருக்கிறது என்பது பொருள்.

ஆதி காலந்தொட்டு ஆராதிக்கப்பட்டுவரும் அந்த ஆதிபகவானான லக்ஷ்மி நாதனை முக்கோடி தேவர்களும், முக்காலமுணர்ந்த முனிவர்களும், முத்தர்களும், நித்தர்களும், பத்தர்களும் யுகங்கள் தோறும் வணங்கி வழிபட்டு வருகின்றனர் என்றால் அதற்கு அந்த ஸ்ரீமந்நாராயணனின் கல்யாண குணங்களே காரணமாய் நிற்கிறது.

அது என்ன கல்யாண குணங்கள்? ஆம் அவ்வெம்பெருமானுக்கே உரித்தான ஸ்வாமித்துவம் அதாவது தலைவனாம் தன்மை, வாத்சல்யம் என்கிற தாயன்பு, சௌசீல்யம் என்னும் உயர்ந்தவன் தாழ்ந்தவனோடு நெருங்கி உறவாடும் தன்மை, சௌலப்யம் என்கிற எளிவந்த தன்மை, நீர்மைத்தன்மை என எண்ணற்ற கல்யாண குணங்கள் அவனுக்கு உண்டு. அக்கல்யாண குணங்களில் ஆழங்கால் பட்டவர்கள்தான் ஆழ்வார்கள் எனப்படுகிறார்கள்.

ஆழ்வார்கள் என்றாலே நம் நினைவிற்கு வருபவர், “நம்மாழ்வார்”. “ஆழ்வார்” என்றாலே அது நம்மாழ்வாரைத் தான் குறிக்கும். ஏன் அப்படி? ஆம். ஆழ்வார்களுக்கெல்லாம் தலைவர் அவர். இவ்வாழ்வார் உடலானால் மற்ற ஆழ்வார்கள் அவ்உடலின் கண், கழுத்து, கைகள் போன்ற உறுப்பாவார்கள். மற்ற ஆழ்வார்கள் திவ்விய தேசங்கள் தோறும் சென்று மங்களாசாசனம் பண்ணினால், இவ்வாழ்வாரோ இருந்த இடத்திலேயே இருந்து அத்திவ்விய தேச எம்பெருமான்களை தன்னருகே வர வைத்து மங்களாசாசனம் பண்ணினவர். மற்ற ஆழ்வார்கள் புலன் இன்பங்களுக்கு ஆளானால், இவ்வாழ்வாரோ, அப்புலன் இன்பங்களுக்கு ஆட்படாது சட வாயுவையும் அடக்கி சடகோபரானவர். அவ்வெம்பெருமானுக்கே திருவடி நிலையாகவும் இருந்து ஆலயங்களில் “சடகோபமா”கவும் திகழ்பவர். இவ்வுலகில் தம் உடலோடு பரமபதம் சென்ற பரம ஞானி. பரம யோகி ஒருவர் உண்டு என்றால் இவ்வாழ்வார் மட்டும்தான்.

எனவேதான் இவ்வாழ்வார் வைணவம் போற்றும் லக்ஷ்மிநாதனை முதலாகக் கொண்டு விளங்கும் ஆசார்ய குருபரம்பரையில், இடம் வகிக்கின்றார். இது குறித்தே “ஆதிகுருவாய்ப் புவியில் அவதரித்தான் வாழியே” என்கின்றார் அப்பிள்ளை.

வைணவ ஆலமரத்தின் வேராக இவ்வாழ்வார் திகழ்ந்தால் அதன் ஆணி வேராக சடகோபன் பொன்னடியான பகவத் இராமாநுசர் இருந்தார். நாதமுனி முதலான ஆசார்யர்கள் அவ்வாலமரத்தின் விழுதுகளாய் அமைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இது குறித்தே பட்டர் “ஆன்ற தமிழ் மறைகளாயிரமும் ஈன்ற முதல் தாய் சடகோபன் மொய்ம்பால் வளர்த்த இதத்தாய் இராமாநுசன்” எனக் குறிப்பிடுகின்றார். அதாவது ஆழ்வார் அருளிச் செயலான திவ்வியப் பிரபந்தத்தை ஈன்ற, பெற்றடுத்த தாயானால், அப்பிரபந்தத்திற்கு விளக்க உரை தந்து, பல வியாக்யான நூல்கள் வெளி வர காரணமாய் இருந்து அருளிச் செயலை வளர்த்த தாய் காரேய் கருணை இராமாநுசன். ஆக இவ்விரு மஹான்களும் சித்திரை–திருவாதிரை, வைகாசி–விசாகத்தில் முறையே ஸ்வாமி இராமாநுசரும், ஸ்வாமி நம்மாழ்வாரும் அவதரித்து வைணவத்திற்கு மட்டுமின்றி தமிழ் மண்ணிற்கே பெருமை சேர்த்துள்ளனர். இவ்வாழ்வார் ஆசாரியர்களைப் போற்றுவோம்! பகவான் திருவடிகளைப் பற்றுவோம்!!

# அருளிச் செயல்களில் கூர்மாவதாரம்

திரு. வளவ. துரையன்,
கடலூர்

தேவர்கள் அமிழ்தம் பெற வேண்டி மந்தர மலையை மத்தாகவும், வாசுகி எனும் நாகத்தைக் கயிறாகவும் கொண்டு திருப்பாற்கடலைக் கடைந்தனர். மந்தர மலையானது கடலில் அமிழ்ந்து போகாமல் பெருமாள் கூர்மாவதாரம் எடுத்துத் தன் முதுகில் அதைச் சுமந்து அருளினார்.

திருமாலை அல்லாமல் மற்றொரு தெய்வத்தை நான் மதிப்பேனா என்று திருச்சந்த விருத்தத்தில் வினா எழுப்பும் போது திருமழிசையாழ்வார் கூர்மாவதாரத்தின் பெருமையைப் போற்றுகிறார்.

“வெண்மையான பாற்கடலில் மந்தர மலையை நட்டு, வெண்மையான பற்களை உடைய வாசுகியாகிய பாம்பால் அலைகள் நெருங்கும்படி கடைந்த போதில், அம்மலையைத் தாங்க ஒப்பற்ற ஆமையாக எம்பெருமான் அவதரித்தார். மேலும் தேவர்களின் நோய் தீர்க்கும் மருந்தாகிய அமிழ்தத்தை அருளிச் செய்த வள்ளலான பெருமாளை அன்றி யான் வேறொரு தெய்வத்தைப் புகழ்வேனா? எனும் பொருளில்.

*“வெள்ளை வேலை வெற்பு நாட்டி வெள்ளெயிற் றராவளாய்*
*அள்ளலாக் கடைந்தஅன் றருவரைக்கொ ராமையாய்*
*உள்ளநோய்கள் தீர்மருந்து வானவர்க் களித்தஎம்*
*வள்ளலாரை யன்றிமற்றொர் தெய்வம் நான்ம திப்பனே?”*

– திருச்சந்தவிருத்தம் 88

சோழ நாட்டு திவ்ய தேசங்களில் ஒன்றான திருக்கண்ணபுரத்தில் எழுந்தருளியுள்ள சௌரிராஜப் பெருமாளைத் திருமங்கையாழ்வார் கண்ணாறக் கண்டு சேவிக்கிறார். அப்போது,


*“மலங்கு விலங்கு நெடுவெள்ளம்*
*மறுக, அங்கோர் வரைநட்டு*
*இலங்கு சோதி யாரமுதம்*
*எய்து மளவோர் ஆமையாய்*
*விலங்கல் திரியத் தடங்கடலுள்*
*சுமந்து கிடந்த வித்தகனை*
*கலங்கல் முந்நீர்க் கண்ணபுரத்து*
*அடியேன் கண்டு கொண்டேனே”*

–பெரிய திருமொழி 8–8–2

திருக்கண்ணபுரப் பெருமாளிடமே கூர்மாவதாரத்தையும் கண்டு மகிழ்கிறார் மங்கை மன்னன்.

“உள்ளேயுள்ள மீன்கள் தடுமாறும்படியாக, பெரிய வெள்ளம் குழம்பும்படியாக, ஆழமான அவ்விடத்தில்





ஒரு மலையை நட்டு, ஒளியோடு கூடிய அமுதமானது தோன்றும் வரையில் ஆமையாய் இருந்து அந்த மந்தர மலையானது நாற்புறமும் திரிந்து வரும்படியாக பெரிய அக்கடலிலே தாங்கிய பெருமானைத் திருக்கண்ண புரத்தில் கண்டேனே" என்று ஆழ்வார் அருள்கிறார்.

தேவர்களுக்காக அமுதமானது தோன்றும் வரை எனும் பொருளில் *''எய்தும் அளவு''* என்று குறிப்பிட்டு சேதனர் மீது பெருமாள் கொண்ட பேரன்பை இப்பாசுரம் வெளியிடுவது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

மேலும் திருமங்கை ஆழ்வார் இதே திவ்ய தேசப் பெருமாளின் பெருமையை நாம் மகிழும்படியாய் மற்றொரு வகையில் வெளியிடும் நயம் மிகவும் இன்பம் தந்து நம்மை ஆட்கொள்கிறது.

திருக்கண்ணபுரத்தில் தும்பியை விளித்து "கோல் தும்பீ! நீ மற்ற மலர்களில் எல்லாம் சென்று ஒலித்து என்ன பயன் பெறப் போகிறாய்?!

இந்த அகிலத்தின் மக்கள் எல்லாரும் வணங்குமாறு பெரிய கடலில் பெரிய ஆமையாய் திருஅவதாரம் அருளிச் செய்த திருக்கண்ணபுரப் பெருமாளின் மாலை யிலே பொருந்தியுள்ள மணம் மிக்க திருத்துழாயிலே படிந்து ஊது" என்று ஆழ்வார் புகல்கிறார்.

*''ஏரார் மலரெல்லாம் ஊதிநீ யென்பெறுதி?*
*பாரா ருலகம் பரவ, பெருங்கடலுள்*
*காராமையான கண்ணபுரத்தெம்பெருமான்*
*தாரார் நறுந்துழாய் தாழ்ந்தூதாய் - கோல்தூம்பீ!''*

– பெரிய திருமொழி 8–4–5

என்பது அவரின் அருளிச் செயலாகும்.

எம்பெருமானின் திருத்துழாய் மாலையின் அழகை திருமழிசையாழ்வார்,

*''தூய்மையோக மாயினாய்! துழாயலங்கல் மாலையாய்!*
*ஆமையாகி ஆழ்கடல் துயின்ற ஆதிதேவ''*

– திருச்சந்த விருத்தம் 14

கூர்மாவதாரத்தின் வடிவாகவே போற்றிப் புகழ் கிறார். திருமாலே நமக்கு அரண், அவரே நம்மை இரட்சிப் பவர் என்று கூறும் மங்கை மன்னர் கூர்மாவதாரத்தைக் காட்டுகிறார்.

"ஒளி பொருந்திய பற்களை உடைய வாசுகியைச் சுற்றி, எல்லாத் திக்குகளிலும், பூமிகளிலும், மேலுலகங் களிலும் உள்ள அனைவரும் அஞ்சி நடுங்கும்படியாக, பாற்கடல் குழம்பாகும்படியாகத் தேவர்கள் கடைவ தற்குப் பாங்காக, பெரிய மலை தனது முதுகில் பரந்து சுழல, அந்த மலையின் கீழே பெரியதோர் மலையாகக் கிடந்த வலிமை கொண்ட ஆமை வடிவான எம்பெருமான்" என்று அவர் போற்றும்போது மந்தர மலை யைத் தாங்கும் மற்றொரு மலை எனும் நயம் பக்திச் சுவையைப் பெருக வைக்கிறது.

*''செருமிகு வாளெயிற்ற அரவொன்று சுற்றித்*
*திசைமண்ணும்விண்ணு முடனே*

## ஸப்தகிரி எழுத்தாளர்களுக்கு ஓர் வேண்டுகோள்

ஸப்தகிரி எழுத்தாளர்களுக்கு அளிக்கும் சம்பாவணையை தங்கள் வங்கிக் கணக்கில் செலுத்த தி.தி.தே. முடிவு எடுத்துள்ளது.ஸப்தகிரி எழுத்தாளர்கள் தங்களுடைய கட்டுரையுடன் வங்கி புத்தகத்தின் முதல் பக்கம் மற்றும் வங்கியின் விவரங்களை (Your Bank A/c No., Bank Name with IFSC Code No.) இணைத்து அனுப்புதல் வேண்டும். தவறினால் உங்கள் கட்டுரை அச்சிட இயலாது.

– பிராதன ஆசிரியர்

திருமலை திருப்பதி தேவஸ்தானம்,
திருப்பதி.

**பக்தர்களுக்கு விண்ணப்பம்**

கல்யாண கட்டாவில் பக்தர்கள் தலை முடி காணிக்கை செலுத்தும்பொழுது முடி இறக்குபவர்கள் பணம் கேட்டால் அவர்களின் விவரங்களை டோல் ப்ரீ எண் : 1800-425-4141 க்கு தெரிவியுங்கள்.

– செயலாட்சித் தலைவர்

*வெருவர வெள்ளை வெள்ளம்*
*முழுதும் குழம்ப*
*இமையோர்கள் நின்று கடைய*
*பருவரையொன்று நின்று முதுகில்*
*பரந்து*
*சுழலக் கிடந்து துயிலும்*
*அருவரையன்ன தன்மை*
*அடலாமையான திருமால்*
*நமக்கோ ரரணே''*

– பெரிய திருமொழி 11–4–2

சிறிய திருமடலில் "மேகம் படர்ந்த மந்தர மலையைக் கடலில் நட்டு, வாசுகியைக் கயிறாகக் கொண்டு, அந்த மலை பெயராதவாறு ஆமை வடிவெடுத்துத் தன் முதுகில் சுமந்த பெருமான் அசுரர்களும் தானுமாய்க் கடைந்தான்'' என்று ஆழ்வார் அருளிச் செய்கிறார்.

இங்கு "தேவர்கள் கடைவதாகக் கூறாது விட்டது அவர்கள் தன்னோடு சேர்ந்தவர்கள் என்ற கருத்தினால்தான்'' என்பது ஆன்றோர் முடிபாகும்.

*"ஆராத போரில் அசுரர்களும்*
*தானுமாய்*
*காரார் வரைநட்டு நாகம் கயிறாக*
*பேராமல் தாங்கிக் கடைந்தான்....''*

– சிறிய திருமடல் 47

நான்முகன் திருவந்தாதியில்

*''மலை ஆமை மேல் வைத்து வாசுகியைச் சுற்றி*
*தலை ஆமை தான் ஒருகை பற்றி - அலையாமல்*
*பீறக் கடைந்த பெருமான் திருநாமம்*
*கூறுவதே யாவர்க்கும் கூற்று''*

– நான்முகன் திருவந்தாதி 49

என்று திருமழிசையாழ்வார் கூர்மாவதாரத்தைச் சேவிக்கிறார். ஆமையாக அவதரித்து மலையைத் தாங்குவதோடு, தானே மலையின் உச்சியை ஒரு கையால் பிடித்து அமுக்கி நீர் வெளியில் மலை புரளாமல் அமுதம் புறப்படும் படியாகக் கடைந்த பெருமான் புகழைப் பாட அவரது திருநாமங்களைப் பாடுவோம் என்பது ஆழ்வாரின் பெரு விருப்பமாகும்.

மேலும் திருமழிசைப்பிரான் பெருமாளின் இரு வேறு நிலைகளையும் போற்றித் துதிக்கிறார். அநாதி காலமாய்க் கடல் நீரிலே சிறிதும் கூசாமல் ஆதிசேடனைப் படுக்கையாக விரித்து, பரமன் முதலான தேவர்கள் தோத்திரம் செய்து பாடும்படி கண் வளர்ந்தருள்வது ஆற்றல் மிக்க நிலையாகும்.

ஆனால் அத்தேவர்கள் கடல் கடைந்தபோது வருண பாசங்கள் கிடக்கின்ற கடலிலே வாழ்கின்ற எளிய உயிரினமாகிய ஆமையாகப் பிறந்து அருள்வது சௌலப்பியம் எனும் நீர்மை நிலையாகும். பாசம் நின்ற நிலை பரமபதத்தைக் காட்டிலும் ஏற்றது. இம்மறை பொருளையெல்லாம் திருச்சந்த விருத்தப் பாசுரம் விளக்கி அருளிச் செய்கிறது.

*''கூசமொன்றுமின்றி மாசுணம்படுத்து, வேலைநீர்*
*பேசநின்ற தேவர்வந்து பாடமுன்கிடந்ததும்*
*பாசம் நின்ற நீரில் வாழு மாமையான கேசவா!*
*ஏசஅன்று நீகிடந்த வாறுகூறு தேறவே''* – திருச்சந்த விருத்தம் 20.

இவ்வாறு ஆழ்வார் பெருமக்கள் பெருமாளின் கூர்மாவதாரத்தின் மேன்மையை, சௌலப்யத்தை நமக்கு அருளிச் செய்துள்ளார்கள்.


திருமலை திருப்பதி தேவஸ்தானம்

**தானத்தில் சிறந்தது அன்னதானம்**

- அன்னம் பரபிரம்ம வடிவம் தயவு செய்து வீணாக்காதீர்கள்.
- அனைத்து பக்தர்களுக்கும் அன்னப்பிரசாதம் எளிதில் கிடைக்கிறது.
- குழந்தைகள்/பெண்களுக்கு முதலிடம் அளியுங்கள்.
- கைக்குழந்தைகளுக்கு தேவையான பால் எப்பொழுதும் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பால் தேவைப்படுபவர்கள் வைகுண்டம்-2 அன்னப்பிரசாதம் அலுவலகத்தை அணுகி பெற்றுக் கொள்ளுங்கள்.

*இறைவனின் சேவையில் பக்தர்கள்; பக்தர்களின் சேவையில் தி.தி.தே.*

# நரசிம்ம அவதார சிறப்பு

முனைவர் ஜே. விஸ்வநாதன்,
விழுப்புரம்

யார் தன்னை உபாசிக்கிறார்களோ அவர்களுக்குப் பலனை கொடுக்கக்கூடியவன் நரசிம்மன்.

“அடித்த கை பிடித்த பெருமான்” என்று பெயர் அவனுக்கு. “எங்கடா!” என்று அடித்துக் கூப்பிட்டால் “இதோ” என்று தம் கையைப் பிடித்துக் கொள்வான். வேறு எந்த அவதாரத்திலாவது இந்த அதிசயம் உண்டா?

அப்படிப்பட்டவனை வெறும் உக்ர ரூபியாக இல்லாமல், லக்ஷ்மியோடு கூடிய லக்ஷ்மி நரசிம்மனாக நாம் உபாசிக்க வேண்டும். ஈச்வரனே ஆச்சர்யமாய் நரசிம்மனை உபாசிக்கும்படியான மந்திரத்தைச் சொல்கிறார். அதை யார் தினமும் சொல்கிறார்களோ அவர்களுக்கு ஆரோக்யம், வித்யை, செல்வம் எல்லாம் சம்பவிக்கும்.

முக்கண்ணனே முக்கண்ணனின் பெருமையைச் சொல்லும் இந்த ஸ்தோத்திரம் “அஹிர் புத்ரிய சம்ஹிதை” என்பதில் உள்ளது.



எனவே எல்லா அவதாரங்களிலும் சிறந்தது “நரசிம்ம அவதாரம்” எனக் கொள்ளலாம். நரசிம்ம அவதாரம் எதனால் ஏற்பட்டது என்று கேட்டால், ஹிரண்ய கசிபுவை சம்ஹரிப்பதற்காக ஏற்பட்டது என்று சாதாரணமாய் பதில் கிடைக்கும்.

ஆனால், ஹிரண்ய சம்ஹாரத்துக்காக மட்டும் ஏற்பட்டது அல்ல இந்த அவதாரம். சரி, பிரஹலாதனை ரக்ஷிப்பதற்காக ஏற்பட்டதா இந்த அவதாரம்? என்றால் அதுவும் இல்லை.

*“அக்னியில் தூக்கிப் போடும் போதும்,*
*மலையிலிருந்து உருட்டும் போதும்,*
*சமுத்திரத்தில் எறிந்த போதும்,*
*யானையைக் கொண்டு இடறச் செய்யும் போதும்,*
*விஷப்பாம்புகளுக்கிடையே விட்டபோதும்,*
*விஷத்தை அருந்தச் சொன்ன போதும்,*
*பிரஹலாதனை யார் ரக்ஷித்தார்கள்...?*

அப்போதெல்லாம் அவதரிக்காத நரசிம்மன், பிரஹலாதனின் வார்த்தையைக் காப்பாற்றத்தான் அவதரிக்கிறான்!

*“எங்கும் உளன் கண்ணன் என்ற மகனைக் காய்ந்து*
*இங்கில்லையால் என்று இரணியன் தூண்புடைப்ப*

*அங்கு அப்பொழுதே அவன் வீயத்தோன்றிய என்*
*சிங்கப்பிரான் பெருமை ஆராயும் சீர்மைத்தே?"*

என்ற பாடலுக்கிணங்க... "எங்குமுளன் கண்ணன்" "அவன் இல்லாத இடம் கிடையாது" என்று பிரஹலாதன் சொன்னபோது அதை உண்மையாக்க பரமாத்மா அவசர திருக்கோலம் பூண்டு சர்வ பதார்த்தங்களிலேயும் நிறைந் தான்.

நினைத்த மாத்திரத்தில் எடுத்த அவதாரம், அவசரத் திருக்கோலம் என்றாலும் அதுதான் மிகவும் அழகாக அமைந்திருந்தது. பிரஹலாதனின் வாக்கை மட்டுமின்றி, பிரும்மாவின் வாக்கையும் காப்பாற்ற எடுக்கப்பட்டது நரசிம்ம அவதாரம்.

ஹிரண்யகசிபுவுக்கு எசகுபிசகான நிபந்தனைகள் அடங்கிய வரத்தைக் கொடுத்தவர் அவர்தானே... வாக்கு மீறப்பட்டால் பிரும்மாவின் வரம் செல்லாது என்று ஆகி விடும். அப்புறம் யாராவது பிரும்மாவை ஸ்தோத்திரம் பண்ணுவார்களா?


பிரும்மாவிற்கு ஏற்கனவே ஸ்தோத்திரமும், கோயில்களும் குறைவு. இந்த நிலையில் பகவான் அவரை மதிக்கவில்லை எனில்... வேறு யார் மதிப்பார் கள்? அதனால் தான் பிரும்மாவின் வாக்கைக் காப்பாற்ற "நரசிம்ம அவதாரம்" எடுத்தார்.

நாராயணன் நாபியிலிருந்து உருவானவர் நான்முகன் பிரும்மா. அவன் நாபிக் கமலத்தில் தான் அமர்ந்திருப்பதை உணர்வதற்கே அவனுக்கு நிறைய நாட்களாயிற்றாம்! ஆயிரம் கோடி யுகங்கள் தவம் பண்ணி, நாராயணனே தமக்கு மூலம் என்று உணர்ந்தான் பிரும்மா! அந்த தேவதைக்கு ஒரு அகௌரவம் வந்து விடக் கூடாது என்ற பரிவினால் அவன் கொடுத்த வரத்துக்கு எந்த வித பங்கமும் இல்லாமல், அவதரித்தார் பகவான். எத்தனை காருண்யம் பாருங்கள்!

பொய்யில்லாத பெருமான் யாரென்றால் "நரசிம்மன்" தான். அழைத்தவுடனே வந்து ரக்ஷிக்கக் கூடியவன்.

ராமாவதாரத்திலேயும் மாரீசன் ராமனை "நரசிம்மா" என்று அழைக்கிறான்.

ஆஞ்சநேயரும் இலங்கையிலே சீதா தேவியிடம் அம்மா நீங்கள் ஏன் அழுகிறீர்கள்? என் முதுகிலே ராமன் வருவார். "நரசிம்மனை"ப் போல் வருவார் என்கிறார்.



மகாபாரத சாரமான விஷ்ணு சஹஸ்ர நாமத்தில், விச்வ சப்தத்தினாலே, "விச்வயோனி" என்று நரசிம்மனை காட்டினதாலே... நரசிம்மன்தான் விஷ்ணு சஹஸ்ர நாமத்தின் சாரம் எனக் காட்டியிருக்கிறார்கள்.

விஷ்ணு சஹஸ்ரநாமம் முழுவதுமே பாரதத்தின் சாரம் என்பதாலே மகாபாரதம் மொத்தமும் நரசிம்ம னையே கொண்டாடுகிறது.

ஸ்ரீநிவாஸன்–பத்மாவதி கல்யாணத்திலே – ஸ்ரீநிவாச னிடத்தில் கேட்கிறார்கள் உணவை யாருக்கு நிவேதனம் செய்து விட்டுப் பரிமாறுவது என்று? அதற்கு ஸ்ரீநிவாச னும் "அஹோபில க்ஷேத்திரத்திலே உள்ள நரசிம்மனுக்கு நிவேதனம் செய்து உணவு விநியோகிக்கட்டும்" என்று சொல்கிறார்.

அதனால் தான் ஸ்ரீநிவாஸர் நரசிம்மருக்கு கை கூப்பி வணங்குவதை இன்னமும் அஹோபில க்ஷேத்திரத்திலே பார்க்கலாம்.

ஸ்ரீராமனாலும், ஸ்ரீநிவாஸ பெருமாளினாலும் வணங்கப்பட்டவர் என்பதாலே "நரசிம்மனை"ப் பெரிய பெரிய பெருமாள் என்று அழைக்கப்படலாயிற்று.

வேகத்தைப் போல், கருணையும் தயையும் அதிகம் இந்த அவதாரத்திலே!

*"அளந்திட்ட தூணை அவன்தட்ட ஆங்கே*
*வளர்ந்திட்டு வாளுகிர்ச் சிங்க உருவாய்*
*உளந்தொட்டு இரணியன் ஒண்மார் வகலம்*
*பிளந்திட்ட கைகளால் சப்பாணி...."*

என்று பெரியாழ்வார் பாடுகிறார்.



அளந்திட்ட தூண்! தங்கச் செங்கல் கொண்டு ரத்தி னங்கள் இழைத்த ஸ்தம்பமாம் அது! குழந்தை பிரஹலா தனை இழுத்து வந்து, பிரத்யேகமாய் அதைக் காட்டி கேட்டானாம் ஹிரண்யன். தானே அருகில் இருந்து கட்டு வித்த தூணில் நாராயணன் இருக்க முடியாது என்கிற தீர்மானம் அவனுக்கு!

"ஏன் இருக்க முடியாது?" என்று கேட்டான் குழந்தை பிரஹலாதன். உடனே அந்த இடத்திலிருந்து ஆவிர்பவித் தான் பரமாத்மா. சிம்ஹமர்ய – நரம் கலந்த சிம்மமாய்த் தோன்றினான்.

*''ஆடியாடி அகம் கரைந்து இசை*
*பாடிப்பாடிக் கண்ணீர் மல்கி எங்கும்*
*நாடிநாடி நரசிங்கா! என்று*
*வாடி வாடும் இவ்வாணுதலே''*

என்று நம்மாழ்வார் பாடுகிறார்.

பகவானுடைய நேத்திரத்திலிருந்தே சூரியன் உண் டானான் என்று புருஷ சூக்தம் சொல்கிறது. இப்படி பக வானின் நேத்திரத்திலிருந்து தோன்றியவனே அவனுக்கு வலது நேத்திரமாய் இருக்கிறான். சூரியனை ஆராதித் தால் ஆரோக்கியம் வாய்க்கும் என்கிறது சாஸ்திரம்.

அப்படிப்பட்ட சூரியன், நரசிம்மனின் வலது திருநேத்திரமாய் இருக்கிறான் என்றால்... பகவான் அந்த திருநேத்திரத்தினால் நம்மை கடாக்ஷிக்கும் போது ஞான மும், ஐச்வர்யமும், அன்னமும் நமக்கு சங்கல்பிக் கின்றன. எனவே தான் நரசிம்ம தியானத்துக்குள்ளே சூரியனும் அடங்கி விடுகிறான்.

நரசிம்மனின் திவ்ய திருநேத்திரம் சந்திரன்!

தன்னுடைய திவ்ய மனோகர ரூபத்தினாலே எல் லோரையும் ஈர்ப்பவன். சின்னக் குழந்தை முதல் முதி யோர் வரை அத்தனை பேரையும் ஈர்ப்பவன். "சந்த மாமா ராவே", "நிலா நிலா ஓடி வா!" என்று எல்லா மொழிகளிலும் விளையாட்டுப் பாடல்களால் வரவேற்கப்படுகிறான்.

சந்திரன் என்ன கொடுக்கிறான்? கன்றுடன் கூடிய பசுவைக் கொடுக்கிறான். பாலை பொழியக் கூடிய பலத்தையும், புஷ்டியையும் தர வல்ல... *''வாங்க குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்!''* சந்திர அனு கிரஹத்தினாலேதான் அது கிடைக்கும்.

மூன்றாவது நேத்திரம் அக்னி. அக்னிக்கு வித்வான் என்று பெயர். வித்வான் என்றால் வழிகாட்டி. "நல்ல மார்கத்திலே என்னை அழைத்துப் போ.

என்னிடத்திலே இருக்கக்கூடிய பாவக்குவியலைப் போக்க வழிகாட்டு" என்று அக்னியை வேண்டுகிறது உபநிஷத் மந்திரம்.

நல்வழிப்படுத்தக்கூடியவன் அக்னி. அனைத்தை யும் கொடுக்கக்கூடியவன். யார் துதித்தாலும் ஐச்வர் யத்தைக் கொடுக்கக்கூடியவன். இப்படிப்பட்ட வரங் களை அருளக் கூடிய அக்னியானது பகவானுடைய மூன்றாவது திருநேத்திரம்.

சூரியன், சந்திரன், அக்னி என்ற மூன்று கண்களை உடையவன். ஆதலினாலே *''தபன இந்து அக்னி நயன: ''* என்று "நரசிம்மனை"ச் சொல்லி ஆராதிக்கிறோம்.

சாச்வதமான நித்யானந்தத்தை அடைய வேண்டும் என்றால் நரசிம்மனை உபாசனை செய்ய வேண்டும். யார் தன்னை உபாசிக்கிறார்களோ அவர்களுக்கும் பலனைக் கொடுக்கக் கூடியவன் "நரசிம்மன்".

நரசிம்மனைப் பார்த்து, "ஸ்ரீநரசிம்மாய நம:" என்று ஒரு புஷ்பத்தைப் போட்டு அர்ச்சனை செய்ய முடியும்! அந்த நரசிம்மனை தியானம் செய்ய முடியும்! அப்படி தியானம் பண்ணி விட்டால் எல்லா பிரும்ம வித்தையும் கிடைத்த பலன் நமக்கு உண்டாகும்.

திருமாலின் முதன்மையான அவதாரங்கள் பத்து என்பர் சான்றோர். அவையாவன : மச்ச, கூர்ம, வராஹ, நரசிம்ம, வாமன, பரசுராம, ராம, பலராம, கிருஷ்ண, கல்கி என்பனவாகும். திருமாலின் இப்பத்து அவதாரங்களுள், ஆறாவது அவதாரமாக விளங்கும் பரசுராம அவதாரத்தின் மேன்மைதனைப் பல்வேறு புலவர்கள் பல்வேறு காலங்களில் தமது ஏடுகளில் சிறப்பாகக் கூறியுள்ளார்கள். குறிப்பாக, ஆழ்வார்கள் தம் அருளிச் செயல்களான திவ்யப் பிரபந்தங்களில், பரசு ராம அவதாரத்தை பகவான் எடுத்ததற்கான நோக்கத்தையும், அவ்வவதாரச் சிறப்பு பற்றியும் விரிவாக உரைத்துள்ளார்கள். அவற்றுள் சிலவற்றை மட்டும் எடுத்தியம்புவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**அவதாரத்தின் பொருள் :**

மிகச் சிறந்து விளங்கும் வைணவக் கோட்பாட்டின் அடிப்படையில், அவதாரத்தின் பொருளை உள்ளவாறு அறிதல் மிகவும் ஏற்புடையதாயிருக்கும். இதன்படி “அவதாரம்” என்ற சொல்லுக்கு, பகவான் தன் உத்தமமான பரமபதத்திலிருந்து உலக மக்களையும் மற்றும் அனைத்து ஜீவன்களையும் காக்கும் பொருட்டு தான் ஏதோ ஒரு உருவம் கொண்டோ, அல்லது பூமியில் ஒரு கருவாக உருவாகியோ, “கீழிறங்கி வருதல்” என்ற பொருளைக் கொள்ளலாம்.

**அவதாரத்தின் பயனாவது :**

பகவத் கீதையில் பகவான் ஸ்ரீகிருஷ்ணன் தன் அவதார ரஹஸ்யத்தை அத்யாயம் நான்கில் இரண்டு சுலோகங்களில் வெளிப்படுத்துகின்றார். சுலோகம் 7ன் பொருள்: “எப்போதெல்லாம் தர்மத்திற்குக் குறைவும், அதர்மத்தின் ஓங்குதலும் ஏற்படுகின்றனவோ, அப்போதெல்லாம் நான் என்னை, மக்கள் முன்னே காணக்கூடிய உருவத்துடன் தோற்றுவித்துக் கொண்டு வெளிப்படுகிறேன்.” சுலோகம் எட்டின் பொருளாவது: “சாதுக்களைக் கடைத்தேற்றுவதற்காகவும், பாவச் செயலைச் செய்பவர்களை அழிப்பதற்காகவும், தர்மத்தை நன்கு நிலைநாட்டுவதற்காகவும், நான் யுகந்தோறும் வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறேன்.”

ஆக, உலக உயிரைக் காத்தருளும் இறைமைத் தத்துவத்தின் குறியீடாகவும், கடையனுக்கும் கடைத்தேற்றம் காட்டும் நிலையாகவும் திருமாலின் அவதாரம் நிகழ்கிறது என்பதே வைணவ சமயத்தின் அவதாரக் கொள்கையாகும்.

மேலும் ஒரு சிறப்பு இங்கு தொக்கி நிற்கிறது. அதாவது, திருமாலின் அவதார நிகழ்ச்சியானது தம் அடியவனைக் காக்கும் பொருட்டேயாதலால், அவன



# ஆறாம் அவதாரம் பரசுராமவதாரம்

திரு. டி.டி. வரதராஜன், அடையார்

டியவர்களுக்கு இடையூறாக இருக்கும் துஷ்டர்களை யும் அது சமயம் அழிப்பதும் அவனது மற்றொரு செயலாகிறது.

**பாஞ்சராத்ர ஆகமம் கூறும் அவதார எண்ணிக்கை :**

வைணவ நெறியாக விளங்கும் பாஞ்சராத்ர ஆகமத் தில் அஹிர்புதந்ந்யை சம்ஹிதையில் திருமாலின் அவதாரங்கள் முப்பத்தொன்பது என்று கூறப்பட்டுள் ளன. எனினும் திருமாலின் முதன்மையான பத்து அவதாரங்களும் காட்டப்பட்டுள்ளன.

**பரசுராம அவதாரத்தின் தோற்றமும் சிறப்பும் :**

மஹாவிஷ்ணு எடுத்த பத்து அவதாரங்களுள் ஒவ்வொன்றும் ஓர் சீரிய நோக்கம் உட்கருத்தாக கொள் ளப்பட்டுள்ளது. உதாரணமாக, முதல் அவதாரமான மச்சத்தின் நோக்கம் நான்கு வேதங்களைக் காக்கும் பொருட்டே என்றும், இரண்டாவதான கூர்மம் தேவர்கள் சாகாநிலையை உண்டாக்கும் அமுதம் பெற உதவியாகத் திருப்பாற்கடலைக் கடைந்த காலத்து, மேரு மலையைத் தாங்கிப் பிடிக்க ஹேதுவாக ஆமை வடிவமும், இரணி யாக்ஷன் என்ற அசுரனிடமிருந்து பூமியைக் காக்க பன்றி உருவம் எடுத்ததும் அறிய முடிகிறது. இவ்வாறாக, பரசுராம அவதார நோக்கமாவது, நீதி மறந்த மன்னர் களைப் பூண்டோடு அழிப்பதற்காகவே என்று காட்டப் பட்டுள்ளது.

**பரசுராம அவதாரக் கதைக்குறிப்பு :**

விஷ்ணுவின் தசாவதாரங்களில், முதல் ஐந்து அவதாரங்கள் யாவும், அவை கொண்ட வடிவால் (மீன், ஆமை, பன்றி, நரசிம்மம், வாமனன்) பெயர் பெற்றவை யாய் இருக்க, பரசுராம அவதாரமோ, தன் கையில் ஏந் திய படையால் (பரசு–கோடரி) பெயர் பெற்றது எனலாம்.

பரசுராம அவதாரம் என்பது திருமாலின் ஆறாவது அவதாரமாகும். இவ்வவதாரம் பாரத தேசத்தில், தற்போதைய கேரள மாநிலத்தில் தோன்றியபடியால், இன்றும் கேரள மாநிலம் "பரசுராம க்ஷேத்ரம்" என்றே போற்றியழைக்கப்படுகிறது. "பரசுராமன்" என்ற பெயரை யும் பல குடும்பங்களில் தம் குழந்தைகளுக்கு இட்டு அழைக்கிறார்கள்.

ஸப்த ரிஷிகளுள் ஒருவரான ஜமதக்னி முனிவருக் கும் அவரின் மனைவியான ரேணுகா தேவியின் கடைப் பிள்ளையாக அந்தணர் குலத்தில் அவதரித்தவர் திருமா லின் அம்சமாகிய பரசுராமர். இவர் அந்தண குலத்தில் தோன்றினாலும், ஆயுதங்களைப் பயன்படுத்துவதில் மிகுந்த ஈடுபாடு கொண்டு, குறிப்பாக "கோடாரி" என்னும் ஆயுதத்தைத் தன்னிடம் காப்பாகக் கொண்டதால், "பரசு ராமன்" எனும் பெயருடன் விளங்கினார். சிவதவம் புரிந்து சிவனிடமிருந்து கோடரியும், மற்றைய ஆயுதங்களையும் வரமாகப் பெற்றார்.

ஹேஹே ராஜ்ஜியத்தின் கொடுங்கோலரசனாக விளங்கிய கார்த்தவீரார்ஜுனன், பேராசையின் காரண மாக ஜமதக்னி முனிவரிடம் இருந்த காமதேனுப் பசுவை யும் அதன் கன்றையும் தன் ராஜ்ஜியத்திற்கு ஓட்டிச் சென் றதை அறிந்த பரசுராமன் கார்த்தவீரார்ஜுனனைக் கொன்று, பசுவையும், கன்றையும் திரும்ப தம் ஆச்ரமத் துக்கு ஓட்டி வந்தார்.

தன் தந்தையைக் கொன்ற பரசுராமனைப் பழி வாங்கும் நோக்கத்துடன் கார்த்த வீரார்ஜுனனின் மக்கள், பரசுராமன் இல்லாத நேரத்தில் ஆச்ரமம் புகுந்து ஜமதக்னி முனிவரை வெட்டிக் கொன்றார்கள்.

ஆச்ரமம் திரும்பிய பரசுராமன் தன் தந்தை கார்த்தவீரார்ஜுனனின் மக்களால் கொல்லப்பட்டதை யும், தன் தாயான ரேணுகா தேவி வாய் பேச முடியாமல், 21 முறை தன் வயிற்றில் வேதனை தீர அடித்துக் கொண்ட செயலைக் கண்ணுற்ற பரசுராமன், க்ஷத்ரிய குலத்தையே பூண்டோடு அழிக்க சபதமேற்று இருபத்தோரு தலை முறைக்கு அழித்தானாம்.

**அருளிச் செயலில் பரசுராம அவதாரக் குறிப்பு கள் :**

திருமங்கையாழ்வார் தம் பெரிய திருமொழியில் (8–8–10) பத்து அவதாரங்களையும் ஒன்றாகக் குறிப் பிட்டுள்ளது அதிசயிக்க வைக்கிறது.

*"மீனோடு ஆமை கேழல் அரிகுறளாய்*
*முன்னுமிராமனாய்த் தானாய் பின்னுமிராமனாய்த்*
*தாமோதரனாய்க் கற்கியுமானான் தன்னை"*

*"இரு நில மன்னர் தம்மை இரு நாலும் எட்டும் ஒரு நாலும் ஒன்றும் உடனே*
*செருநுதல் ஊடு போகி அவராவிமங்க மழுவாளில் வென்ற திறலோன்*
*பெருநிலமங்கை மன்னர் மலர் மங்கை நாதர் புலமங்கை கேள்வர் புகழ்சேர்*
*பெருநிலமுண்டுமிழ்ந்த பெருவாயர் ஆகி அவர் நம்மையாள்வார் பெரிதே"*

–பெரிய திருமொழி 11.4.6

*"கோக்குல மன்னரை மூவெழுகால் ஒரு கூர்மழுவால் போக்கிய தேவன்..."*

– ராமாநுச நூற்றந்தாதி 56

# வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 33

**இடமிருந்து வலம்**

1. சிவ வாக்கிய சித்தராக இருந்து பின் னாளில் ஆழ்வாராக மாறியவர்.....(9)
4. சகல உலகங்களையும் ஒளி பெறச் செய்பவன் .....(4)
8. கருடனின் தாய் பெயர்....(3)
11. பசுவின் பாலில் வாசம் செய்யும் தெய்வம்.....(5)
13. பித்ருக்களுக்கான வழிபாடு செய்யா விட்டால் ....(6) தோஷம் ஏற்படும்.
15. யானையின் உடலில் லட்சுமி வீற்றிருக்கும் இடம்.... (5).
18. பெருமாளின் வலது கையில் ...... இருக்கும் (5).
19. விஷ்ணுவை சரணடைந்து பக்தி செலுத்துவதை....(7) என்பர்.
21. அதர்வண வேத சாரமாக நம்மாழ்வார் அருளியது....(9)
22. உபநிஷதங்களில் மிகவும் சிறி யது...(11)

**வலமிருந்து இடம்**

5. ...(6)அருளாசியுடன் அவதரித்தார் அனுமான்.
6. பேயாழ்வார் ....(5) என்னும் வாளின் அம்சமாவார்.
7. ஆடி வளர்பிறை ஏகாதசியின் பெயர்....(3)
10. உலகிலேயே இரட்டை ஆஞ்சனேயர் உள்ள தலம்....(5)
12. ஸ்ரீரங்கம் தலத்தின் தல விருட்சம்...(3)
16. பசு தானத்திற்கு மற்றொரு பெயர்....(4)
18. பெருமாளின் இடது கையில் ....(3) இருக்கும்.

**மேலிருந்து கீழ்**

2. கண்ணன் தசாவதாரத்தில் ......(6) அவதாரம்.
3. குந்தியின் தகப்பன் பெயர்.....(6)

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | | | ■ | 2 | 3 |
| 4 | | | | | | | | 5 | | | |
| ■ | | | | | 6 | ■ | ■ | | | | |
| | | 7 | | ■ | 8 | | | | 9 | | |
| | ■ | | | | | 10 | ■ | | ■ | | |
| 11 | | | | | | | 12 | 24 | | | |
| | ■ | ■ | 13 | | | | | | | ■ | |
| 14 | 15 | | | | | | | 16 | | 17 | |
| | | 18 | | | | | ■ | ■ | | | |
| ■ | 19 | | 25 | | | | | ■ | 20 | | |
| 21 | | | | | | | | | ■ | | |
| 22 | | | | | | | | | | | 23 |

தொகுப்பு : திரு. எஸ். ராஜகுமார், சென்னை.

விடைக்கு 50 ம் பக்கம் பார்க்க

17. நாதமுனிகளால் திவ்ய பிரபந்தத்தை ராக தாளங்களுடன் பாடும் அரையர் சேவை தொடங்கப்பட்ட க்ஷேத்திரம்......(5)

**கீழிருந்து மேல்**

09. கருமை நிறம் கொண்ட பசுவின் பெயர்....(3)
14. புரட்டாசி மாத தேய்பிறை ஏகாதசியின் பெயர்....(5)
20. அனுமன் ராமனை சந்தித்த இடம்....(5)
23. ராவணனின் தங்கை.....(6)
24. வல்லப தேவ பாண்டியனிடம் பொற்கிழி பெற்ற ஆழ்வார்...(6)
25. பக்த என்ற அடைமொழியோடு அழைக்கப்படும் பக்தன்....(9)

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

**ஸப்தகிரி வாசகர்களுக்கு விண்ணப்பம்**

உங்கள் வாழ்க்கையில் நடந்த திருவேங்கடவன் லீலைகள், துணுக்குகள், சிறார் எழுதும் கதைகள், கட்டுரைகள், குறுக்கெழுத்துப் புதிர்கள் வரவேற்கப்படுகின்றன. சந்தேகங்கள் தெளிதல் பகுதிக்கான ஆன்மீக சந்தேகங்கள் வரவேற்கப்படுகின்றன.

–பிரதான ஆசிரியர்

ஆழ்வார்கள் காட்டும் வாழ்க்கை நெறிகள் – 17

# நம்மாழ்வாரும் திருமலையப்பனும்



– திரு. எஸ். கோகுலாச்சாரி,
புவனகிரி.

ஆழ்வார்கள் பன்னிருவர். அதில் தலையானவர் நம்மாழ்வார். நம்மாழ்வார் என்கிற திருநாமம் அவர் ஒருவருக்கே உண்டு. அது அவருடைய ஏற்றத்தால் ஏற்பட்டது.

*"நம்பெருமாள் நம்மாழ்வார் நம்பிள்ளை நஞ்சீயர்*
*என்பர் அவரவர் தம் ஏற்றத்தால்"*

என்று உபதேசரத்தின மாலையில் (உ.ர.மா.50) மணவாளமாமுனிகள் குறிப்பிடுகின்றார்.

நம்மாழ்வார் அவதரித்த நட்சத்திரம் விசாகம். மாதம் வைகாசி. திருத்தலம் திருக்குருகூர் (ஆழ்வார் திருநகரி). நான்கு வேதங்களுக்கு நிகராக நான்கு நூல்களைப் பாடி இருக்கிறார். அப்படி பாடிய நூல்களில் சிறந்தது சகல வேத சாரமான திருவாய்மொழி. இதற்கு இணையான ஒரு நூல் இல்லை. *"உண்டோ திருவாய்மொழிக்கு ஒப்பு?"* என்று திருவாய்மொழியின் ஏற்றத்தையும், ஆழ்வார் ஏற்றத்தையும் இரண்டு பாசுரங்களால் விவரிக்கின்றார் மண வாள மாமுனிகள்.

நம்மாழ்வார் பாடிய திருவாய்மொழியும் அதன் உரையும் பகவத் விஷயம் என வழங்கப்படுகிறது. திருவாய்மொழி **துவய மஹா மந்திரத்தின்** விரிவு என்றே ஆசாரியர்கள் விளக்கியருளியிருக்கின்றனர்.

துவய மகா மந்திரம் 25 எழுத்துகளால் ஆனது. இரண்டு வாக்கியங்கள். தகுதி உடையோருக்கும், தக்க நெறி உடையவருக்கும் மட்டுமே சொல்ல வேண்டும் என்றார் திருக்கோட்டியூர் நம்பி. ராமானுஜருக்கு இம்மஹா மந்திரத்தைத் தரும்போது தகுதியற்ற யாருக்கும் இதனை சொல்லி விடாது இருக்க சத்தியம் வாங்கிக் கொண்டார். மந்திர ரத்னமான துவய அனுசந்தானமே உயிருக்கு ஒரே பாதுகாப்பு என்பது இராமாநுஜரின் உறுதியான நிர்ணயம்.

எவனொருவன் இவ்வுலக பந்தத்திலிருந்து விடுபட்டு, வாழ்ந்து, அவ்வுலகமாகிய மோட்சத்தை அடைய விரும்புகின்றானோ அவனுக்கு முமூட்சு என்று பெயர். அதாவது மோட்சத்தில் விருப்பம் உடையவன். அதற்குத் தடையாக இருப்பது மற்ற உலக ஆசைகள்.

அதனால் தான் வேறு ஆசைகளைக் கொடுக்காதே; *"மற்றை நம் காமங்கள் மாற்று"* என்று பகவானிடம் வேண்டினாள் ஆண்டாள். அவனுக்கு வேறு பற்றுக்கள் கூடாது. எம்பெருமானே புகல் என்று பற்ற வேண்டும். தனக்கு அவன் மோட்சம் தருவான் என்ற நம்பிக்கை வேண்டும். அதை அடையும் எண்ணம் வேண்டும். அது வரை திவ்ய தேசங்களைச் சேவிக்க வேண்டும். அங்கங்கே பாகவதர்களோடு சேர்ந்து பகவத் விஷய அனுபவம் பெற வேண்டும். வேதகப்பொன் அல்லவா இவர்கள் தொடர்பு. இந்த பாகவத அனுபவம் அவன் குறைகளைப் போக்கி குணங்களை ஒளிபெறச் செய்யும்.

எல்லாவற்றுக்கும் மேலாக ஆசாரியனிடத்தில் அபிமானம் வேண்டும். "ஆசாரிய அபிமானமே உத்தார

கம்". இப்படி இருக்கும் அதிகாரிக்குதான் மூல மந்திரங்கள் மூன்றும் வசப்படும். அது வசப்பட்டால்தான் வானம் (மோட்சம்) வசப்படும்.

அதாவது மோட்சத்தில் ஆசையுள்ளவன் அறிய வேண்டிய மந்திரங்கள் மூன்று. இதனையே ரகசிய த்ரையம் (இரகசியம்–மந்திரங்கள், த்ரையம்–3) என்பார்கள்.

1) திருமந்திரம், 2) துவயம், 3) சரம சுலோகம். இம் மூன்று மந்திரங்களும் வேத உபநிடதங்களின் சாரம். இவை ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. தனிச் சிறப்பும் கொண்டவை. உதாரணமாக, **"திருமந்திரம் ஆன்மாவால் பேறு கிடைக்கும் என்கிறது. சரம சுலோகம் ஈஸ்வரனால் பேறு கிடைக்கும் என்கிறது. துவய மகா மந்திரமும் பெரிய பிராட்டியாராலே பேறு"** என்று ஆழமாகப் போகிறது.

துவய மஹா மந்திரத்தின் பொருள் "தீர்க்க சரணாகதி". அதுவே "திருவாய்மொழி". துவயார்த்தம் தீர்க்க சரணாகதி என்பது ஸார ஸங்கிரகத்திலே, என்பர் அழகிய மணவாள பெருமாள் நாயனார். ("ஸார ஸங்கிரகம்" பிள்ளை லோகாச்சாரியார் எழுதிய ரகசிய நூல்.)

இந்தத் தீர்க்க சரணாகதியைத் தான் பேசுகிறது திருவாய்மொழி. திருவாய்மொழி துவயத்தின் பத்து அர்த்தங்களையும் ஒவ்வொரு பத்துக்களில் சொல்லுகின்றது.

1) அவன் திருமகள் கேள்வனாக விளங்க வேண்டும்.

2) அவன் நாராயணனாக இருக்க வேண்டும்.

3) அவன் திருவடித்தாமரைகளே புகலிடம் என்றறிய வேண்டும்.

4) அவன் திருவடிகளே அனைத்தும் செய்யும் என்ற அறிவு பெற வேண்டும்.

5) தொண்டை தந்து அருள்வதற்கு உறுப்பான திருமகள் நாயகனே சரண் என்று தெளிந்து

6) அவர்களுடைய நித்திய சம்பந்தம் பற்றிய தெளிவும் பிறக்க வேண்டும்.

7) தொண்டுக்குக் காரணமான இறைவனின் எல்லையில்லாத இனிமை அறிய வேண்டும்.

8) எல்லாப் பொருட்களுக்கும் அவன் தலைவனாக விளங்கும் தன்மை அறிதல் வேண்டும்.



9) நித்தியமாகவும் உறுதியாகவும் உள்ள தொண்டினைப் பெற வேண்டும்.

10) அதற்கு தடையாக இருக்கக்கூடிய அனைத்தும் நீங்கும் என்ற தெளிவும் பெற வேண்டும்.

இதுதான் பத்து விஷயங்கள். துவயத்தின் இந்த பத்து அர்த்தங்களையும் அனுசரித்து எங்கே சரணாகதி பெற வேண்டும் என்று நிர்ணயித்த நம்மாழ்வார் விண்ணுக்கும் மண்ணுக்கும் வைப்பான நிதியாய், ஆன்மாவிற்கு கடைத்தேற்றும் கதியாய், கலிகாலக் கண் கண்ட தெய்வமாய் விளங்கும் திருமலையப்பனின் திருவடித் தாமரைகளில் சரண் புகுகிறார்.

திருவாய்மொழி 1102 பாசுரங்களின் சாரமான விஷயம் இந்த ஒரு பாசுரத்தில் வெளிப்படுகிறது.

*"அகல கில்லேன் இறையும் என்றலர்மேல்*
*மங்கையுறைமார்பா,*
*நிகரில்புகழாய். உலகமூன்றுடையாய். என்னை*
*ஆள்வானே,*
*நிகரில் அமரர் முனிக்கணங்கள் விரும்பும்*
*திருவேங்கடத்தான்*
*புகலொன் றில்லா அடியேனுன் அடிக்கீழமர்ந்து*
*புகுந்தேனே."*

திருமலை திருப்பதி தேவஸ்தானம்,
திருப்பதி

## திருமலையில் பக்தர்களுக்கு தடைவிதிக்கப்படுவன

- திருமலையில் புகைபிடித்தல், போதை தரும் பொருட்கள், மாமிச உணவுப் பொருட்கள் உட்கொள்வதற்கு முழுமையாக தடைவிதிக்கப் பட்டுள்ளது.
- பிற மத பிரசாரத்திற்கு தடைவிதிக்கப் பட்டுள்ளது.
- திருமலையில் சூதாட்டம், சீட்டாட்டம் முதலான வைகளுக்கு முழுமையாக தடை விதிக்கப் பட்டுள்ளன.
- விலங்குகள் வதை செய்வதற்கு தடை விதிக் கப்பட்டுள்ளது.
- பிச்சையெடுப்பதும், பிச்சைக்காரர்களை உற்சாகப்படுத்துவதற்கும் தடை விதிக்கப் பட்டுள்ளன.
- தனியாரிடம் தலைமுடியை மழுத்தல் மற்றும் தனியார் கல்யாண கட்டாவிற்கு செல்ல தடைவிதிக்கப் பட்டுள்ளது.

– செயலாட்சித் தலைவர்

கீழ் ஒன்பது பாட்டாலும் சரண்யனான எம்பெருமானுடைய இயல்பையும் தம்முடைய ஆற்றாமையையும் சொன்னார். இப்பாட்டில், தம்முடைய கைமுதலின்மையையும் வேறு கதி அற்ற நிலையையும் தெரிவித்துக் கொண்டு திருவேங்கடமுடையான் திருவடிகளிலே சரணம் புகுகிறார்.

காரணம் எம்பெருமானுடைய திருமார்பிலே நித்ய வாஸம் செய்யும் பெரிய பிராட்டியார்.

ஐயோ! அகல நேர்ந்து விடுமோ என்ற அச்சத்தால் ஒரு கணப்பொழுதும் பிரிந்திருக்கமாட்டேன் என்று சொல்லிக்கொண்டிருக்கிறாளாம் பிராட்டி.

தாமரை மலரில் தோன்றின அலர்மேல் மங்கைக்கு (ஸ்ரீமஹாலக்ஷ்மி) அந்தப் பூவில் வாழப்பிடிக்காது பகவான் திருமார்பிலே வந்து சேர்ந்தது அத்தனை சந்தோஷம்.

*"உறை மார்பா!"* அப்படிப்பட்ட பெரிய பிராட்டியார் நித்ய வாஸம் பண்ணும்படியான திருமார்பையுடையவனே என்பது பெருமானுக்குச் சிறப்பு!

உலகில் புருஷகாரம் செய்பவர்களுக்கு இரண்டு தன்மைகள் வேண்டும்.

1) எவர் விஷயத்தில் புருஷகாரம் செய்ய வேணுமோ அவர் விஷயத்தில் நெஞ்சார்ந்த அன்பு இருக்க வேண்டும். இந்த மாதுர்யமும் பிராட்டியிடம் உண்டு.

2) யாரிடத்தில் புருஷகாரம் செய்ய வேணுமோ அவரிடத்தில் தம் வாக்கு வெற்றி பெற்றே தீரும்படியான செல்வாக்கு இருக்க வேண்டும். இந்த சாதுர்யமும் பிராட்டியிடம் உண்டு.

இவளுடைய குற்றம் பொறுக்கும் தன்மைக்கு சாட்சியம் தான் இராமாவதாரத்தில் சீதையாக அசோக வனத்து அரக்கிகளிடம் நடந்து கொண்ட முறை.

இவளை இடைவிடாது படாதபாடுபடுத்தின அரக்கிகளின் கொடுமையை மரத்தின்மேல் மறைந்திருந்து கண்டவர் திருவடி (அனுமன்)

இராவணனை வென்ற பிறகு இவர்களைப் பார்த்துக் கொள்வோம் என்று ஆறியிருந்தார்.

இராவணன் தோற்ற பிறகு, ஓடி வந்து "இவ்வரக்கிகளின் அபராதங்களைக் கணக்கிட்டு சித்திரவதம் பண்ண நினைத்திருக்கும் எனக்கு நியமனம் (அனுமதி) வேண்டும்" என்று (பிராட்டியை நோக்கிக்) கேட்கிறான்.

அப்போது அவள் சொன்ன வார்த்தை. "மாருதி! யார் தவறு செய்யாதவர்கள்? தங்கள் மன்னனின் ஆணைகளை நிறைவேற்றிய இவர்களைத் தண்டிப்பது முறையல்ல" என்று சொல்லிக் காப்பாற்றுகிறாள். இது தான் புருஷகாரத்தின் எல்லை நிலம். காகாசுரன் விஷயத்திலேயும் இப்படியே நடக்கிறது.

*"உறைமார்பா"* என்பதனால் புருஷகார பூதையான பிராட்டியும் ஈச்வரனுமான சேர்த்தியானது எப்போதும் உண்டென்று காட்டப்பட்டதாகும்.

ஞானம் ஆனந்தம் முதலியவை எப்படி எம்பெருமானுக்கு இயல்போ அப்படியே ஸ்ரீபதித்வமும் நிருபகமாகையாலே இவளோடே கூடியே ஈச்வர ஸத்பாவமென்று கொள்கை.

சேதனர்களின் அபராதங்களைக் கணக்கிட்டு தண்டிக்க வல்லவனாய் எம்பெருமானுடைய ஸ்வாதந்தரியத்தையும், சேதநர் செய்யும் குற்றங்களின் மிகுதியையுங் கண்டு "ஐயா! என்னாகுமோ" என்கிற பயத்தாலே இவள் எம்பெருமானை விட்டு ஒரு நொடிப் பொழுதும் அகல மாட்டாள்.

பிராட்டியானவள் எப்போதும் எம்பெருமானோடு கூடியேயிருக்கின்றாளென்று தெரிந்து கொண்டால் எந்த சமயத்திலும் எம்பெருமானை சரணடையலாமென்பது நம்மனம் தேறி நிற்கும்.

*"நிகரில் புகழாய்!"* என்பதால் புருஷகாரம் பலித்த அளவிலே எம்பெருமானுடைய தன்னிச்சைத் தன்மை தலைமடிந்து வாத்ஸல்யம், ஸ்வாமித்வம், ஸௌசீல்யம் ஸௌலப்யம் என்கிற குணங்கள் தலையெடுக்கும்.

இச்சேதநன் தன் தோஷங்களைப் பார்த்து அஞ்சும் போது செய்வனோ செய்யானோ என்கிற சந்தேகம் உண்டாகும் போது இனி அவன் பொறுப்பு எனும் தன்மைக்கு இக்குணங்கள் அநுஸந்திக்கப்படுகின்றன.

1) *"நிகரில் புகழாய்!"* என்று வாத்ஸல்யத்தையும்
2) *"உலகம் மூன்றுடையாய்"* ஸ்வாமித்வத்தையும்
3) *"என்னை யாள்வானே"* என்று ஸௌசீல்யத்தையும்
4) *"நிகரிலமரர் முனிக்கணங்கள் விரும்பும் திருவேங்கடத்தானே"* என்று ஸௌலப்யத்தையும் சொல்லும் பதங்களாகும்.

பக்தர்களில் கைங்கர்ய நிஷ்டர்கள் (தொண்டு செய்வோர்) என்றும், குணாநுபவ நிஷ்டர்கள் என்றும் (பகவானின் குணங்களை நினைத்து வழிபடுபவர்) என இரண்டு வகுப்புண்டு.

அப்பாகுபாட்டைக் காட்டவே *"அமரர் முனிக்கணங்கள்"* என்ற பதங்களையிட்டார் நம்மாழ்வார். ஆயிரம் திருவாய்மொழியின் சாரார்த்தம் இங்கு இந்த ஒரு பாசுரத்தால் நிரூபிக்கப்படுகிறது.

துவயமே தீர்க்க சரணாகதி. அதுவே திருவாய்மொழி. அது செய்யப்பட்டது திருமலையிலே. செய்தவர் நம்மாழ்வார். சரணாகதன் திருமலையப்பன். திருமலையப்பனிடம் எல்லையற்ற ஈடுபாடு ஆழ்வாருக்கு. எனவே திருவாய்மொழியில் திவ்ய தேசங்களைப் பாடுகின்ற போது முதல் முதலில் திருவேங்கடத்தையே பாடுகிறார்.

நம்மாழ்வார் திருவேங்கடவனுக்கு எல்லா காலத்தும் எல்லா நிலையிலும் எல்லா அடிமையும் செய்யப்பாரிக்கிறார்.

*"திருவேங்கடம் ஒன்றைத் தொழ நம்வினை ஓயும் மூப்பு பிறப்பு பிணி வீயுமாறு செய்வான்"* என்பது அவர் அசைக்க முடியாத நம்பிக்கை. அந்த ஆழ்வாரின் நம்பிக்கை தான் இன்றும் தினசரி பல்லாயிரம் பக்தர்களைத் திருமலைக்குக் கொண்டு வந்து சேர்க்கிறது. *"கண்ணாவான் என்றும் மண்ணோர் விண்ணோர் வெற்பனே"* (1.8.3) என்று துவங்கியவர் ஒவ்வொரு பத்திலும் திருவேங்கடவனைப் பாடாமல் இருந்ததில்லை. திருமலையப்பனிடம் இப்பாசுரத்தால் தீர்க்க சரணாகதி செய்து காட்டிய நம்மாழ்வாரின் திருவடி வாரத்தில் நாம் தண்டனிட்டுப் பணிவோம்.

வாழ்க்கை நெறிகள் தொடரும்...

## சிறுவர் பகுதி வினாக்கள்

1. திருமங்கையாழ்வாரின் பிரபந்தங்களில் ஒன்றைக் கூறுக.
2. திருப்பாணாழ்வார் அருளிச் செய்த பிரபந்தம் பெயர் என்ன?
3. ரிக் வேத சாரமாக நம்மாழ்வார் அருளியது யாது?
4. நம்மாழ்வார் யஜுர்வேத சாரமாக அருளிச் செய்த பிரபந்தத்தின் பெயர்?
5. ஆசார்ய ஹ்ருதயம் என்னும் நூலை எழுதியவர் யார்?
6. பெருமாள் திருமொழி பாடியவர் பெயர் என்ன?
7. பாகவதத்தின் சாரமாக கருதப்படும் நூலின் பெயர்?
8. பொய்கையாழ்வார் பாடிய பிரபந்தத்தின் பெயர் என்ன?
9. திருமாலுக்குரிய 36 அவதாரங்களைக் கூறும் நூல் எது?
10. சாம வேத சாரமாக இருக்கும் பிரபந்தம் எது? எழுதியவர் பெயர் கூறு?

விடைகளுக்கு 48ம் பக்கம் பார்க்கவும்

தொகுப்பு : ப. ஜனனி,
எண்.6, 3ஆவது குறுக்கு, செல்லப்பெருமாள் கோயில் தெரு, குயவர் பாளையம், புதுச்சேரி – 605 013.

# வடுக நம்பி அருளிய யதிராஜ வைபவம்

## (சில திவலைகள்)

திரு.பி.டி. சேஷாத்ரி,
சென்னை

*''வாழி யதிராசன் வாழியதிராசன்*
*வாழி யதிராசன் என வாழ்த்துவார் - வாழியென*
*வாழ்த்துவார் வாழியென வாழ்த்துவார் தாளிணையில்*
*தாழ்த்துவார் விண்ணோர் தலை''*

(ஆர்த்திப்ரபந்தம் – 1)

என்பது மணவாள மாமுனிகளின் திவ்ய ஸ்ரீசூக்தியா கும். *''ஸத்யம் ஸத்யம் புனஸ்ஸத்யம்''* என்று வேதவ்யாஸரும், *''பொலிக பொலிக பொலிக''* என்று ஆழ்வாரும், *''பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு''* என்று பெரியாழ்வாரும் ஒரு முறைக்கு மும்முறை அருளியது போல் ஸ்வாமி ராமாநுஜருக்கு மங்களாசாசனம் செய்பவர்கள் யாவரோ, அவர்களுக்கும் மங்களாசாசனம் செய்பவர்கள் யாவரோ, அவர்களுக்கும் மங்களாசாசனம் செய்பவர்கள் யாவரோ, அவர்கள் நித்ய சூரிகளால் கொண்டாடப்படுவர் என்று அருளிச் செய்கிறார். அவ்விதமான உயர்ந்த சரம பர்வ நிஷ்டையில் எழுந்தருளியிருந்தவர் வடுகநம்பி என்கிற ஆசார்ய ச்ரேஷ்டர். *''தேவு மற்றறியேன்''* என்கிற மதுரகவியின் ஸ்ரீசூக்திக்கு இலக்காகி நின்றவர்.

வடுக நம்பியைப் பற்றிய தனியன்கள் மூன்று. அவற்றில் ஓர் தனியன்

*''ஸ்ரீராமாநுஜ யோகீந்த்ர க்ஷீர கைங்கர்ய சாலினே |*
*நமோ வடுக பூர்ணாய மஹனீய குணாப்தயே ||''*

என்பதாகும்.


இது தன்னிலிருந்து பகவத் ராமாநுஜருக்கு பால் அமுது காய்ச்சும் கைங்கர்யத்தை செய்து போந்தவர் என்று அறிய முடிகிறது. ராமாநுஜார்ய திவ்ய சரிதத்தில் பிள்ளைலோகஞ்ஜீயர் வடுகநம்பி திருச்சுரபிக்கு புல் இடுவிக்கைக்கும், எண்ணைக் காப்புச் சாத்துகைக்கும் கடவர் என்று அருளிச் செய்துள்ளார்.

மற்றொரு தனியன்,

*''ராமாநுஜார்ய சரண ப்ரவணம் பரதேவவத் |*
*வடுக பூர்ண மஹம் வந்தே பரஜ்ஞாந*
*பயோநிதிம் ||''*

என்பதாகும்.

இத்தனியனிலிருந்து ஆசார்ய அபிமானம் என்கிற சிறந்த ஞானத்திற்கு கடலாய் இருப்பவரும், *''நின்ற ஆதிப்பிரான் நிற்க மற்றைத் தெய்வம் நாடுதிரே''* என்று பரதத்துவமான எம்பெருமானிடத்தில் போல் ராமாநுஜருடைய திருவடிகளில் அன்பு கொண்டவருமான வடுக நம்பியை வணங்குகிறேன் என்பதாகும். *''ரம்யஜாமாத்ரு யோகீந்த்ர பாதரேகா''* என்னும் ஒன்றான வானமாமலை ராமாநுஜ ஜீயர் தம்முடைய அவயவ ப்ரபாவ அஷ்டகத்தில் வடுக



நம்பியை *''காஷா யம்ச ஆந்த்ர பூர்ணகம்''* என்று காஷாயமாக உருவகப்படுத்தியுள்ளார். பகவத் ராமாநுஜர் விஷயமான ஆர்த்தி ப்ரபந்தத்தில்(11) ஆசார்ய ச்ரேஷ்டரான மணவாள மாமுனிகள்

*''உன்னையொழியவொரு தெய்வம் மற்றறியா*
*மன்னு புகழ் சேர் வடுகநம்பி - தன்னிலையை*
*என்றனக்கு நீ தந்து எதிராசா எந்நாளும்*
*உன்றனக்கே ஆட்கொள் உகந்து''*

என்று அருளியிருப்பதிலிருந்து இவர் "பஞ்சமோபாய நிஷ்டர்" என்பதை அறிந்து கொள்ளலாம்.

வடுகநம்பி அருளிச் செய்த நூல்களாக இரண்டை பெரியோர்கள் காட்டுகின்றனர். 114 சுலோகங்களைக் கொண்டமைந்த "யதிராஜ வைபவம்" என்பதாகவும், மற்றொன்று 26 சுலோகங்களில் 108 திருநாமங்களின் பெருமையை காட்டுவதாக அமைந்துள்ள ஸ்ரீராமாநுஜ அஷ்டோத்தர சத நாம ஸ்தோத்திரமுமாகும். இதைத் தவிர யதிராஜ மங்களத்தில் சில வடுக நம்பி அருளியதாகவும் காட்டப்பட்டுள்ளது.

உடையவர் திருவடிகளில் ஆச்ரயித்த முதலிகளில் "நம்பி" என்கிற திருப்பெயருடன் எழுந்தருளியிருந்த மஹான்களில் 1)தொண்டனூர் நம்பி, 2) மருதூர் நம்பி, 3) மழுவூர் நம்பி, 4) சொட்டை நம்பி, 5) குரவி நம்பி, 6) திருக்குறுங்குடி நம்பி, 7) வங்கீபுரத்து நம்பி, 8) முடும்பை நம்பி, 9) ஸ்ரீபராங்குச நம்பி, 10) ஸ்ரீவில்லிபுத்தூர் நம்பி, 11) திருக்குருகூர் நம்பி, 12) வடுக நம்பி என்கிற இவரும் ஒருவர்.

இனி யதிராஜ வைபவ ஸ்தோத்திரத்திலிருந்து எட்டு சுலோகங்களில் எம்பெருமானாரின் எட்டு திருநாமப் பெருமையை விவரித்து இங்கு அனுபவிப்போம்.

ராமாநுஜருக்கு அமைந்த திருநாம வைபவத்தில் முதலில் அவர் "சேஷாவதாரர்" என்பதை உள்ளத்தில் கொள்வோம்.

**ஸ்ரீராமாநுஜர் சேஷாவதாரர் (7வது சுலோகம்):**

*''ததோ ஜகந் மங்கல பிங்கலாப்தே சைத்ராக்ர்ய*
*ஸுக்லச்சத பஞ்சமீகே |*
*ஆர்த்ராபி தர்க்ஷேண யுதே ச வாரே*
*ப்ருஹஸ்பதேஸ் ஸந்ம்ருக ராஜ லக்நே ||*
*வேதாந்த ஸித்தாந்த ஸமர்த்தநாய பாஹ்யாந்தர*
*ப்ராந்த மதாபநுத்த்யை |*
*(சேஷாம்சக:) கேசவ யஜ்வ தேவ்யாம் தேஜோநிதி:*
*கச்சிதிஹா விராஸீத் ||''*

என்கிற 6,7 வது சுலோகங்கள் அஷ்டோத்தர சத நாமத்தின் 1) லக்ஷ்மண முனி – 23, 2)தரணீதர : – 54, 3) சேஷரூப ப்ரதர்சக: – 92 ஆகிய திருநாமங்களின் விவரணமாகும்.

**சுலோகப் பொருள் :**

உலகிற்கெல்லாம் மங்களமான பிங்கள வருஷத்தில் சித்திரையில் செய்ய திருவாதிரையில், சுக்ல பக்ஷ வியாழக்கிழமை, பஞ்சமி திதியில், ஸிம்ஹ லக்னத்தில், வேதாந்த அர்த்தத்தை நிலை நாட்ட, பாஹ்யர்கள், குத்ருஷ்டிகள் தேய்ந்து போக, கேசவ ஸோமயாஜிக்கும், அவர் தம் தேவியான பூதேவி அம்மங்காருக்கும் "ஆதி சேஷாம்சத்தை" உடையவராய், தேஜஸ்வியான உத்தம புருஷர் அவதாரம் செய்தார்.

நாரதீயம் – யாதவாத்ரி மாஹாத்மியம் (1–32)–ல்

*" அநந்த: ப்ரதமம் ரூபம் லக்ஷ்மணச்ச தத: பர: |*
*பல பத்ரஸ் த்ருதீயஸ்து கலௌ கச்சித் பவிஷ்யதி ||"*

என்கிறபடியே திருஅனந்தாழ்வான் பரமபதத்தில் முதல் மூர்த்தியாகவும், திரேதாயுகத்தில் இளைய பெருமாள் இரண்டாவது மூர்த்தியாகவும், த்வாபர யுகத்தில் பலராமன் மூன்றாவது மூர்த்தியாகவும், நான்காவது மூர்த்தியாக கலியுகத்தில் ஓர் மஹாபுருஷர் அவதரிக்கப்போகிறார் என்று காட்டியுள்ளதை அடியொற்றி இந்த சுலோகம் அமைந்துள்ளது. மேலும் உலகைத் தாங்கும் ஆதிசேஷனின் அவதாரம் என்பதை "தரணீதர:" என்கிற 54–வது திருநாமமும், ஆயிரம் புறச் சமயிகளை வெல்ல ஆயிரம் நாவுடைய ஆதிசேஷனின் உருவை எடுத்து தொண்டனூரில் அவர்களை வெற்றிக் கொண்டதையும், *''சேஷரூப ப்ரதர்சக:''* என்கிற 92–வது திருநாமமும் விளக்குகின்றது.

*''மேஷார்த்ரா ஸம்பவம் விஷ்ணோர் தர்சந*
*ஸ்தாபநோத்ஸுகம் |*
*துண்டீர மண்டலே சேஷமூர்த்திம் ராமாநுஜம் பஜே ||''*

என்கிற திருநக்ஷத்திர தனியனும் இதையே விளக்குகின்றது. கருட வாஹன பண்டிதரின் திவ்ய சூரி சரிதத்தில், 17–வது சர்கத்தில் ஸ்ரீராமாநுஜ வைபவத்தில்

*''பௌஜங்கம் வபுரபஹாய சேஷ போகீ யத்ரூபம் |*
*த்ரிபுவந வந்திதம் ஜசாம ||''*

என்று அருளியிருப்பதும், இதையே காட்டுகின்றது. மேல் நாட்டில் தொண்டனூரில் ஆதிசேஷ அவதார ரூபம் உடையவராகவே இன்றும் விளங்கா நிற்கிறார். *''சேஷாவ*

*தாரம் நிஜரூபமென்றும்''* வ்யாஸர், பராசரர், சௌனகர், நாரதர், சடகோபர், ப்ரஹஸ்பதி, பஞ்சாயுதங்கள், சேனை முதல்வர் என்றிங்கனே காட்டப்படுபவைகள் "ஆவேச அவதாரங்கள்" என்றும் பெரியோர்கள் காட்டுகின்றனர்.

சேஷாவதாரரான ராமாநுசனைப் போற்றுவோம் வாரீர்.

## ஸ்ரீராமாநுச திருநாம வைபவம் (8-வது சுலோகம்)

*''ஸ்ரீ சைல பூர்ணோப்யத பூதபுர்யாம் ஆகம்ய*
*வீக்ஷ்யாத் புத பாகிநேயம் |*
*ச கார ரக்ஷார்த்த ரதாங்க சங்க சிஹ்நம் ச ராமாநுஜ*
*நாமகம் ச ||''*

(செங்கயல் வாவிகள் சூழ் வயல் நாளும் சிறந்த பெரும்பூதூருக்கு திருமலை நம்பிகள் எழுந்தருளி, சிறந்த மருமகனைக் கடாக்ஷித்து புஷ்ப திருவிலச்சினை ப்ரஸாதித்து, ரக்ஷையிட்டு, ராமாநுசன் என்னும் திருநாமத்தை இட்டு அனுக்ரஹித்தார்)

அஷ்டோத்தர சத நாமத்தில் "ராமாநுஜாய நம:" என்பதே முதல் திருநாமம். திருமலை நம்பிகள் ஸ்வாமிக்கு சாற்றி மகிழ்ந்த திருநாமம் இதுவே.

இத்திருநாமத்தின் பெருமை 108–ஸாவித்ரியா கவும், ப்ரபந்ந காயத்ரியாகவும் இராமாநுச நூற்றந்தாதி யில் மூங்கிற்குடி திருவரங்கத்து அமுதனாரால் காட்டப்பட்டுள்ளது.

*''ராமாநுஜம் லக்ஷ்மண பூர்வ ஜம்ச''* என்கிறபடி லக்ஷ்மணனுக்கு இராமாநுசன் என்பது ஓர் திருநாமம். அவரின் திருஅவதாரமாதலால் இவருக்கும் இதுவே திருநாமம் ஆயிற்று. இத்திருநாமத்திற்கு மூன்று வித பொருள்களை பெரியோர்கள் காட்டுகின்றனர்.

## முதற்பொருள் :

*''லக்ஷ்மணோ லக்ஷ்மீ ஸம்பந்ந:''* என்று ஸ்ரீராம பிரான் கானகஞ்செல்லும் பொழுது, இளைய பெருமாள் தானும் நிர்பந்தித்து, உடன் அழைத்துச் செல்லும்படி வேண்டி, காட்டில் *''அஹம் ஸர்வம் கரிஷ்யாமி''* (அயோ–31–25) என்று எல்லா அடிமைகளையும் தேவரீருக்கு செய்ய வேண்டும் என்கிறபடியே செய்து போந்தது போல், ஸ்வாமி எம்பெருமானாரும் 1) அறு சமய செடியதனை அடியறுத்தும், 2) அடர்ந்து வரும் குதிட்டிகளை அறத் துறந்து 3) செறுகலியைச் சிறிது மறத்தீர்த்து விட்டும், 4) மறையதனில் பொருள் அனைத்தும் வாய் மொழிந்தும், 5) மாறன் உரை செய்த தமிழ் மறை வளர்த்தும், 6) தென்னரங்கர் செல்வம் முற்றும் திருத்தி வைத்தும் தர்சனத் துக்குப் புரிந்த கைங்கர்யங்களைக் கொண்டும் அறி யலாம்.

## இரண்டாம் பொருள் :

ராமாநுஜன் என்னும் திருநாமம் கண்ண பிரானுக் கும் உண்டு. பலராமனுடைய தம்பி என்னும் காரணமாக, முகுந்த மாலையில் (21), ஸ்ரீகுலசேகரப் பெருமாள் *''ஹே ராமாநுஜ!''* ஹே ஜகத்த்ரய குரோ! என்ற திருநாமத் தினாலேயே அழைத்துள்ளது கண்டு இன்புறத்தக்கது. கைரவிணீ தீர வாஸியான பார்த்த சாரதியின் அனுக்ரஹ மடியாக அவதரித்தார் என்கிற ஐதிஹ்யத்தை கொண்டும் இவ்விஷயத்தை நன்கு அறியலாம். வேதாந்தாசார்யார் தாம் பணித்த "யதிராஜ ஸப்ததியில்" *சமிதோதய சங்கராதி கர்வ:* என்கிற 13–வது சுலோகத்தில் கீதாசார்யனான பார்த்தசாரதியே ராமாநுசனாக அவதரித்ததை காட்டியுள் ளது காண்க.

## மூன்றாம் பொருள் :

அபிநவ தசாவதாரம் என்கிற ரீதியில் ராமனாக கருதப்படுபவர் வகுளாபரணரான நம்மாழ்வார். அவ் விராமாநுசனிடம் உள்ள ஈடுபாடு தோன்ற இவருக்கும் ராமாநுசன் என்னும் பெயர் நிலைத்தது. *''மாறன் அடி பணிந்து உய்ந்தவர்''* என்பதும், *''பராங்குச பாத பக்தம்''* (யதி ராஜ விம்ஸாதி – 1) என்றும் அருளியுள்ளனர் பூருவாசார்யகள்.

மொழியைக் கடக்கும் பெரும் புகழாளரான கூரத்தாழ்வான்

*''ந சேத் ராமாநுஜேத் யேஷா சதுரா சதுரக்ஷரீ |*
*காமவஸ்தாம் ப்ரபத்யேரந் ஜந்தவோ ஹாந்த*
*மாத்ருசா: ||''*

(ராமாநுஜ என்னும் வல்லமை மிக்க நான்கு எழுத்துக்கள் இல்லையாகில் என்னைப் போன்ற ஜந்துக்கள் என் நிலையை அடைந்திருப்பர்) என்று அருளியுள்ளது மனனம் செய்யத்தக்கது.

மற்றொரு சுலோகம் :

*''ஏதாநி புவந த்ரய பாவநாநி ஸம்ஸார ரோக*
*சகலீசரண் ஔஷதாநி |*
*ஜிஹ்வாதலே மம விகாநி யதாசிலாயாம் ராமாநுஜேதி*
*சதுராண்ய அம்ருதாக்ஷராணி||''*

(ராமாநுஜ என்கிற வலிமை மிக்க அமுதம் போன்ற நான்கு எழுத்துக்கள் மூவுலகையும் தூய்மைப் படுத்து கின்றன. ஸம்ஸார வ்யாதியை போக்கடிக்கும் சிறந்த மருந்தான அத்திருநாமத்தை கல்லிலே பொதித்தாற் போலே என் நாவில் எழுதிக் கொள்வேனாக)

ஆகையால்யிறே ஸ்ரீவைஷ்ணவர்கள் ஸ்ரீராமாநுஜ த்வய மஹா மந்திரத்தின் உத்தர வாக்யமான *''ஸ்ரீமதே ராமாநுஜாய நம:''* என்று எழுதியும், பேசியும் போற்றுகின்ற னர். *''நெஞ்சே சொல்லுவோம் இராமாநுசன் என்னும் திருநாமத்தை.''*

**யதிராஜ வைபவம் வளரும்...**

# திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

## திருமலையில் பக்தர்கள் செய்யக்கூடியன

- ✓ திருமலைக்கு வரும் முன்னர் உங்களுடைய இஷ்ட அல்லது குல தெய்வத்தை வழிபடுங்கள்.
- ✓ ஏழுமலையானைத் தரிசிப்பதற்குமுன் ஸ்வாமி புஷ்கரிணியில் குளித்து விட்டு அங்குள்ள வராக ஸ்வாமியை தரிசனம் செய்யுங்கள்.
- ✓ கோயிலுக்குள் அமைதியைக் காத்து உங்களுக்குள்ளேயே 'ஓம் ஸ்ரீவேங்கடேசாய நம:' என்று மனனம் செய்யுங்கள்.
- ✓ கோயிலுக்குள் உள்ளபொழுது ஏழுமலையானை தியானியுங்கள்.
- ✓ திருமலையில் பாபவிநாசனம் மற்றும் ஆகாச கங்கையில் நீராடுங்கள்.
- ✓ திருமலையில் இருக்கும்வரை பழைய சம்பிரதாயங்களுக்கும் பழக்கவழக்கங்களுக்கும் மதிப்பளியுங்கள். உடன் வரும் யாத்திரிகர்களிடையே சமய உணர்வுகளை மேம்படுத்துங்கள்.
- ✓ உங்கள் காணிக்கைகளை உண்டியில் மட்டுமே செலுத்துங்கள்.
- ✓ திருமலையைத் தூய்மையாக வைத்துக்கொள்ளுங்கள்.
- ✓ திருமலையானை தரிசனம் செய்யும்பொழுது பாரம்பரிய ஆடைகளையே அணியுங்கள்.

## திருமலையில் பக்தர்கள் செய்யக்கூடாதன

- ✗ உங்களுடன் அதிகமான நகைகளையோ, பணத்தையோ எடுத்து வரவேண்டாம்.
- ✗ ஏழுமலையானைத் தரிசிப்பதற்குத் தவிர வேறு எந்த காரணத்திற்காகவும் திருமலைக்கு வராதீர்கள்.
- ✗ தரிசனத்திற்காக அவசரப்படாதீர்கள். வாய்ப்பு வரும்வரை க்யூவில் நின்று செல்லுங்கள்.
- ✗ சம்பிரதாயங்கள் அனுமதிக்காத பட்சத்தில் கோயிலுக்குள் வராதீர்கள்.
- ✗ திருமலையில் எல்லா மலர்களும் இறைவனுக்கே உரியன. ஆகையால் மலர்களை சூடாதீர்கள்.
- ✗ தண்ணீரையும், மின்சாரத்தையும் வீணாக்காதீர்கள்.
- ✗ புதியோரை தங்கும் அறையில் அனுமதிக்காதீர்கள். புதியோரிடம் அறை சாவிகளை ஒப்படைக்காதீர்கள்.
- ✗ எம்பெருமான் தரிசனம் மற்றும் தங்குவசதிக்காக தளாலிகளை அணுகாதீர்கள்.
- ✗ தெருவில் விற்கும் போலி பிரசாதங்களை வாங்காதீர்கள்.
- ✗ கோயில் வளாகத்திற்குள் துப்புதல் போன்ற அருவருப்பான செயல்களைச் செய்யாதீர்கள்.
- ✗ நான்கு மாடவீதிகளிலும் காலணிகளைப் பயன்படுத்தாதீர்கள்.
- ✗ கோயிலுக்குள் அலைபேசி, புகைப்படக்கருவி முதலான மின்னணுக்கருவிகளை, ஆயுதங்களைக் கொண்டு வர வேண்டாம்.
- ✗ பல்வேறு வகையான அரசியல் கூட்டங்கள், சுவரொட்டிகள், போராட்டங்கள், உண்ணாவிரதங்கள், சாலை மறியல், கடையடைப்புகள் முதலானவைகள் திருமலையில் செய்தல் கூடாது.

– செயலாட்சித் தலைவர்



# ஸ்ரீஅழகு மல்லாரி கிருஷ்ண ஸ்வாமி ஆலயம் (மன்னாரு போலூரு)

“மணி மண்டப க்ஷேத்திரம்” என்றழைக்கப்படும் ஸ்ரீசத்ய ஜாம்பவதி சமேத ஸ்ரீஅழகு மல்லாரி கிருஷ்ண ஸ்வாமி கோயில், சூளூர்பேட்டையிலிருந்து சுமார் 4 கி.மீ. தொலைவில், காளங்கி நதிக்கரையில் அமைந்துள்ள மன்னாரு போலூரு என்னும் இடத்தில் அமைந்துள்ளது.

வரலாற்று ஆதாரங்களின்படி, இக்கோயில் 10ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சோழ மன்னர்களால் கட்டப் பட்டதாகும். 13 ஆம் நூற்றாண்டில் நெல்லூரை ஆண்ட மனுமசித்தி மன்னர்களின் ஆட்சியின் கீழ் இக்கோயில் சிறப்புற்று விளங்கியது. 18 ஆம் நூற்றாண்டில் வேங்கட கிரியின் அரசர், 5 கிராமங்களை இக்கோயிலுக்கு தான மாக அளித்தார். வருடத்தில் இருபிரம்மோத்ஸவங்கள் நடைபெற்ற சிறப்பு வாய்ந்த ஆலயமாகும்.

**தல புராணம் :**

ஒரு முறை ராஜா சத்ராஜித் சூரிய தேவனை பிரார்த்தித்து கடுந்தவம் புரிய சூரியனும் “ச்யாமந்தக மணி” என்னும் ஆபரணத்தை அவருக்கு அளித்தார். அம்மணியின் சிறப்பு என்னவென்றால் அது தினமும், எட்டு பீப்பாய் அளவு தங்கத்தை அளிக்கக் கூடியதாகும். ஒரு நாள், ராஜா சத்ராஜித் அதனை ஸ்ரீகிருஷ்ணரின் சபைக்கு அணிந்துச் சென்றார். அதனை கவனித்த ஸ்ரீகிருஷ்ணர் ராஜா சத்ராஜித்திடம், “மக்களின் நன்மைக் காகவும், பாதுகாப்பிற்காகவும் அம்மணியை என்னிடம் ஒப்படைத்து விடுங்கள்” என்றார்.

அவ்விண்ணப்பத்தை மறுத்த ராஜா சத்ராஜித், ஸ்ரீகிருஷ்ணர் தம்மிடமிருந்து அம் மணியை அபகரித்து விடுவார் என்று பயந்து, அதனை தன் தம்பி பிரசேனனி டம் கொடுத்திருந்தார்.

ஒரு நாள், அம்மணியை அணிந்து பிரசேனன் காட் டில் வேட்டையாடச் சென்றான். அப்போது ஒரு சிங்கம் அவனைக் கொன்று, ஆபரணத்தை எடுத்து செல்கிறது. பிறகு, ஜாம்பவான் அச்சிங்கத்தைக் கொன்று வித்தியாச மாக பளிச்சிடும் அம்மணியை அவரது மகளான ஜாம்ப வதிக்கு அளித்தார். நீண்ட நாட்களாக தனது தம்பியின் வருகைக்காக காத்திருந்த ராஜா சத்ராஜித், “ஸ்ரீகிருஷ்ணர்

தெலுங்கு மூலம் : திருமதி. எம். உத்தர பல்குனி
தமிழாக்கம் : திருமதி. பா. காயத்ரி.

தான் தன் தம்பியைக் கொன்று அம்மணியை எடுத்து சென்றிருக்க வேண்டுமென்று முடிவு செய்து, ஸ்ரீகிருஷ் ணரைப் பழி கூறுகிறார். தம் மீது சுமத்தப்பட்ட பழியை விலக்குவதற்காக, விநாயக சதுர்த்தியன்று, பகவான் விநாயகரை தொழுது, தமது தேடுதலை ஆரம்பிக்கிறார். இறந்து போன பிரசேனன் மற்றும் சிங்கத்தின் உடலைப் பின் தொடர்ந்து ஜாம்பவான் ஸ்ரீகிருஷ்ணர் வாழும் குகையை அடைந்து, ஜாம்பவதியின் கழுத்தில் அம்மணி யிருப்பதைக் காண்கிறார். ஸ்ரீகிருஷ்ணரை பார்த்து கோப மடைந்த ஜாம்பவான், அவருடன் மல்யுத்தம் செய்து தோற்கிறார். த்ரேதா யுகத்தில் ஜாம்பவான் ஸ்ரீராமரை தன்னிடம் யுத்தம் செய்யுமாறு கோரினார். அக் கோரிக்கையை இந்த த்வாபர யுகத்தில் ஸ்ரீகிருஷ்ணர் பூர்த்தி செய்தார். மகாவிஷ்ணுவின் அவதாரமான ஸ்ரீராம ரும், ஸ்ரீகிருஷ்ணரும் ஒன்று தான் என்றுணர்ந்த ஜாம்பவான், ஸ்ரீகிருஷ்ணரை தொழுது மன்னிப்பு கோரி னார். பிறகு, ச்யாமந்தக மணியோடு கூடிய தனது மகளை, ஸ்ரீகிருஷ்ணருக்கு கல்யாணம் செய்து கொடுத் தார்.

பின்பு, ஸ்ரீகிருஷ்ணர் அம்மணியை ராஜா சத்ரா ஜித்திடம் ஒப்படைத்தார். தான் செய்த பாவத்தின் பிராயச் சித்தமாக தனது மகள் சத்யபாமாவை அவருக்கு கல் யாணம் செய்து கொடுத்தார். இவ்வாலயத்தில் ஸ்ரீகிருஷ்ணர் தன் இரு மனைவியரோடு பக்தர்களுக்குக் காட்சியளிக்கிறார். இவ்விடத்தில்தான் ஜாம்பவான் ச்யாமந்தக மணியை ஸ்ரீகிருஷ்ணரிடம் ஒப்படைத்ததால், புராணத்தில் இவ்விடத்தை "மணி மண்டப க்ஷேத்திரம்" என்று அழைக்கின்றனர். ஸ்ரீஹரி ஜாம்பவானுடன் மல்யுத்தம் புரிந்ததால், இக்கோயிலின் மூலவர் ஸ்ரீஅழகு மல்லாரி கிருஷ்ண ஸ்வாமி என்று அழைக்கப்படுகிறார். இவ்வாறு ஸ்ரீகிருஷ்ணர் "மல்ல ஹரி" ஆனார். காலப் போக்கில் அவரது பெயர் "மல்லாரி கிருஷ்ண ஸ்வாமி" ஆயிற்று. இவ்விடத்தில் ஸ்ரீகிருஷ்ணரும் ஜாம்பவானும் மல்யுத்தம் செய்ததால், இதற்கு "மல்ல ஹரி போரு ஊரு" எனப் பெயர் வந்தது. காலப்போக்கில், அது "மன்னாரு போலூரு" என்று மருவியது.

### ஆலயம், ஆலய மூர்த்திகளின் சிறப்பங்கள் :

ஸ்ரீகிருஷ்ண ஸ்வாமியின் எதிரில் 9½ அடி உயர முள்ள பெரிய கருடசிலை "அஷ்ட நாகாபரணங்களுடன்" தன் அகங்காரத்தை இழந்து கண்ணீர் சிந்தும் கண் களுடன் காட்சியளிக்கிறார் கருடன். மூல மூர்த்தியான ஸ்ரீகிருஷ்ண ஸ்வாமியின் சிலை 5½ அடி உயரமே கொண் டுள்ளது. அனைத்து வைணவ கோயில்களிலும் சிறிய வடிவில் காணப்படும் கருடர் இங்கு பெரிய வடிவில் காட்சியளிக்கிறார். தல புராணத்தின்படி, ஸ்ரீகிருஷ்ணர், ஜாம்பவானுக்கு தனது "ஸ்ரீராம" தரிசனத்தைத் தர, இமாலயத்தில் "ராம நாம மந்திரம்" ஜபித்துக் கொண்டி ருக்கும் தனது பக்தனான ஹனுமனை "மணிமண்டப க்ஷேத்திரத்திற்கு" அழைத்து வர கருடனிடம் கூறுகிறார். கருடர் இமாலயத்திற்குச் சென்று ஸ்ரீகிருஷ்ணரின் ஆணையை ஹனுமனிடம் கூற, அவர் மணிமண்டப க்ஷேத்திரத்திற்கு வர மறுக்கிறார். அவ்விருவருக்கும் இடையில் வாக்குவாதம் நடக்க, ஹனுமன் தனது "விஷ்வரூபத்தை" கருடருக்குக் காட்டுகிறார். கருடரின் அகந்தை, உடைந்து போகிறது. ஆதலால், கண்ணீர் சிந்தும் கருடரின் சிலை அவர்தம் தோல்வியை குறிக் கிறது. மீண்டும் ஸ்ரீகிருஷ்ணர் கருடரிடம், ஸ்ரீராமர் "மணி மண்டப க்ஷேத்திரத்திற்கு" வரக் கூறியுள்ளார் என்று ஹனு மனிடம் சென்று கூறும்படி சொல்ல, ஹனுமன் மிகுந்த மகிழ்ச்சியுடன் அங்கு வருகிறார். பிறகு தனது பக்தனான



ஹனுமனுக்கு தரிசனம் தர, ஸ்ரீகிருஷ்ணர் சத்ய பாமா விடம் சீதையாகக் காட்சியளிக்க வேண்டுகிறார். தேவி சத்யபாமாவும் மிகுந்த பக்தியுடன் ஸ்ரீகிருஷ்ணரை மூன்று முறை வலம் வந்து சீதையாகக் காட்சித் தருகிறார். ஸ்ரீசீதா ராம திவ்ய தரிசனத்தைப் பெற்று ஹனுமன் மகிழ்ச்சி யோடு, இமாலயத்திற்கு திரும்புகிறார்.

பிரதான கோயிலின் வலது புறமாக மகாலக்ஷ்மியின் ஸ்வரூபமான ருக்மிணி தேவியின் கோயிலுள்ளது. தேவி சௌந்தர்யவல்லி என்னும் பெயரோடு விளங்குகிறார். பிரதானக் கோயிலின் இடது புறத்தில் சீதா தேவி, லக்ஷ்மணர் சமேத ஸ்ரீகோதண்ட ராம ஸ்வாமியின் திருக் கோயிலுள்ளது.

இதுவே ஸ்ரீராமர் ஜாம்பவானுக்கு குகையில் தரிசனமளித்ததற்கு ஆதாரமாக அமைகிறது. ஸ்ரீகிருஷ்ணர் மற்றும் ஸ்ரீராமரின் கோயில், தனித்தனி துவஜஸ்தம்பங்களைக் கொண்டு, ஒரே கோயில் பிரகாரத்தில் அமைந்துள்ளது. இங்ஙனம் ஸ்ரீராமரும் ஸ்ரீகிருஷ்ணரும் ஒன்றாக இத்தலத்தில் பக்தர்களுக்கு காட்சியளிக்கிறார்கள்.

மூலமூர்த்திகள் த்வாரபாலகர்களுடன், சுக்ரீவர் மற்றும் ஜடாயுவின் சிலை கோயிலின் பெருமையை உயர்த்துகின்றது. ஆண்டாள், ஸ்ரீவேங்கடேஸ்வரர், பக்த ஆஞ்சனேயர், ஸ்ரீராமானுஜர் மற்றும் பன்னிரு ஆழ்வார் களுக்கு தனித்தனி சன்னதிகள் உள்ளன. பக்தர்களை ஆன்மீக உலாவிற்கு அழைத்துச் செல்லும் இக்கோயில், வைணவ கோயில்களுள் பிரசித்தி பெற்றதாக விளங்கு கிறது.

இக்கோயிலுள்ள "விமான கோபுரம்" திருமலைக் கோயிலின் விமான கோபுரத்தைப் போலக் கட்டப்பட்டுள் ளது. பொதுவாக வைணவ கோயில்களில் கருடரின் சிற்பம் அமைக்கப்படும். ஆனால், இங்கு, "விமான கோபுரத்தில்" திருமலையிலுள்ளது போன்று சிங்கத்தின் சிற்பம் காணப்படுகிறது.

மனுமசித்தி காலத்தில் இக்கோயில் சிறப்புற்று விளங்கியதாக வரலாறு மூலம் அறியப்படுகிறது. 16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஸ்ரீவேங்கட நரசிம்ம கவி "ஸ்ரீமன்னாரி கிருஷ்ண சதகம்" மற்றும் "ஸ்ரீராம சந்திர சதகத்தை"யும் இயற்றியுள்ளார்.

ஐயலராயல நாராயண கவி "ஹம்ஸ விம்ஸதி"யில் 4ஆம் அத்யாயத்தில், இந்த ஸ்ரீகிருஷ்ண பகவானை கோவிந்தனாக வர்ணிக்கிறார். 5ஆம் அத்யாயத்தில், இக்கோயிலை, சிதம்பரம், திருத்தணி, ஸ்ரீகாளஹஸ்தி போன்ற புகழ் வாய்ந்த கோயில்களுக்கு ஈடாக காட்டி யுள்ளார். கோயிலின் முன்பு, சன்னிதி தெருவில் பக்த ஆஞ்சனேயரின் கோயில் உள்ளது.

பெரிய முக மண்டபமும், விசாலமான மகா மண்ட பமும், கல்யாண மண்டபமும், கலை அழகுடன் கட்டப் பட்டுள்ளது. கோயிலின் கிழக்கு திசையில் சுமார் இரண்டு ஏக்கர் பரப்பளவில் "ஸ்வாமி புஷ்கரணி" அமைந்துள்ளது. தினமும் காலை "திருமஞ்சனத்திற்காக" "கோனேரு"வி லிருந்துதான் புண்ணிய தீர்த்தத்தை கொண்டு வருவார் கள்.

மூல மூர்த்தியின் வடகிழக்கு திசையில் ஒரு பாதாள குகையிருப்பதாக நம்பப்படுகிறது. அக்குகைக்குள் மூன்று கல் நுழைவு வாயில்கள் இருந்ததாகவும், அவை இருள் சூழ்ந்த பாதாள வழியிடையே செல்லும் படி களைக் கொண்டதாகவும் கருதப்படுகிறது. ஆதலால், ஆராய்ச்சியாளர்கள் அங்கு செல்ல பயந்து அவ் வழியை தற்காலிகமாக மூடிவிட்டதாகவும் கூறப்படுகிறது. அக்குகையில்தான் ஜாம்பவான் வாழ்கிறார் என்று ஊர்மக்கள் கருதுகிறார்கள்.

16ஆம் நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு கல்வெட்டில், இக்கோயில் வேங்கடகிரி ஜமீன்தார்களின் கீழ் இருந்ததாகவும், அவர்கள் இக்கோயிலுக்கு 1,477 ஏக்கர் பரப்பளவுள்ள ஐந்து கிராமங்களை தானமளித்த தாகவும் கூறப்பட்டுள்ளது. பழங்காலத்தில் மல்லாரு போலூரு தாசில்தாரின் மேற்பார்வையின் கீழ் இருந்த இக்கோயிலில் ஒன்பது அர்ச்சகர்களால் தினமும் ஒன்பது வேளை அர்ச்சனை மற்றும் பிரசாதம் படைக்கப் பட்டதாக வும் கூறப்படுகிறது.

இக்கோயிலில் வேத பாராயண பண்டிதர்கள், பஜனைக் குழுக்கள், அடியார்கள், அனைத்து தொழி லாளர் என ஆயிரத்திற்கும் மேற்பட் டோர் தங்கள் தினசரி வாழ்வாதாரத்திற்கு இக்கோயிலை சார்ந்திருந்ததாகச் சொல்லப்படுகிறது. வைணவ சாம்பிரதாயப்படி, "நித்ய", "வார", "பக்ஷ", "மாத" மற்றும் "வருடாந்திர" உத்ஸவங்கள் மிகவும் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. சுப்ரபாதம் முதல் ஏகாந்த சேவை ஈறாக நடைபெறுகிறது.

நாமும் பகவான் ஸ்ரீஅழகு மல்லாரி கிருஷ்ண ஸ்வாமியின் திவ்ய தரிசனத்தைப் பெற்று எல்லையில்லா பரமானந்தத்தை அடைவோம்!

# ஐதராபாத் ஜூப்லி ஹில்ஸில் திருமலை திருப்பதி தேவஸ்தானம் புதிதாக நிர்மாணித்த ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயத்தில் 2019 மார்ச், 09 முதல் 13 வரை நடைபெற்ற விக்ரஹ பிரதிஷ்டை, கலச ஸ்தாபனம், மகாகும்பாபிஷேக திருக்காட்சிகள்



பாலாபிஷேகத்தில் ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி



உபயதேவியருடன் எம்பெருமான் (உத்ஸவ மூர்த்தி)



சந்தனாபிஷேகத்தில் ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி



ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலய திருக்காட்சி – ஜூப்லி ஹில்ஸ், ஐதராபாத்



பூர்ணாஹுதி



புனிதக்கலச நீருடன் தி.தி.தே. அர்ச்சகர்க்குழு, உயர் அதிகாரிகள்



கர்ப்பாலய சிகர மஹாசம்ப்ரோக்ஷணம்

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

## பிப்ரவரி 25 முதல் மார்ச் 06 வரை
## திருப்பதி
## கபிலதீர்த்தத்தில்
## ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமிக்கு
## நடைபெற்ற
## வருடாந்திர
## பிரம்மோத்ஸவ
## திருக்காட்சிகள்



ஸ்ரீ கபிலேஸ்வர ஸ்வாமி ஆலயத்தில் துவஜாரோஹணம்




ஹம்ச வாகனத்தில் ஸ்ரீ கபிலேஸ்வர ஸ்வாமி



அதிகார நந்தி வாகனத்தில் ஸ்ரீ கபிலேஸ்வர ஸ்வாமி
பக்கத்தில் காமதேனுவின் மீது ஸ்ரீகாமாக்ஷி தேவி



கல்பவிருக்ஷ வாகனத்தில் ஸ்ரீகாமாக்ஷி
உடனுறை ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி



பூத வாகனத்தில் ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி, ஸ்ரீகாமாக்ஷி தேவி



சூரியப்பிரபை வாகனத்தில் ஸ்ரீகாமாக்ஷி உடனுறை ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# பிப்ரவரி 24 முதல் மார்ச் 04 வரை ஸ்ரீநிவாசமங்காபுரத்தில் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமிக்கு நடைபெற்ற வருடாந்திர பிரம்மோத்ஸவ திருக்காட்சிகள்



ஸ்ரீ கல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயத்தில் துவஜாரோஹணம்



பெரிய சேஷ வாகனத்தில் உபய தேவியருடன்
ஸ்ரீ கல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி



சிம்ம வாகனத்தில் ஸ்ரீ கல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி



ஹம்ஸ வாகனத்தில் கலைமகள் கோலத்தில்
ஸ்ரீ கல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி



சூரியப்பிரபையில் பிரகாசிக்கின்ற ஸ்ரீ கல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி



கல்பவிருக்ஷ வாகனத்தில் கோரிய வரம்
அருளும் ஸ்ரீ கல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி



## திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸ்ரீவேங்கடேஸ்வரா சர்வஸ்ரேயஸ்சு அறக்கட்டளை

"மானிட சேவையே மாதவ சேவை" எனும் பெரும் நோக்கத்துடன் தி.தி.தேவஸ்தானம் பல்வேறு சமூக நலச் செயல்களை நிர்வகிக்கின்றது. இதில் ஒரு பகுதியாக ஆதரவற்ற சிறார்களுக்கு உதவிக்கரம் நீட்டும் நோக்கத்துடன் 1943–ஆம் ஆண்டு ஸ்ரீவேங்கடேஸ்வரா பால மந்திரம் (திருப்பதி) அறக்கட்டளையை தி.தி.தே. நிறுவியது. இந்த ஸ்ரீவேங்கடேஸ்வரா பால மந்திரம் அறக்கட்டளையோடு ஸ்ரீவேங்கடேஸ்வரா ஜலநிதி திட்டம், கல்யாணமஸ்து திட்டம், ஸ்ரீவேங்கடேஸ்வரா தகவல் தொழில் நுட்ப அறக்கட்டளை போன்றவற்றை இணைத்து "ஸ்ரீவேங்கடேஸ்வரா சர்வஸ்ரேயஸ்சு அறக்கட்டளை" யாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

## ஸ்ரீவேங்கடேஸ்வரா சர்வஸ்ரேயஸ்சு அறக்கட்டளையின் நோக்கங்கள்

01) ஆதரவற்ற சிறார்கள், முதியோர், ஆதரவற்றோர் பாக்கியமற்றோர், ஏழ்மையில் வாடும் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் போன்றோரின் வளர்ச்சி, பாதுகாப்பு நலனுக்காக தர்மசாலைகள், தங்கும் வசதி இல்லங்கள் ஏற்படுத்துதல். பொருளாதாரத்தில் பின் தங்கிய மாணவ மாணவியர்க்கு பண உதவி அளித்தல்.

02) மாற்றுத் திறனாளிகளுக்கும், மனவளம் குன்றிய நோயாளிகளுக்கும் தகுந்த மருத்துவ உதவிகள் உண்டு பண்ணி அவர்களின் வாழ்வினை மேம்படுத்துவது, குலம், மதம், ஜாதி, வர்க்கம், வர்ணம் போன்ற வேறுபாடுகள் கடைப்பிடிக்காமல் அனைவரையும் சமமாகப் பார்ப்பது.

03) வெள்ளம், வறட்சி போன்ற இயற்கைச் சீற்றங்கள், தீப் பிடித்தல் போன்ற எதிர்பாராத சம்பவங்கள் நிகழும் போதும் விரைவான உதவிகளை மேற்கொள்ளுதல்.

04) காது கேளாத, வாய் பேசாத குழந்தைகளுக்கும் மேற்படி குறைபாடுகளோடு பிறக்கும் சிசுக்களுக்கும் மறுவாழ்வு மையங்களை ஏற்பாடு செய்தல்.

05) மேற்குறிப்பிட்ட குறைபாடுகளோடு கிராமங்களில் உள்ள சிறுவர் சிறுமியர்களுக்குத் தேவையான கருவிகளை அளித்தலோடு, அவர்களுக்குக் கல்வி போதித்தல்.

06) மக்களுக்கு மிகவும் தேவையான குடிநீர் வசதியை ஏற்படுத்தித்தருதல், திருமலை பஞ்சாயத்து, திருப்பதி மாநகராட்சிக்குத் தேவையான நீர் வள ஏற்பாட்டிற்காக தடுப்பணைகளை ஏற்பாடு செய்வது, நீர் சேகரிப்பிற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.





07) புத்தகங்களுடன் இணைய தளம் முதலான அதி நவீன தொழில் நுட்ப உதவிகளோடு நம் நாட்டு வரலாறு மற்றும் பண்பாட்டு கலாச்சார பாரம்பரியத்தை அடுத்தத் தலைமுறைக்கு அளிப்பது.

08) சமுதாய ஒழுக்கம், அற நெறிமுறைகளை இளைஞர்களிடையே ஆன்ம நேய நம்பிக்கையை உண்டு பண்ணுதல்.

09) உதவிகரமான திருமண நிகழ்வுகள் மூலம் மண மக்களை கௌரவ அபிமானத்துடன், உயர் குடும்ப வாழ்க்கையை வாழும்படி செய்தல்.

10) மேற்குறிப்பிட்ட நோக்கங்களுக்கு ஊக்கமளித்திட தனி நபர்களுக்கும், நிறுவனங்களுக்கும் உதவி அளிப்பது.

## இத்திட்டத்தின் நன்கொடையாளர்களுக்கு...

01) இத்திட்டத்திற்கு குறைந்தபட்ச நன்கொடை ரூ.1,000/-

02) ரூ.1,000/-க்கு குறைவாக நன்கொடையளித்தால் எவ்விதத் தகவலும் இன்றி ஸ்ரீவாரி உண்டிக் கணக்கில் செலுத்தப்படும். பெறப்படும் நன்கொடைகளை தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் இருப்பு வைத்து அதிலிருந்து கிடைக்கும் வட்டியை இத்திட்டத்திற்கு உபயோகப்படுத்தப்படும். நன்கொடையாளர்கள்–"செயலாட்சித் தலைவர், ஸ்ரீவேங்கடேஸ்வரா சர்வஸ்ரேயஸ்சு அறக்கட்டளை, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி" எனும் பெயரில் காசோலை / வங்கி கேட்பு வரைவோலையை "பிரதான கணக்காளர், தி.தி.தேவஸ்தானம், திருப்பதி - 517 507" எனும் முகவரிக்கு அனுப்பவும்.

**மேலும் தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவும் : 0877-2264258**



# ஸ்ரீபத்மாவதி ஸ்ரீநிவாச பரிணயம்!!

தெலுங்கு மூலம் : திருமதி. எம். பத்மாவதி வெங்கடராமன்.
தமிழாக்கம் : திருமதி. எஸ். வைஷ்ணவி.

முன்பொரு காலத்தில் ஆகாசராஜன் யாகம் செய்ய ஆரணி நதிக்கரையில் உள்ள பூமியை உழும் போது தாமரைப் பூவின் மீது ஒரு பெண் குழந்தையை கண்டெடுத்தார். அந்த அழகிய பெண் குழந்தையைப் பார்த்து அளவற்ற மகிழ்ச்சியில் திளைத்தார். அந்த தெய்வாம்சம் நிறைந்த அப்பெண் குழந்தை பத்மத்தில் (தாமரை பூ) இருந்ததால் அக்குழந்தையை சாக்ஷாத் ஸ்ரீமஹாலக்ஷ்மி என எண்ணி "ஸ்ரீபத்மாவதி" என பெயர் சூட்டினார்.

ஒரு நாள் பத்மாவதி தன்னுடைய தோழிகளுடன் (பூங்கா)வனத்தில் உலாவிக் கொண்டிருந்தாள். அந்த வனப்பகுதியில் ஸ்வாமி குதிரை மீது ஏறி தன்னுடைய விலங்கினைத் தேடிக்கொண்டு அவர்கள் இருக்குமிடத்திற்கு வந்து சேர்ந்தார். ஸ்வாமி அங்கிருந்த பத்மாவதியின் தோழிகளிடம் "இந்தப் பகுதியில் ஏதேனும் விலங்கினைக் கண்டீரா?" என்று வினவினார்.

அதற்கு தோழிகள் "ஐயா! இந்தப் பகுதியில் ஆண்களுக்கு அனுமதி இல்லை என்று கூறினர். அப்பொழுது ஸ்வாமி பத்மாவதி தேவியைக் கண்டார். ஸ்வாமி அந்த அழகிய பெண் யார் என்று வினவினார். அதற்கு பத்மாவதி தேவி முதலில் நீங்கள் யார் என்று கூறுங்கள் என்றார். கீழ்கண்டவாறு அவர்கள் இடையே உரையாடல் நடைபெற்றது.

**ஸ்வாமி :** எங்களுடையது யது வம்சம். தந்தை பெயர் வசுதேவர். தாயாரின் பெயர் தேவகி. பல்குனன் என்னுடைய நண்பன். பாண்டவர்கள் என்னுடைய உறவினர். கிருஷ்ணபக்ஷத்தில் பிறந்ததால் என் பெயர் கிருஷ்ணன். என்னுடைய நிறம் கிருஷ்ண நிறம். இது என்னுடைய குலத்தின் விவரங்கள். ஓ பாமா! உன்னுடைய குலத்தின் விவரங்களைக் கூறுவாயாக.

**பத்மாவதி :** ஓ வேடுவனே! நான் ஆகாச ராஜனின் புதல்வி. என் பெயர் பத்மாவதி. எங்களுடையது சந்திர வம்சம். எங்கள் கோத்திரம் அத்ரி. என்னுடைய விவரங்களை அறிந்தாய் அல்லவா? நீ இங்கிருந்து வெளியேறிவிடு.

**ஸ்வாமி :** எதற்காக இப்படி கடினமாக பேசுகிறாய். நிதானமாக பேசு! நல்லவிதமான பேச்சு நன்மையை அளிக்கும். என்னை திருமணம் செய்து கொள். என்னுடைய விருப்பத்தை நிறைவேற்றுவாயாக!

**பத்மாவதி :** ஓ வேடுவனே! உனக்கு உன் உயிரின் மீது ஆசையில்லையா? என்னுடைய தந்தை ஆகாச ராஜன் உன்னைக் கொன்றாலும் கொல்லலாம். அதனால் இங்கிருந்து போய் விடு.

**ஸ்வாமி :** உன்னுடைய தந்தையான ராஜா என்னை எப்படி கொல்ல இயலும்? நீ ஒரு மணமகள். நான் ஒரு மண மகன். ராஜப்பார்வையில் இது நியாயம் தானே!

**பத்மாவதி:** நான் யாரென்று உனக்கு முழுவதுமாக தெரியாது. உன்னை பார்த்தவுடன் ஆகாச ராஜன் உனக்கு தவறாமல் தண்டனை கொடுப்பார். இது தான் நடக்க போகிறது.

**ஸ்வாமி :** ஓ தேவி! நான் எப்படியானாலும் மரணமடைவது உறுதி. ஆனால் பூர்வ ஜென்ம கர்ம பலனிலிருந்து தப்பிப் பது எவராலும் இயலாத ஒன்று. தர்ம நெறியில் இருக்கும் ஆகாச ராஜன் என்னை எவ்வாறு கொல்ல இயலும்?

**பத்மாவதி :** ஓ வேடுவனே! இனி உன்னை அந்த எம்பெருமான் தான் காப்பாற்ற வேண்டும். நல்லபடியாக நீ உன் இல்லத்திற்குச் செல். தாய்தந்தை, உறவினர்கள், சகோதரர்கள், நண்பர்கள் எல்லாரையும் விடுத்து நீ ஒருவனே எதற்காக தனியாக அலைகின்றாய்?

**ஸ்வாமி :** பிரம்மாவின் எழுத்து வீணாகாது. வெற்றி தோல்வி எப்படியிருந்தாலும் உன்னுடைய சுகமே எனக்கு பெரிது என்று சொல்ல, அதனை கேட்ட பத்மாவதி தன் தோழிகளின் உதவியால் ஸ்வாமியின் குதிரை மீது கற்கள் எறிய வைத்தாள். அதை பார்த்த ஸ்ரீநிவாசன் இன்னும் இங்கு இருந்தால் தனக்கு கூட ஆபத்து என்று அறிந்து அங்கிருந்து புறப்பட்டு சென்று விட்டார்.

அவ்வாறு பத்மாவதி ஸ்ரீநிவாசருடைய முதல் சந்திப்பு கோபதாபத்துடன் நடைபெற்றது. வகுளாதேவி சம்மதத்துடன் குறி சொல்லும் பெண்ணை ஸ்ரீநிவாசரின் தூதுவாக அனுப்பியது ஸ்ரீஸ்ரீநிவாசரின் பரிணயத்திற்கு அடிகோலியது. இந்த பரிணயத்திற்கு பிரம்மாதி தேவர் களும் வந்தனர். இவை யாவும் ஸ்வாமி வேங்கடாசலத் திற்கு வருவதற்கான முன்னேற்பாடுகள் தான். இந்த பரிணயத்திற்கு பின்னரே ஸ்வாமி வேங்கடாசலத்தில் எழுந்தருளினார். ஆனால் இந்த பரிணயத்திற்கு முதல் காரணமானவர் “குறிசொல்பவர்” மட்டுமே. அந்த “குறி சொல்பவர்” கதையில் தர்மசூக்ஷ்மங்கள் நிறைந்து உள் ளன. அவற்றை தெரிந்துக் கொண்டால் தான் பரிண யோத்ஸவத்திற்கு அர்த்தம் விளங்கும்.

### குறிசொல்பவராக ஸ்ரீநிவாசர் :

எம்பெருமானா குறிசொல்வது? பெரியோர்கள் இம் மாதிரியான வேலைகளில் ஈடுபடுவதை அவமான மாகக் கருதுவார்கள் அல்லாவா! ஆனால் காரிய சித்தி (வேலையில் வெற்றி) பெறுவதற்கு இவ்வாறு செய்வது தப்பில்லை என ஸ்வாமி நினைத்தார். பரிபூர்ணரான ஸ்வாமிக்கு இவ்விதமான பாகுபாடுகளும் அவமானங் களும் இருக்காது. காரிய சித்திக்காக எம்பெருமான் செய்த செயல் என பவிஷ்யோத்தர புராணம் கூறுகிறது.

### குறிசொல்பவர் பாத்திரத்தின் வர்ணனை :

ஸ்வாமி வயதான மூதாட்டி வடிவில் காணப்பட்டார். கிழிந்த புடவையுடனும், குண்டுமணி மாலையுடனும், பிரம்மாண்டத்தையே மூங்கில் கூடையாக செய்து தலை மேல் வைத்துக் கொண்டார். பிரம்ம தேவரை குழந்தை யாக மாற்றி தன்னுடைய புடவையின் இடையே தொங்க விட்டுக் கொண்டும், ருத்ரரை தனது கைப்பிரம்பாக செய்து கொண்டும், நாராயண புரத்தின் வீதியில் நுழைந் தார். பிரம்மாண்டத்தை எம்பெருமான் தனது விருப்பத் தின்படி மாற்றிக்கொண்டார். குழந்தையாக வேண்டு மெனில் குழந்தையாகவும், கைபிரம்பாக மாறவேண்டு மெனில் கைபிரம்பாகவும் பிரம்மனையும், சிவனையும் தன்னுடன் அழைத்து செல்வது சர்வோத்தம தத்துவத்தை மெய்ப்பிப்பது போன்ற பொருளை கொடுக்கிறது. அந்த குழந்தை பிரம்மாவின் அவதாரம் இல்லை. பூலோகத் தில் பிரம்மாவிற்கு அவதாரம் இல்லை. அந்த சமயத்தில் எம்பெருமானின் கட்டளையின்படி குழந்தையாக வடிவ மெடுத்தார்!

### குறிச்சொல்பவளின் சத்யநிஷ்டை :

குறிசொல்பவள் நாராயணபுர வீதிகளில் அலைந்து திரிந்து குறி கேளுங்கள்!குறி சொல்கிறேன்!! உங்கள் எதிர்காலத்தை உள்ளதை உள்ளபடி, இல்லாததை சொல்லாமல் சொல்கிறேன், யாருக்கு எது வேண்டு மெனிலும் அதை கொடுப்பேன் என்று பெரியதாக கூவிக் கொண்டு சென்றாள். அவ்வாறு அந்த குறிசொல்பவள் குறித்து தரணிதேவி என்ற ராணி விசாரித்தாள். தரணி தேவி அந்த குறிசொல்பவளை அழைத்து வருமாறு கூறி னாள். சென்று அழைத்ததால் அவள் அம்மாளிகைக்கு வர மறுத்தாள். என்னை கிண்டல் செய்வதற்காக கூப்பிடு கிறீர்களா? அவர்கள் என் போன்றவர்களை கௌரவிப் பார்களா? என பல்வேறு கேள்விக்கனைகளை தொடுத்து இறுதியில் மாளிகையை நோக்கி புறப்பட்டாள்.

அந்த குறிச்சொல்பவள் முதலில் தரணிதேவியை குளித்து விட்டு வரச் சொன்னாள். சாக்ஷாத் சர்வோத் தமனே ஆனாலும் குறிச்சொல்லும் முன்பு தேவர்களை நினைத்தார். உலகத்தை காப்பவனான லோகரக்ஷகன்

எல்லா தீர்த்தங்களையும், எல்லா க்ஷேத்திரங்களின் சிறப்புகளையும் நினைத்து பாடி, தன்னுடைய குறியைச் சொல்ல ஆரம்பித்தார். பிரம்மாதி தேவர்களை நினைத்து, இமய மலையில் உள்ள புண்ய க்ஷேத்திரங்கள், புண்ணிய நதிகளை நினைவில் கொண்டு, தன்னுடைய குழந்தையின் மேல் சத்தியம் செய்து சத்தியத்தையே சொல்வேன் எனக் கூறினாள்.

அவ்வாறு எதற்கு செய்ய வேண்டும்? அதாவது இறைவனின் அருள் இல்லாமல் எல்லாம் வீணே என்று சொல்வதற்காக இருக்கலாம். அவள் சொன்ன குறிக்கு அவளுக்கு வாக்குசுத்தி (வார்த்தையில் சுத்தம்) இருக்க வேண்டும். அவள் உண்மை சொல்ல வேண்டும். நடைபெற இருப்பதை சொல்ல வேண்டும். அதற்கு இறைவனின் அருள் இருந்தால் தான் சொன்ன சொற்கள் சத்தியமாகும். அந்த இறைவனின் பாதுகாப்பு அரண் இருந்தால் வித்தை தெரிந்தாலும் தெரியாவிட்டாலும் வார்த்தைகள் வருவது வரும்.

பண்டிதர்களானாலும், சாஸ்திர ஞானம் நிறைந்த முனிவரானாலும், அந்த இறையருள் இல்லாவிடில் வாயிலிருந்து வரும் வார்த்தைகள் சத்தியமற்றவையாகும். அந்த குறிசொல்பவள் சாக்ஷாத் வேங்கடேஸ்வர ஸ்வாமியே ஆனாலும் எல்லா தேவர்களையும் வணங்கி, நிறைவாக ஸ்ரீவேங்கடேஸ்வரரையும் வணங்கி குறி சொல்ல தொடங்கினாள்.

இவையெல்லாம் பக்தர்களுக்கு புரிவதற்காக இறைவன் நமக்கு அளித்த வழிமுறைகளாகும். அத்தகைய சத்திய நிதியை அவருடைய திருமணத்திற்காக வெளியிட்டார். ஆகையால் பத்மாவதி ஸ்ரீநிவாச பரிணயோத்ஸவத்திற்கு அவ்வளவு புகழ் ஏற்பட்டது என்பது சத்யம் நித்யம் என சொல்லலாம்.

**திருமலையில் நடைபெறும் பத்மாவதி ஸ்ரீநிவாச பரிணயோத்ஸவம் :**

பத்மாவதி ஸ்ரீநிவாச பரிணயோத்ஸவம் அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகனான, ஏழுமலைவாசனான ஸ்ரீஸ்ரீநிவாசனுக்கு ஸ்ரீதேவி பூதேவியுடன் (வைசாக சுத்த தசமி அன்று முடிவடையும் விதமாக) மூன்று நாட்கள் மிகவும் விமரிசையாக நாராயண உத்யானவனத்தில் அதிகாரி, அதிகாரியல்லாதவர்கள், பக்தர்கள் கூட்டத்தின் நடுவே இப்பரிணய உத்ஸவம் நிர்வகிப்பர்.

திருமலையில் மாலை பொழுது. பக்தர்கள் கூட்டத்தின் மத்தியில் வாத்தியங்கள் முழங்க, வேதங்கள் ஓத, பக்தர்கள் ஆயிரங்கண்களோடு பார்த்து மகிழ, திருமலையப்ப ஸ்வாமி யானை வாகனத்தின் மீது வெண்குடை சாமரத்துடன் த்வஜபடத்துடன் ராஜோபசாரத்துடன் வாகன மண்டபத்திலிருந்து புறப்பட்டு மஹா துவார கோபுரத்திற்கருகே வர, பின்னர் ஆலய பிரகாரத்திலிருந்து ஸ்ரீதேவி மற்றும் பூதேவி பல்லக்கில் வருவர்.

ஸ்ரீபூதேவியரை பார்த்து கொண்டு நிதானமாக நாராயண கிரி உத்யானவனத்திற்கு புது மணாளன் வருவார். அவ்வாறே திருமலையப்ப ஸ்வாமி இரண்டாம் நாள் குதிரை வாகனத்திலும், மூன்றாம் நாள் கருட வாகனத்திலும் எழுந்தருளுவார்.


**பரிணயோத்ஸவ விதிமுறைகள் :**

எதிர் எதிராக பீடத்தின் மீது எழுந்தருளிய ஸ்ரீபூதேவியர் மற்றும் திருமலையப்ப ஸ்வாமிக்கு முதன் முதலாக புஷ்பமாலை சமர்ப்பனை அர்ச்சகர்கள் நடத்துவர். இந்த புஷ்பமாலை மூன்று முறை நடைபெறும். அதாவது திருமலையப்ப ஸ்வாமியின் கழுத்தில் உள்ள மாலையை ஸ்ரீதேவிக்கும், ஸ்ரீதேவியின் தோள் மேல் உள்ள மாலை திருமலையப்ப ஸ்வாமிக்கும், அதே விதமாக திருமலையப்ப ஸ்வாமி மாலை பூதேவிக்கும், பூதேவியின் தோள் மேல் உள்ள பூமாலை திருமலையப்ப ஸ்வாமிக்கும் மாற்றுவர். இவ்விதமாக மூன்று முறை செய்வர்.

இதனை மாலை மாற்றுதல் அல்லது புஷ்பமாலை சமர்ப்பணை என்பர். அதன் பின்னர் வேதோபசாரணையுடன் புத்தாடைகளை அவர்களுக்கு (வஸ்த்திரம்) சமர்ப்பணை நடைபெறும். இவ்விதமாக பத்மாவதி பரிணயம் நிறைவடையும்.

ஸ்ரீபூதேவியருடன் ஒய்யாரமாக ஸ்ரீஸ்ரீநிவாசர் சேர்ந்து அர்க்ய, பாத்ய ஆசரணைகள், ஆசமனங்கள், நைவேத்திய உபசாரங்களை ஏற்று, ஆசார்ய வழியாக ருக்வேத, யஜுர் வேத, சாம வேத மற்றும் அதர்வண வேத உபசாரணைகளை மிகவும் அழகாக ஏற்று, மதுரமான சங்கீதங்கள், பரத நாட்டியங்கள் நிறைவடைந்த பின்னர் பிரதக்ஷிணமாக ஆலயத்திற்கு வந்தடைவார்.

இப்பரிணயோத்ஸவம் கோடி கன்னியாதானத்திற்கு சமமானது. அதை செய்தவருக்கு திருமலையப்ப ஸ்வாமி அனுக்கிரகம் கிடைக்கும். பக்தர்கள் இந்த உற்சவத்தை கண்டு உபயதேவியருடன் திருமலையப்ப ஸ்வாமியின் அருளைப் பெற வேண்டும்.




# அநுமனின் சரணாகதி

பிரச்சனைகளையும், அதனால் ஏற்படும் துன்பங்களையும் எதிர் கொள்ளாத மனிதனே இல்லை. பிரச்சனைகளைக் கண்டு ஓடி ஒளிய முடியாது. அவற்றை எதிர் கொண்டு அவற்றிற்கு தீர்வு என்ன என்பதை ஒரு கணம் உட்கார்ந்து அமைதியாகச் சிந்திக்க வேண்டும். வெறுமனே எல்லாவற்றுக்கும் பதட்டப்படுவதில் பலனில்லை.

இதற்கு உதாரணமாகத் திகழ்ந்தவன் அநுமன். தன்னை இராமனிடம் முழுமையாக அர்ப்பணித்த பக்தன் அவன். இராமனிடம் அவன் கொண்ட பக்தியும் பிரேமையும் அவனுடைய ஒவ்வொரு காரியத்திலும் ஆற்றலையும் உத்வேகத்தையும் அளித்தது. ஒவ்வொருவரும் அநுமனைப் போல இறைவனிடம் தன்னை முழுமையாக அர்ப்பணித்து காரியங்களைத் தொடங்கினால் வெற்றிகரமாக முடிக்க அவன் வழி காட்டுவான்.

அநுமன் இவ்வாறு இராமனிடம் தன்னை அர்ப்பணித்துக் கொண்டதாலேயே அவன் மேற்கொண்ட ஒவ்வொரு காரியத்திலும் வெற்றியை நிலை நாட்டினான். இத்தகைய முழு அர்ப்பணிப்பே சரணாகதி ஆகும். பகவானின் பாதங்களைப் பற்றியவனை ஆற்றல் மிக்க மானிடனாக மாற்றுவான் என்பதற்கு அநுமனே நல்ல உதாரணமாகும்.

இந்த சரீரம் நமக்கு இறைவனால் கொடுக்கப்பட்ட கொடையாகும். ஆகவே இதனை தகுந்த முறையில் போற்றிப் பாதுகாக்க வேண்டியது நமது பொறுப்பு. இச்சரீரத்தை வைத்து நம் வாழ்க்கையை ஆனந்தமாக, பிரேமையும் நேசத்தையும் பாசத்தையும் பிறருக்கு அளிக்க வல்லதாக மாற்ற வேண்டியது நம் கையில் தான் உள்ளது. ஒரு நாள் இந்த சரீரம் நம்மை விட்டுப் போய் விடும். நாமாகவே அதற்கு முன்னால் இறைவனிடம் நம் சரீரத்தை ஒப்படைத்து வாழ்க்கையை நெறிப்படுத்திக் கொள்ள வேண்டும். இதுவே அநுமன் நமக்குப் புகட்டும் பாடம்.

இவ்வுலகில் உள்ள எல்லா பொருட்களும் எல்லா உயிர்களும் இறைவனுக்கே உரிமையானவை. படைத்தவன் அவனே. நமக்கு எதிலும் உரிமை இல்லை. எனினும், நம் அறியாமையாலும் மயக்கத்தாலும் நாம் எல்லாவற்றுக்கும் சொந்தம் கொண்டாடுகிறோம். கொடுப்பதும் அவனே. எடுத்துக் கொள்வதும் அவனே. ஈசாவாஸ்ய உபநிஷத் கூறுவதும் இதுவே. இந்நெறியைக் கடைப்பிடித்தவன் அநுமன்.

சுயநலமின்றி இறைவனுக்குச் செய்யும் தொண்டே உண்மையான பக்திக்கு அடையாளம். எந்த எதிர்ப்பார்ப்பும் இல்லாமல் பகவானிடம் அன்பு செலுத்துகின்ற பக்தன் நிச்சயமாக மோட்சத்தை அடைய தகுதி பெற்றவன் ஆகிறான். அநுமனின் பக்தி இதற்கு தகுந்த உதாரணமாகும். இராமாயண கதாபாத்திரங்களிலேயே உயர்ந்து நிற்பவன் அநுமன்தான். அவனுடைய ஆழ்ந்த புலமை, பக்தியின் ஆழம் எல்லாம் மகத்தானவை.

தன்னுடைய புத்திக்கூர்மையாலும் தெளிந்த பேச்சாற்றலாலும் இராமனின் உள்ளத்தை கவர்ந்தவனாகி விட்டான். அது மட்டுமல்லாமல் தன் தேக வலிமையையும் நிரூபித்துக் காட்டினான். கடலைக் காற்றினும்

திரு. வி.பி. அர்த்தநாரி, கோவை.

வேகமாய்க் கடந்து சீதையை இலங்கையில் கண்டு அவளை இராமனிடம் சேர்த்து வைத்த பெருமை அவனையே சாரும். சஞ்சீவி மலையைக் கொணர்ந்து போரில் மாண்ட இலக்குவனையும் வானரப் படைகளையும் உயிர்ப்பித்தான். இப்படி மாபெரும் சக்தி படைத்திருந்தும் அவனுடைய பணிவும் தன்னடக்கமுமே அவன் பெருமையைப் பன்மடங்கு உயர்த்தின. எத்தகைய அகங்காரமுமின்றி எல்லா வெற்றிகளையும் இராமனுக்கே அர்ப்பணித்தான். நான் என்ற கர்வமின்றி ஒரு சிறந்த பக்தன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்று வாழ்ந்து காட்டியவன் அநுமன். எத்தகைய எதிர்ப்பார்ப்புமின்றி எல்லாப் பணிகளையும் வெற்றிகரமாக முடித்தான். உண்மையான கர்மயோகி அவனே. உண்மையான பக்தனும் பரிபூர்ண ஞானியும் அவனே.



பட்டாபிஷேகம் முடிந்த தருணம் சீதை அநுமனுக்கு அன்பளிப்பாக தன் கழுத்திலிருந்த முத்து மாலையைப் பரிசாக அளிக்க எண்ணி இராமனைக் கடைக்கண்ணால் நோக்கினாள். இராமன் சரி என மௌனமாய் அநுமதிக்க அந்த முத்து மாலையை அநுமனுக்கு அணிவிக்கிறாள் சீதா பிராட்டியார். இராமனையே சரணாகதி எனப் பணிந்த அநுமனின் ஆழ்ந்த பக்திக்கு இதை விடப் பெரிய பரிசு என்ன இருக்கப் போகிறது?

தன்னையே இராமனிடம் ஒப்படைத்த அநுமன் வழியை நாமும் பின்பற்றுவோம். இதுவே சரணாகதிக்கு இலக்கணமாகும். இதன் மூலம் நம் கவலைகள், ஏக்கங்கள், மன அழுத்தம், துன்பங்கள் அனைத்தும் தொலைந்து போகும். நாம் அவனைச் சரணடைந்தால் அவன் பாதுகாப்பில் நாம் இருப்போம். அதன் பின் இன்பமே. எந்நாளும் துன்பமில்லை.


திருமலை திருப்பதி தேவஸ்தானம்

**திருமலையில்**
**இரத்ததானம் செய்யுங்கள்!**
**திருமலையப்பனின் இறையருள் பெறுங்கள்!!**

- இரத்தம் தானத்தால் மட்டுமே வழங்க முடியும். இரத்தம் தேவைபடுபவர்களுக்கு அளிப்பதன் மூலம் ஒரு உயிரையும் காப்பாற்ற முடியும்.
- கலியுக வைகுண்டமான திருமலையில் இரத்த தானம் செய்வது புண்ணியமாகும்.
- திருமலை அஸ்வினி மருத்துவமனையில் தினமும் காலை 9.00 மணி முதல் 12.30 மணி வரை இரத்த தானம் அளிக்கலாம்.

தொலைபேசி எண் : 0877-2263601

**இரத்தம் தானம் செய்யுங்கள்!**
**ஆபத்தில் உள்ளோரை காத்திடுங்கள்!!**

- முதன்மை மருத்துவ அலுவலர்


கீதையில் பகவான்,

*தமேவ சரணம் கச்ச ஸர்வ பாவேந பாரத|*
*தத் ப்ரஸாதாத் பராம் சாந்திம் ஸ்தாநம்*
*ப்ராப்ஸ்யஸி சாச்வதம் ||*

(18–62)

என்கிறான். எவ்வகையேனும் அவனையே சரணடைவாய். அவனருளால் சாந்தியையும் அழிவில்லாத பதவியையும் அடைவாய் என்பது கண்ணன் வாக்கு.


அநுமனை வணங்கி வாழ்த்தி வாழ்வில் வளம் பெறுவோம்!

## 67. சாஸ்த்திர நீதிகள் :

வ்ருதா, வ்ருஷ்டி, சமுத்ரே, ச
வ்ருதா, த்ருப்தேது, போஜனம் |
வ்ருதா தனபதௌ, தானம்
தாரித்ரியோ யௌவனம் தத ||

மழையானது கடலில் எவ்வளவு பெய்தாலும் அது அவ்வளவும் விரயமாம்! பசியே இல்லாதவனுக்கு சாப்பாடு எவ்வளவு போட்டாலும் அதுவும் அவன் விரும்ப மாட்டான்! நல்ல பணம் உடைய பணக்காரனுக்கு தானம் கொடுப்பதும் பலன் தராது! நல்ல வசதிகள் இல்லாத தரித்திரனுக்கு இளமைக்காலம் வீணாகி விடுகிறது!

**தொகுப்பு : திருநாங்கூர் உ.வே. ஸௌந்திரராஜபட்டர், புதுடில்லி.**



# ஆதிசங்கரரும் பஜகோவிந்தமும்

திரு.வி. சீதாராமன், சென்னை

கேரள மாநிலத்தில் (அப்போது கேரளம் என்ற பெயரோ பிரிவினையோ கிடையாது. திரவிடம் என்று தற்போதைய தமிழ்நாடும், கேரளாவும் இணைந்த பிரதேசம்) காலடி என்ற க்ஷேத்திரத்தில், திருச்சூர் சிவாலாயத்தில் அருள் பாலிக்கும், வடக்கே நாதன் அருளால், ஆத்ரேய கோத்திரத்தில் உதித்த சிவகுரு – ஆர்யாம்பாள் என்ற உத்தம ப்ராஹ்மண தம்பதிக்கு, புத்திரனாக சங்கரன் என்ற திருநாமம் கொண்டு அவதரித்த மஹா ஞானி ஸ்ரீஆதி சங்கரர்.

ஆதி சங்கரரின் ஆயுள் 32 ஆண்டுகளே... இதற்கு ஒரு சுவையான பின்னணி உண்டு... அதனை அலசிவிட்டு ... பஜ கோவிந்தத்தில் பிரவேசிப்போம். சிவகுரு அபாரமான சிவ பக்தர். திருச்சூர் வடக்கே நாதரிடம் புத்ர ப்ராப்தி வேண்டி உருகி வேண்டுகிறார். ஒரு நாள் கனவில் இறைவன் தோன்றுகிறான். “உனக்கு மஹா ஞானியாக ஆனால் அல்ப ஆயுசுடன் ஒரு புத்ரன் வேண்டுமா? அல்லது பரம முட்டாளாக தீர்க்காயுசாக ஒரு புத்ரன் வேண்டுமா?”... என்று கேட்கிறார். எனக்கு என்ன வேண்டும் என்று நானறியேன்... எனக்கு அருளப்படும் வரம் எப்படி இருக்க வேண்டும் என்று... இறைவா... நீயே அறிவாய் என்கிறார் சிவகுரு.

பார் புகழும் பரம ஞானியாக எட்டே ஆண்டுகள் ஆயுசுடன் ஒரு புத்ரனை அருள்கிறார் ஈசன். எட்டே ஆண்டுகள் எவ்வாறு 32 ஆயிற்று? அவதார சங்கரரின் நான்கு வயதில் தந்தை சிவலோக பிராப்தி அடைந்தார். தாயார் ஆர்யாம்பாளின் வளர்ப்பில் எட்டு வயதினை எட்டிய சங்கரன்... தான் அவதாரம் செய்த கார்யம் நிறைவேற முடிவு செய்தான். சந்யாச ஆஸ்ரமம் மேற்கொள்ள தாயிடம் அனுமதி வேண்டுகிறான். எந்த தாயாவது மனம் ஒப்பி அனுமதி தரும் விஷயமா இது? ஆர்யாம்பாள் மறுக்கிறாள். ஒரு நாள் பூர்ணா நதியில் ஸ்நானம் செய்ய இறங்கும்போது ஒரு முதலை சங்கரனின் காலை கவ்வுகிறது. கரையில் இருந்த ஆர்யாம்பாள் அலறுகிறாள்... சங்கரனோ பதறவில்லை. தாயாரிடம் வரம் கேட்கிறான். தனக்கு சந்யாச ஆஸ்ரமம் மேற்கொள்ள அனுமதி கொடுத்தால் முதலை தன்னை விட்டு விடும் என்கிறான்.

புத்ரன் உயிரோடு இருந்தால் போதும் என்று வேறு வழி இன்றி அனுமதி அளித்தாள் ஆர்யாம்பாள். முதலை விட்டு விடுகிறது. சங்கரன் சந்யாச ஆஸ்ரமம் மேற்கொள்கிறான். சன்யாசம் என்பது மறு பிறவியே. அதனாலேயே பூர்வாஸ்ரம நாமத்தை துறந்து புதிய அடையாளம் மேற்கொள்வது. இத்துடன் எட்டு ஆண்டுகள் முடிவுற்றது. சந்நியாசியாக மறு பிறவி தொடர்கிறது. அதனால் எட்டு பதினாறு ஆகிறது. பதினாறு வயதிற்குள் பிரமிக்கும் படியான ஞானம் பெறுகிறார். ப்ரஹ்ம சூத்ரம் தசோப நிஷத்துக்கள், பகவத் கீதை ஆகிய கிரந்தங்களுக்கு விரிவாக பாஷ்யம் செய்து... அத்வைத தத்துவத்தை ஸ்தாபிக்கிறார். ஆத்ம போதம், விவேக சூடாமணி

போன்ற எண்ணற்ற ஆன்மீக நூல்களை பிரவாகமாக படைக்கிறார். பாரதம் முழுவதும் யாத்திரை மேற்கொள்கிறார். பதினாறு வயது நிரம்புகிறது. ஹிமாசல பிரதேசத்தில் பயணம், அப்போது சிஷ்யர்களுடன் தொடர்ந்த யாத்திரையில் குறுக்கிடுகிறார் ஒரு தேஜஸ் மிகுந்த ப்ராமணன். ஆசார்ய சங்கரரிடம் அற்புதமாக வாதம் புரிந்து அனைவரையும் வீழ்த்துகிறார். வந்தது சாக்ஷாத் வேத வியாசரே என்று உணர்கின்றனர். வியாச பகவான் அருளினார் – இன்றோடு உனக்கு பதினாறு வயது முடிந்தது. தேசம் முழுதும் சஞ்சாரம் செய்து மக்கள் அனைவரையும் ஆத்ம விசாரம் செய்து முக்தி அடையுமாறு யாத்திரை மேற்கொள்வாய்... என்று உபதேசம் செய்து அன்று முதல் மற்றுமொரு பதினாறு வயது ஆயுசை அருளினார். பதினாறும் பதினாறும் சேர்ந்து முப்பத்து இரண்டு ஆண்டுகள் ஆயுள் உருவானது. கலியுகம் 2625ம் ஆண்டு (கி.மு. 477 ஈஸ்வர வருஷம், சுக்ல பக்ஷ தசமி, பானு வாரம், திருவாதிரை நக்ஷத்திரம்) அன்று காஞ்சி காமாட்சியின் சந்நிதியில் இறை சக்தியுடன் கலந்து மறைந்தார்.



### பஜ கோவிந்தத்தின் தோற்றம் :

ஆதிசங்கரர் தனது யாத்திரையில் காசி க்ஷேத்திரத்திற்கு வருகிறார். அவருக்கு அநேக சிஷ்யர்கள். அதில் பதினான்கு பேர் முக்கியமானவர்கள். நான்கு பேர் மிகவும் புகழ் கொண்டவர்கள். 1. சுரேஸ்வரர் எனப்படும் மண்டன மிஸ்ரர் 2. பத்ம பாதர் எனப்படும் சனந்தனர் 3. தோடகாச்சார்யார் எனப்படும் கிரி 4. ஊமையாக இருந்து ஆச்சார்யாளின் அருளால் பேசும் சக்தி பெற்ற ஹஸ்தாமலகர்.

தனது சிஷ்யர்களுடன் காசி நகரத்தை சுற்றி வருகையில், வழியில் ஒரு இல்லத்தில் .... வயதான ஒரு வைதீகன்... *"டுக்ருங் கரணே"* எனப்படும் ஒரு சமஸ்க்ருத வியாகரண (இலக்கண) பாடத்தை நெட்டுருப்போட்டுக் கொண்டு இருக்கும் காட்சியை காண்கிறார்.

அந்த க்ஷணத்தில் மனத்தில் பல உணர்ச்சிகள் தெரிகின்றன. வாழ்க்கையின் இறுதிக்காலத்தில் இவ்வாறு சம்ஸ்க்ருத இலக்கண பாடம் ஒன்றை நெட்டுருப் போட்டுக் கொண்டு பயிற்சி செய்வதால் எந்த வித பயனும் இல்லையே. எதுவும் இந்த வயோதிகனைப் போல் எந்த ஒரு மனிதனையும் காப்பாற்ற இயலாதவையே... இதை எவ்வாறு புரிய வைப்பது? இது இந்த வயோதிகனுக்கு மட்டும் உள்ள தத்துவம் அல்லவே.... அறியாமையில் உழலும் அனைத்து மக்களுக்கும் புரிய வைக்க வேண்டுமே என்று ஒரு திட சித்தம் கொள்கிறார்.

யாரிடம் பேசுவது? இந்த மனிதனிடமா? அல்லது கூட்டமான மனித வர்க்கத்தினிடமா? மனுஷ்ய இனத்தின் பொதுவான "மனத்தினை – புத்தியை" நோக்கி அறிவுரை கூறினால் அனைத்து மனிதப் பிறவிகளுக்கும் பொருந்தும் அல்லவா... என்று தீர்க்கமான யோஜனை செய்து முதலில் பன்னிரண்டு சுலோகங்கள் உள்ள "பஜ கோவிந்தம்" என்ற ஸ்துதியினை அருளுகிறார். மனத்தினை நோக்கி பேசுவதால் "மூடமதே" என்று முழங்கினார்.

முதன் முதலில் ஆசார்யாள் அருளிய சுலோகங்கள் மொத்தம் பன்னிரண்டு. ஆகையினால் இது "துவாதச மஞ்சரிகா" என்றே அறியப்பட்டது. தொடர்ந்து ஆசார்யாள் அவ்வப்போது செய்த உபதேசங்களின் அடிப்படையில், கூட இருந்த சிஷ்யர்களும் ஆளுக்கு ஒரு சுலோகமாக அருளினர். பஜகோவிந்தம் என்பது 34 சுலோகங்கள் கொண்டது. ஆனால் வெகு சில பதிப்புகளில் மட்டுமே 34 பாடல்கள் காணப்பட்டன. தற்காலம் பல பதிப்புகளில் 31 பாடல்கள் மட்டுமே காணப்படுகின்றன. இந்த குறைகள் எவ்வாறு ஏற்பட்டது என்று ஆராய சாத்தியமில்லாமல் போய் விட்டது.

சங்கரர் ஒரு அத்வைதி ஈஸ்வரனின் கடாக்ஷத்தினால் ஜனித்தவர். இவர் ஏன் "பஜ கோவிந்தம்" என்று முழங்க வேண்டும். சங்கரரின் குரு "கோவிந்த பகவத் பாதர்" சங்கரரின் உபாசனா தேவதை ஸ்ரீகிருஷ்ணன். இவர் வழிபட்ட ஆலயம்தான் இன்றளவும் நாம் தரிசனம்

செய்யும் காலடியில் உள்ள ஸ்ரீகிருஷ்ணன் ஆலயம். ஸ்ரீகிருஷ்ணனுக்கு "கோவிந்தன்" என்ற நாமம் சூட்டி கோவிந்த பட்டாபிஷேகம் செய்தது தேவேந்திரன். ஸ்ரீமத் பாகவதத்தில் தேவேந்திரனின் செருக்கினை அடக்க கோவர்த்தன கிரியை தூக்கி ஏழு நாட்கள் நிறுத்தி மக்களை காப்பாற்றிய பின் .... தேவந்திரன் தனது தவற்றினை உணர்ந்து ஸ்ரீகிருஷ்ணனுக்கு "கோவிந்தன்" என்ற நாமம் சூட்டி கோவிந்த பட்டாபிஷேகம் செய்தான் என்பது வரலாறு. தவிர இன்னும் பல காரணங்களை அறிஞர் பெருமக்கள் ஆராய்ந்த வண்ணம் உள்ளனர்.

(அத்வைத சந்யாசிகள் .... சன்யாசம் மேற்கொள்ளும் சடங்குகளில்.... இறுதியாக ஸ்ரீமந்நாராயணனின் வடிவமான சாளக்ராமத்தினை சிரசின் மீது அபிஷேகம் செய்வார்கள். பின்பு தான் சந்யாச ஆஸ்ரமம் முறையாக துவங்கும். காஞ்சியில் உள்ள ஆசார்ய பரம்பரையினர் இன்னமும்... எந்த உபதேசத்தினை/உரையினை முடிக்கும் போதும்... "நாராயண... நாராயண" என்றே முடிப்பார்கள். இவ்வாறாக ஆழ்ந்து ஆராய்ந்த வண்ணம் உள்ளனர்.) நமக்கு இந்த ஆராய்ச்சிகள் எல்லாம் தேவையற்றவை. ஆச்சார்யர் பஜகோவிந்தம் என்று சொல்லி விட்டார். அதனை அப்படியே பின்போற்றுவோம்.

ஒவ்வொரு சுலோகமும் ஜ்வலிக்கும் ரத்தினங்கள் போன்றது. அவை அனைத்தையும் அலசுவதற்கு நிறைய நேரமும் பக்கங்களும் தேவைப்படும். ஆகையால் மிக முக்கியமாக மிளிரும் சிலவற்றினை இப்போது அனுபவிப்போம்.

**முதல் பாடலிலேயே ... காணப்படும் உபதேசம் :**

*"பஜ கோவிந்தம் பஜ கோவிந்தம் கோவிந்தம் பஜ மூடமதே |*
*ஸம்ப்ராப்தே சன்னிஹிதே காலே - நஹி நஹி ரக்ஷதி 'டுக்ருஞ் கரணே ||"*

வாழ்க்கையினை முடித்து காலன் உன்னை நெருங்கும் சமயம் எதுவும் உன்னை காப்பாற்றாது ... காப்பாற்றப்பட வேண்டுமென்றால் கோவிந்தனின் நாமம் கூறி வழிபடுவாய்... என்கிறார்.

*"மூட! ஜஹீஹி தநாகம த்ருஷ்ணாம் குரு சத்புத்திம் விஷய வித்ருஷ்ணாம் |*
*யல்லபஸே நிஜ கர்மோபாத்தம் வித்தம் தேந விநோதய சித்தம் ||"*

பொருள் சேர்ப்பதில் உள்ள பேராசைதனை முற்றிலும் நீக்குவாய். நேர்மையான, தர்மமான வழியில் ஈட்டப்பட்ட செல்வத்துடன் மனதில் நிறைவு கொண்டு வாழ்வாய். நேர்மையான வழி என்பது இந்த ஜன்மத்தில் தூய்மையாக ஆற்றும் கர்மாவினால் பெறப்படும் செல்வம் மட்டும் அல்ல. முன் ஜன்மத்தில் செய்த கர்ம வினை தொடர்பாக உனக்கு விதிக்கப்பட்ட அளவான வருவாய் என்றும் பொருள் கொள்கின்றனர் அறிஞர் பெருமக்கள். அதுதான் "நிஜ கர்மோபாத்தம்".

*"நாரீஸ்தநபர நாபீ தேசம் த்ருஷ்ட்வா மாகா மோஹாவேசம் |*
*ஏதந் மாம்ஸவஸாதி விகாரம் மநஸி விசிந்தய வாரம் வாரம் ||"*

பெண்களின் ஸ்தனங்கள், நாபிப்பகுதி போன்ற அழகில் வெறி கொண்டு எல்லை மீறாதே... இவை அனைத்தும் மாமிசம் ரத்தம் போன்ற பொருள்களின் மாறுபட்ட வடிவமே. இந்த உண்மைகளை மனதில் அடிக்கடி மீண்டும் மீண்டும் நினைவுறுத்திக் கொள்வாய். (வெறி கொள்ளாதே என்றால்... இயற்கையான விதிக்கப்பட்ட அளவை மீறி... மோகத்தை வளர்த்துக் கொள்ளாதே என்று பொருள்.)

*"நளிநீ தளகத ஜலமதி தரளம் தத்வத் ஜீவிதம் அதிசய சபலம் |*
*வித்தி வ்யாத்யபிமாந க்ரஸ்தம் லோகம் சோகஹதம் ச ஸமஸ்தம் ||"*

தாமரை இலையின் மீது உள்ள தண்ணீர் எந்த நிலையிலும் இருக்கும். நீர் இலையுடன் ஒட்டவே ஒட்டாது. ஆனால் இலையின் மேல் அங்கும் இங்கும் உருண்டு ஓடிக் கொண்டே இருக்கும். எந்த நிலையிலும் நீர் இலையுடன் ஒட்டாது. நீர் ஓடிய சுவடும் தெரியாது. அது போல் தான் இந்த உலகத்தில் உன்னுடைய வாழ்க்கையும், பல கட்டங்களில் நோய்களும் ஏமாற்றமும் துக்கமும் முழுவதுமாக நிறைந்தே இருக்கும். உனது அனைத்து ஆசைகளும் முயற்சிகளும் சோகமாகவே முடியும். இவ்வளவு துன்பங்களுடன் ஜீவித்து வாழ வேண்டும் என்ற ஆசை மட்டும் ஸ்திரமாக இருக்கும். இதை நன்கு உணரலாம்.

*"பாலஸ்தாவத் க்ரீடாஸக்த: தருணஸ் தாவத் தருநீ சக்த : |*
*வ்ருத்தஸ்தாவத் சிந்தாசக்த: பரே ப்ரஹ்மணி கோடபிநசக்த: || "*

இளமைப் பருவத்தில் சிறுவனாக இருக்கும் போது விளையாட்டு என்ற மனம் தான் தலை தூக்கி நிற்கிறது. வாலிபப்பருவத்தில் வாலிப சாஹசங்களில் மட்டுமே நமது முழு சக்தியும் செலவிடப்படுகிறது. வயது முதிர்ந்து விட்ட நிலையில் சிந்திக்க மட்டுமே இயலும். உடலின் வலிமையினால் எதுவுமே செய்ய இயலாத நிலை. மனம் மனம் என்று மனத்தினுடன் மட்டுமே உறவு நிலைக்கிறது. இவ்வாறாக எந்த ஒரு பருவத்திலும் நமக்கு மேல் நம்மை இயக்கும் இறை சக்தியை உணர யாருமே உந்தப்படுவதில்லை.



# ஸ்ரீமத்பாகவத கதை சாகரம்

## தக்ஷன் வேள்வியழித்தது

உலகத்தில் உள்ள பாவகாரியங்களில் மிகவும் கொடுமையானது வைஷ்ணவர்களை நிந்தனை செய்வதாகும். வைஷ்ணவர்களை அவமதிப்பவர்கள், அப்பாவச் செயலினால் உண்டாகும் பின் விளைவுகளிலிருந்து தப்பிக்கவே முடியாது. வைஷ்ணவன் என்பவன் யார்? எவனொருவன் விஷ்ணுவை பக்தியுடன் வழிபடுகின்றானோ அவனே வைஷ்ணவன் ஆவான். ஸ்ரீமத் பாகவதத்தில் பரமசிவன் சிறந்த வைஷ்ணவராகப் போற்றப்படுகிறார். சிறந்த வைஷ்ணவனாகிய ஒருவனை அவமதித்தால் அதனால் உண்டாகும் பேரழிவை விவரிப்பதே இந்த தக்ஷன் வேள்வியழித்தக் கதை. இது ஸ்ரீமத் பாகவதத்தில் நான்காம் ஸ்கந்தத்தில் சொல்லப்பட்டுள்ளது.

இக்கதை சிவபிரானின் பத்தினியாகிய சதிதேவியாருடன் ஆரம்பமாகிறது. சதிதேவி தக்ஷனின் மகளாவாள். சதிதேவி தன் கணவனின் தேவையறிந்து சேவை செய்து வந்தாள். சதிதேவிக்குக் குழந்தைப்பேறு இல்லை. அதற்குக் காரணம் அவள் இளமையிலேயே யோகத்தீயில் தன்னை எரித்துக் கொண்டதே ஆகும். குற்றமொன்றுமில்லாத தன் கணவனான சிவனை தன் தந்தை தக்ஷன் அடிக்கடி நிந்தனை செய்து வந்ததால் அந்த

தெலுங்கு மூலம் : டாக்டர். வைஷ்ணவாங்கிரி சேவக் தாஸ்.
தமிழாக்கம் : டாக்டர். சி. கோவிந்தசாமி.

அவமானத்தைத் தாங்கிக் கொள்ள முடியாமல் தன்னுடைய உயிரைத் தியாகம் செய்தாள். தக்ஷன் தன் மருமகனான சிவனை அடிக்கடி நிந்தனை செய்ததற்குக் காரணம் என்ன என்பதை நாம் அறிவது அவசியமாகிறது. ஒரு சமயம் பிரஜாபதிகள் எல்லோரும் ஒரு பெரிய வேள்வியைச் செய்யத் தொடங்கினார்கள். அந்த வேள்விக்கு மகரிஷிகளும், முனிவர்களும், தேவர்களும், பிரம்மா, சிவன் முதலானவர்களும் வந்து அமர்ந்திருந்தனர். அப்படியாக அனைவரும் வந்து அமர்ந்திருந்த அந்த வேளையில் தக்ஷ பிரஜாபதி அங்கு வந்தார். அங்கு அமர்ந்திருந்த அனைவரும் எழுந்து நின்று மரியாதை செய்தனர். சபாபதியான பிரம்மாவும் மிகவும் பணிவோடு தக்ஷனை வரவேற்றார்.

இப்படியாக எல்லோரும் எழுந்து நின்று தனக்கு மரியாதை செலுத்திய போதும், தன் மருமகன் பரமசிவன் மட்டும் ஆசனத்திலிருந்து எழாமல் அப்படியே அமர்ந்திருப்பதைக் கண்டு தக்ஷன் கடும் கோபமுற்றான். அந்தக் கோபத்தை அடக்கிக் கொள்ள முடியாத தக்ஷன் பரமசிவனை பலவிதமானகடும் சொற்களினால் நிந்தனை செய்தான். “இந்த சிவன் மரியாதை என்னவென்று அறியாதவன். இங்குள்ள அனைவரின் பெருமையையும் குலைத்தவன். அவையில் எப்படி நடந்துக் கொள்ள வேண்டும் என்று தெரியாதவன். சாதுவாக நடித்து இவன் என் மகளை மணந்து கொண்டான். என் தந்தையான பிரம்மதேவரின் ஆலோசனையின் பேரில் இவனுக்கு என் மகளைக் கொடுத்தேனே தவிர, நான் விருப்பப்பட்டு கொடுக்கவில்லை. இன்று முதல் வேள்விகளில் அவிர்ப்பாகம் பெறுகின்ற தகுதியை இழப்பானாக என்று சாபமிட்டான். இப்படியாகக் கடுமையாகச் சபித்த பின்பு



யார் தடுத்தும் நிற்காமல் சபையிலிருந்து சென்று விட்டான்.

பரமசிவனுக்கு சாபம் உண்டானதை அறிந்த நந்தீஸ்வரன் கோபக்கனலாக மாறினார். சிவனை நிந்தித்துப் பேசிய தக்ஷனனையும் சபையில் அவன் பேசவும் அவனைத் தடுக்காமல் கேட்டுக் கொண்டிருந்த அந்தணர்களையும் சபிக்கத் தொடங்கினார். “தன்னுடைய உடல் அழகில் கர்வம் கொண்டுள்ள அவன் மிக விரைவிலேயே ஆட்டு முகம் உள்ளவனாகட்டும். இங்குக் கூடியுள்ள அந்தணர்கள் எல்லோரும் வயிற்றுப் பிழைப்பின் பொருட்டே தன் தவவலிமையைப் பயன்படுத்தக் கடவர் என்றும், அவர்கள் பிச்சை எடுத்து உண்டு பிழைப்பாராக” என்றும் நந்தீஸ்வரர் சாபம் இட்டார். இந்த சாபத்தைக் கேட்டவுடன் பிருகு என்பவர் சிவனை ஆராதனை செய்பவர்களை மிகவும் கடுமையான வார்த்தைகளால் சபித்தார். சிவனை ஆராதனை செய்பவர்கள் வேத விரோதிகளான பாஷாண்டர்களாக மாறக்கடவர் எனச் சபித்தார். அதன் பின் பிரஜாபதிகள் அனைவரும் வேள்வியைப் பூர்த்தி செய்து, பின் தம்தம் இருப்பிடங்களுக்குச் சென்றனர்.

பிரஜாபதிகளுடைய வேள்வி முடிந்த பின்பும், சிவனுக்கும் தக்ஷனுக்கும் இடையே விரோதம் மட்டும் மறைந்த பாடில்லை. ஒரு சமயம் தக்ஷன் பெரிய வேள்வி ஒன்றைச் செய்யத் தொடங்கினார். அந்த வேள்விக்கு வரும்படி அனைவருக்கும் அழைப்பு விடுத்தான். ஆனால் சிவனை மட்டும் அவ்வேள்விக்கு அழைக்கவில்லை. அப்படியிருக்க, தேவாதி தேவர்கள் எல்லாரும் தம்தம் மனைவியர்களோடு தக்ஷனின் வேள்விக்குச் சென்று கொண்டிருப்பதைக் கண்ணுற்ற பரமசிவனின் மனைவியான சதிதேவி தானும் அவ்வேள்விக்குச் செல்ல வேண்டும் என விரும்பினாள். ஆனால் அதற்குப் பரமசிவன் சம்மதம் தெரிவிக்கவில்லை. தந்தையே ஆனாலும் கூட தம்மை அழைக்காதபோது அவர் இல்லம் செல்வது கூடாது என்பது சிவனின் வாதமாக இருந்தது. ஆனால், சதிதேவி அந்த வாதத்தை பொருட்படுத்தாது பிடிவாதமாக அவ்வேள்விக்குப் புறப்படத் தயாரானாள். இனி தான் செய்வது ஒன்றுமில்லை என உணர்ந்து, தனியாகச் செல்லத் துணிந்த அவளுடன் தன்னுடைய பூதகணங்களையும், நந்தீஸ்வரரையும் துணைக்கு அனுப்பி வைத்தார். வேள்விக்குச் சென்ற சதிதேவியை அங்குள்ள எவரும் அழைக்கவில்லை. தாயும், சகோதரிகளும் கூட தக்ஷனின் கோபத்திற்கு ஆளாக நேருமே எனக் கருதி வாய் திறந்தும் பேச வில்லை. தந்தையான தக்ஷன் கூட அவளைக் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை. அதுமட்டும் அல்லாமல் அங்கு நடைப்பெற்றுக் கொண்டிருந்த வேள்வியில், சிவபெருமானுக்கு வழங்கப்பட வேண்டிய அவிர்ப்பாகம் வழங்கப்படாமல் இருப்பதை சதிதேவி கண்டாள். தன்னுடைய கணவரான சிவனுக்குத் தகுந்த மரியாதை கிடைக்காததைக் கண்டு பெரும் கோபம் கொண்டாள். சிவ நிந்தனை செய்த தக்ஷனிடமிருந்து உண்டான உடலை அழித்துக் கொள்வதற்குத் துணிந்தாள். உடனே யோகத் தீயை மூட்டி அதில் தன் உடலை எரித்து சாம்பலாக்கி விட்டாள். இவ்வாறு சதிதேவி மறைந்தவுடன் சிவ கணங்கள் கோபம் கொண்டு அங்கிருந்தவர்களைத் தாக்கத் தொடங்கினர். இதனைக் கண்ட பிருகு முனிவர் மந்திரங்களை உச்சரித்து ஹோமம் செய்தார். அதிலிருந்து தோன்றிய ஆயிரக் கணக்கான ருபுக்கள் என்ற தேவர்கள் பூதகணங்களைத் துரத்தியடித்தனர். இச்செய்தி சிவபெருமானுக்குத் தெரிய வந்தது.

சிவபெருமான் மிகவும் கோபம் கொண்டார். உடனே தன் ஜடாமுடியான ஜடையிலிருந்து ஒரு முடியை அடி

யோடு பிடிங்கி பூமியில் அடித்தார். அதிலிருந்து மிகவும் கொடூரமான பார்ப்பதற்கு மிகவும் பயங்கரமான உருவம் கொண்ட வீரபத்திரன் தோன்றினான். அவன் சிவபெருமானின் ஆணையை ஏற்று தக்ஷன் வேள்வி செய்யும் இடத்திற்கு வந்து அங்குள்ள அனைத்தையும் அழிக்கத் தொடங்கினான். வீரபத்திரனின் கால் அடி பாரத்தைத் தாங்காது பூமி அதிர்ந்தது. சிறிது நேரத்திற்குள்ளாகவே வேள்வி நடைப்பெற்றுக் கொண்டிருந்த இடம் சின்னா பின்னமாகச் சிதறிப் போனது. எல்லா வேள்விக்குண்டங்களிலும் எரிந்து கொண்டிருந்த அக்னி அணைந்து போனது. மண்டபங்கள் அனைத்தும் நொறுங்கிப் போயின. அப்பொழுது வீரபத்திரன் பிருகுவை பிடித்துக் கொண்டு அவருடைய மீசையைப் பிடிங்கி எறிந்தான்.

தக்ஷன் சிவநிந்தனை செய்தபோது கண்ஜாடைக் காட்டிய பகன் என்பவனின் கண்கள் இரண்டையும் பிடிங்கி எறிந்தான். சிவ நிந்தனை செய்த சமயத்தில் ஏளனமாகப் பார்த்து சிரித்த பூஷா என்பவனின் பற்களை வீரபத்திரன் உடைத்து நொறுக்கினான். இவ்விதமாக சிவநிந்தனையின்போது நேரடியாகவும் மறைமுகமாகவும் அதில் பங்கு கொண்டவர்களுக்குத் தகுந்த தண்டனை கொடுக்கப்பட்டது.

பின்னர் வீரபத்திரன் தக்ஷனைக் கீழே தள்ளி அவன் மார்பில் ஏறி அமர்ந்து வேள்வியில் பசுக்களைப் பலியிடுவதற்காகப் பயன்படுத்தப்படும் மரக்கொம்பாலான ஆயுதத்தால் தக்ஷனின் தலையைத் துண்டித்தான். துண்டித்த அத்தலையை ஹோமாக்கினியில் எறிந்தான்.

இதைக் கண்ட மற்ற ருத்விக்குகளும், வேத விற்பன்னர்களும் தேவர்களும் நடுநடுங்கிப்போய் பிரம்ம தேவரிடம் சென்று அங்கு நடந்தவை அனைத்தையும் எடுத்துக்கூறி முறையிட்டு நின்றனர். அனைத்தையும் கேட்டறிந்த பிரம்ம தேவர் அவர்கள் அனைவரையும் அழைத்துக் கொண்டு கைலாயத்திற்குச் சென்றார். அங்கு சிவபெருமான் நீண்ட தியானத்தில் அமர்ந்திருந்தார். தர்ப்பாசனத்தில் அமர்ந்திருந்த சிவபெருமான் பிரம்மாவைக் கண்டவுடன் மிகவும் பணிவோடு எழுந்து நின்றார். பின்னர், பிரம்மா, தேவர்களின் நிலையை எடுத்துக் கூறி, தக்ஷன் தொடங்கிய வேள்வியை முழுமையடையச் செய்து, உங்களுக்குச் சேர வேண்டிய அவிர்ப் பாகத்தையும் பெற்றுக் கொள்ளும்படி அறிவுறுத்தினார்.

பிரம்ம தேவர் பேசிமுடித்த பின்னர், பரமசிவன் “விவேகம் இல்லாதவர்களைச் சரி செய்யும் பொருட்டே தான் இவ்வாறு செய்தேன்” என்று பதில் அளித்தார். மேலும், தக்ஷனின் தலை வேள்வித் தீயில் பொசுங்கி விட்டது. எனவே இனி ஆட்டின் தலையுடன் அவன் உயிர் பெற்று வாழ்வான் என்று கூறினார்.

அதே போன்று மற்றும் உள்ளவர்கள் அனைவரும் கூட முன்பிருந்த நிலையைப் பெறுவார்கள் என்று ஆறுதல் கூறினார். சிவனுடன் சேர்ந்து எல்லோரும் வேள்விச் சாலைக்குச் சென்றனர். சிவனுடைய ஆணைப் படி ஓர் ஆட்டின் தலையைக் கொண்டு வந்து இறந்து கிடந்த தக்ஷனின் தலையற்ற உடலுக்குப் பொருத்தி உயிர் பெறச் செய்தனர். உயிர் பெற்று எழுந்த தக்ஷன் தான் ஆட்டுத் தலையுடன் இருப்பதைக் கண்டு மிகவும் வருந்தினான். தன்னுடைய மகள் சதிதேவி உடல் தியாகம் செய்ததை எண்ணிக் கண்ணீர் விட்டு அழுதான். தனக்கு ஏற்பட்ட இந்த இழி நிலைக்குக் காரணம் தான் செய்த சிவநிந்தனையே ஆகும். சிவனை அவமதித்ததால் வந்ததே இத்துன்பம் என்பதை உணர்ந்து கொண்டான். பின்னர் தக்ஷன் பரமசிவனை நோக்கி தன் குற்றத்தை மன்னிக்கும்படி மிகவும் பணிவுடன் வேண்டினார்.

கருணை வடிவமான சிவன் அவனை ஆசிர்வதித்தார். பின்னர் புரோகிதர்கள் வேள்விச் சாலையை பவித்திரமாக்கி வேள்வியைப் பூர்த்தி செய்தார்கள். வேள்வி நல்லபடியாக முழுமையடைந்த உடனே ஆதி நாரயணனாகிய மகாவிஷ்ணு அங்கே வருகை புரிந்து அருளினார். அங்கு கூடியிருந்த தேவர்கள் அனைவரும் அவருக்கு பணிவுடன் வணக்கத்தை செய்தனர். வேள்வியை பூர்த்தி செய்த தக்ஷனனை ஸ்ரீமந்நாராயணன் ஆசிர்வதித்தார்.

பின்னர் தக்ஷன் பிரம்மா, ருத்திரன் இருவரையும் வணங்கி அவர்களுக்கு உரிய அவிர்ப்பாகத்தை அளித்தான். வேள்வி முடிந்த பின்னர் தேவர்கள் அனைவரும் தக்ஷனை ஆசிர்வதித்தார்கள். வேள்விச் சாலையில் உடல் தியாகம் செய்த சதிதேவி மீண்டும் இமவான் என்பவனுக்கு மகளாகப் பிறந்து, வளர்ந்து மீண்டும் பரம சிவனையே மணந்து கொண்டாள். சிவநிந்தனையால் ஆட்டுத் தலையைப் பெற்ற தக்ஷன் அந்த உடலை அழித்து மாரீச கர்ப்பத்தில் பிறக்க வேண்டியதாயிற்று. இந்த தக்ஷன் வேள்வியை அழித்த வரலாற்றைக் கேட்பவர்கள், கீர்த்திப்பவர்கள் எல்லா பாவங்களிலிருந்தும் விமுக்தி அடைவார்கள் என்று பலசுருதியில் கூறப்பட்டுள்ளது.

பாகவத கதை சாகரம் தொடரும்...

# அக்ஷய திரிதியை



செல்வன். அனிருத் கிருஷ்ணன்
கேரளா.

அப்பா : கிருஷ்ணர் கோயிலில் சந்தன காப்பும் தயிர் சாத அன்னதானம் பண்ண நினைத்திருக் கிறேன்.

அம்மா : என்றைக்கு?

அப்பா : அக்ஷய திரிதியை அன்று.

ராம் : அக்ஷய திரிதியை என்பது என்ன?

அம்மா : அந்த நாள் இந்துக்களுக்கும், சமணர்க ளுக்கும் மிக முக்கியமான நாளாகும்.

ராம் : அந்த நாள் என்ன சிறப்பு?

அப்பா : மஹா விஷ்ணுவின் அவதாரமான பகவான் பரசுராமர் அவதரித்தார்.

ராம் : தசாவதாரத்தில் ஒருவர் பரசுராமர். அவர் மிகவும் கோபம் கொண்டவர் அல்லவா.

அம்மா : அப்படியல்ல. அவர் அரசர்களை ஒழுங்கு படுத்த அவ்வாறு செய்தார். அதர்மத்தை நீக்கி தர்மத்தை நிலைநாட்டினார்.

ராம் : அவதாரம் என்றால் அவ்வாறு தர்மத்தை நிலை நாட்டுவது ஆகும். நன்று.

அப்பா : இக்ஷ்வாகு வம்சத்தில் தோன்றிய பகீரத மஹாராஜா, உலக நன்மைக்காக ஆகாய கங்கையை பூமிக்கு கொண்டு வந்த நாளுமாகும்.

ராம் : பகீரத தவம் என்று கூறுவார்கள். மிக கடுமையான தவம் அல்லவா?

அம்மா : ஆமாம் ஒரு காரியம் செய்யும் போது அதுவும் உலக நன்மைக்காக செய்யும் போது மிக கடின மாக இருந்தாலும் ச்ரத்தையாக செய்தால் பல நன்மைகள் நடக்கும்.

ராம் : பகீரத சக்ரவர்த்தி, இராம பிரானின் மூதாதியர் அல்லவா?

அப்பா : ஆமாம்.

அம்மா : மஹாபாரதத்தில் கண்ணபிரான் பாஞ்சாலியின் மானம் காக்க பல புடவைகள் தந்தான்.

ராம் : அக்ஷயம் போல் புடவைகள் சுரந்தன அல்லவா.

அப்பா : உண்மை! அக்ஷயம் என்றால் குறையாதது.

அம்மா : பாண்டவர்கள் காட்டில் வாழும்போது, உணவுக் காக சூரிய பகவான் “அக்ஷய பாத்திரம்” ஒன்றை கொடுத்தார்.

அப்பா : அப்பாத்திரம் அள்ள அள்ள குறையாது உணவை அளிக்கும். அவ்வாறு பாண்டவர் தங்களுக்கு மட் டும் அல்லாமல் ரிஷி முனிவர்களுக்கும் விருந் தோம்பல் செய்தார்கள்.

ராம் : விருந்தோம்பல் என்பது சாலச் சிறந்தது. இந்த நாளில் அந்த பாத்திரம் கிடைத்ததா?



அப்பா : ஆமாம்! அதனால் தான் நாம் இந்நாளில் தானம் செய்ய வேண்டும்.

அம்மா : சுதாமா என்ற குசேலர், கண்ணனின் சிறு வயது நண்பன். அவர் மிகவும் ஏழையானவர்.

ராம் : எனக்குத் தெரியும். கண்ணன் ஒரு பிடி அவலை அவரிடமிருந்து வாங்கி அவருடைய தரித்திரத்தை விரட்டினார்.

அப்பா : குசேலருக்கு சுபிக்ஷம் உண்டான நாளாகும்.

அம்மா : வேதவ்யாசர் கணபதிக்கு மஹாபாரதம் எழுதும் படி கூறிய நாளுமாகும்.

ராம் : அதனால் தான், மஹாபாரதம் மிக சிறந்த தர்ம வழிகாட்டி நூலாகவும் விளங்குகிறது.

அப்பா : காசியில், மஹாதேவர் காசி அன்னபூரணி தேவியிடம் பிக்ஷாண்டனார் கோலம் பூண்டு பிக்ஷை வாங்கிய நாளாகும்.

அம்மா : அதனால்தான் இந்நாள் உணவு, செல்வம் என்று பல வளங்கள் கண்ட நாளாகும்.

அப்பா : குபேரன், மஹாலட்சுமியை பூஜித்து பல செல்வங்களைப் பெற்ற நாளாகும்.

ராம் : இந்நாளில் விரதம் ஏதாவது உண்டா?

அப்பா : மஹாவிஷ்ணுவிற்கு சந்தன அலங்காரம் செய்தால் வைகுண்ட ப்ராப்த்தி கிட்டும்.

அம்மா : நாம் சங்கீர்த்தனம், பூஜைகள் செய்து பகவானை தியானிக்க வேண்டும்.

ராம் : ஆம் அம்மா, நாமும் செய்வோம். இந்த நாள் தமிழ் மாதம் சித்திரையில் வருகிறது.

அம்மா : வங்காள தேசத்தில் கணபதிக்கும் லக்ஷ்மிக்கும் சிறப்பு பூஜை இதுபோது நடக்கும்.

ராம் : ஆனால், நாம் தயிர்சாதம் நைவேத்தியம் செய்கிறோம்.

அம்மா : ஆமாம். அதுவும் சாலச் சிறந்தது. வஸ்திர தானம், அன்ன தானம், பொன்தானம் என்று எந்தவித தானங்கள் கொடுத்தலும் அது பன்மடங்கு நன்மை அளிக்கும்.

ராம் : நாமும் அவ்வாறு செய்வோம் அம்மா.


**திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி**

**ஸப்தகிரி சந்தாதாரர்களுக்கு விண்ணப்பம்**

- "ஸப்தகிரி" மாத இதழ் தொடர்பான ஆலோசனைகள்/அறிவுரைகள்/புகார்களை sapthagiri_helpdesk@tirumala.org வாயிலாக தெரியப்படுத்தவும்.
- ஸப்தகிரி சந்தாதாரர்கள் தயவு செய்து முகவரியை முறைபடுத்துவதன் பொருட்டு 0877-2264543 தொலைபேசி எண்ணிற்கு தங்கள் முழு முகவரி, அஞ்சல் எண், செல்போன் எண்ணை அலுவலக பணி நாட்களில் (காலை 10:30 மணி முதல் மாலை 5:00 மணிக்குள்) மீண்டும் ஒரு முறை தெரியப்படுத்தவும்.
- மேற்குறிப்பிட்ட தொலைபேசி எண் வாயிலாக மட்டுமின்றி sapthagiri_helpdesk@tirumala.org க்கு இமெயில் அனுப்புவதன் வாயிலாகவும் தெரிவிக்கலாம்.
- ஆன்லைன் சந்தாதாரர்கள் தங்களுடைய முழு முகவரியை தி.தி.தே. இணையதளத்தின் வாயிலாக கட்டாயம் தெரியப்படுத்தவும்.

–பிரதான ஆசிரியர்

தொடர்

# அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்திருநாமமும் உரையும்

உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை.


நம்மாழ்வார் வாழித் திருநாமம் தொடர்ச்சி...

*" மேதினியில் வைகாசி விசாகத்தோன் வாழியே*
*வேதத்தைச் செந்தமிழால் விரித்துரைத்தான் வாழியே*
*ஆதிகுருவாய்ப் புவியில் அவதரித்தான் வாழியே*
*அனவரதம் சேனையர்கோன் அடிதொழுவோன் வாழியே*
*நாதனுக்கு நாலாயிரம் உரைத்தான் வாழியே*
*நன் மதுரகவி வணங்கும் நாவீறன் வாழியே*
*மாதவன் பொற்பாதுகையாய் வளர்ந்தருளுவோன் வாழியே*
*மகிழ்மாறன் சடகோபன் வையகத்தில் வாழியே."*

(பதவுரை) மேதினியில் – பூமியில், வைகாசி – வைகாசி மாதத்தில், விசாகத்தோன் – விசாக நக்ஷத்ரத்தில் உதித்தவர். –வேதத்தை, – செந்தமிழால் –கலப்பற்ற தூய தமிழால், விரித்து உரைத்தான் – விரிவாக விளங்க உரைத்தான். ஆதிகுருவாய் –முதல் ஆசார்யனாய், புவியில் –பூமியில், அவதரித்தான் –தோன்றினார். அனவரதம் – எப்போதும், சேனையர்கோன் –நித்ய சூரிகளுக்குத் தலைவன், அடி – திருவடியை, தொழுமவன் –வணங்குபவன். நாதனுக்கு –ஸ்ரீமந் நாதமுனிகளுக்கு, நாலாயிரம் –நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தை, உரைத்தான் –உபதேசம் செய்தவர். நன் மதுரகவி –சான்றோரான மதுரகவி ஆழ்வார், வணங்கும் –அடி பணியும்படியான, நாவீறன் – பேச்சு வன்மைபடைத்தவரான நம்மாழ்வார். மாதவன் –திருமகள் கேள்வனான எம்பெருமான், பொற்பாதுகையாய் –விரும்பத்தக்க திருவடிகளாய், வளர்ந்து அருளுவோன் –கொண்டாடப்படுபவர். மகிழ் மாறன் – மகிழ மாலையை அணிந்தவரான மாறன், சடகோபன் நம்மாழ்வார், வையகத்தில் –இந்தப் பூமியில், வாழ்க –வாழ வேண்டும்.

(சிறப்புரை) (*மேதினியில் விசாகம்*) மேதினீ–வட சொல். திருமால் மதுகைடபர்களைக் கொல்லும்போது அவர்கள் உடலிலிருந்த மேதஸ்ஸு (கொழுப்பு) பட்டதன் காரணத்தால் பூமிக்கு மேதிநீ என்று பெயர். மேதினி – ஸப்ததீபவதியான மேதிநி என்பர் பிள்ளான் (திருவா. 4.1.1). ஏழு தீபங்களாவன –ஜம்பு, ப்லக்ஷ, சால்மலி, குச, க்ரௌஞ்ச, சாக, புஷ்கர ஆகிய ஏழு தீவுகளையுடையது. இந்த பூமியில் விசாகத்தில் அவதரித்தவர் ஆழ்வார். விசாகம் நக்ஷத்ர வரிசையில் பதினாறாவதாகும். நக்ஷத்ர மாலிகையில் ஜீயர் நாயனார் நம்மாழ்வாருடைய கணைக்காலிலே ஈடுபட்டுச் சொல்லும்போது *"விஸ்தீர்ணச்ச விசாகயா"* (16) என்று அநுபவிப்பார். அதாவது சாகை என்பது பரம்பரையைச் சொல்லும். காந்தி பரம்பரைகள் பரம்பியிருக்கும். மரமானது பல கிளைகளை யுடையதாகும். அவ்வாறு நம்மாழ்வாராகிற கல்பக மரம் பல கிளைகளை – பரம்பரைகளை உடையதாகும் என்பர். நல்ல நடத்தையுடையது என்றபடி.

(*வேதத்தைச் செந்தமிழால் விரித்துரைத்தது*) வேதம் –எழுதாக்கிளவி. மறை. உபநிடதம். "*வேதத்து மறை நீ*" என்றது பரிபாடல். வேதத்திலே பரமபதம், விரஜை நதி, எம்பெருமான் திருவடிகள் பற்றி உப



நிடதம் ஓதினாப்போலே ஆழ்வாரும் அருமறையின் கருத்தான திவ்யதேச, திவ்ய நகர, திவ்ய நதிகளின் வைபவத்தையும் திருவாய்மொழி வாயிலாக செந்தமிழில் வெளியிட்டார். செந்தமிழாவது –செவ்வையான தமிழ். கலப்பற்ற பசும் தமிழ் என்றவாறு. யாஜ்ஞுவால்க்ய ப்ரஹ்ம உபநிஷத்தில், *''த்ராமிடீம் ப்ரஹ்மஸம்ஹிதா: சத்வாரோ வேதா: பவந்தி| தேவை சத்வாரோ வேதா: நாராயணாம்ச பூத சடாரிணா ப்ரகாச்யந்தே||''* என்கிறபடியே "திராவிட ப்ரஹ்ம ஸம்ஹிதைகள் நான்கும் நான்கு வேதங்களாகும். அந்த வேதங்கள் நான்கும் நாராயணனின் அம்சமான நம்மாழ்வாரால் வெளிப்படுத்தப்படுகின்றன" என்று அருளியது காண்க.

பராங்குச அஷ்டகத்தில் யச் ச்ருதே உத்தரம் பாகம் *''சக்ரே த்ராவிட பாஷயா''* என்று அருளியபடியே நம்மாழ்வார் வேதத்தின் உத்தரகண்டமாகிய உபநிஷத்தைத் தமிழ்மொழியினால் வெளியிட்டருளினார். *''வேதம் தமிழ் செய்த மாறன் சடகோபன்''* என்று மதுரகவிகள் அருளியதைக் கண்ணிநுண் சிறுத்தாம்பு பிரபந்தத் தனியனில் நாதமுனிகள் அருளியதும், *''அருளினான் அவ்வருமறையின் பொருள் அருள் கொண்டு ஆயிரம் இன்தமிழ் பாடினான்''* என்று மதுரகவிகளும் அருளியதும் காண்க.

அழகிய மணவாளப் பெருமாள் நாயனாரும் ஆசார்ய இருதயத்தில் நம்மாழ்வாரின் நான்கு பிரபந்தங்களும் நான்கு வேதம் என்பதற்குச் சேர "இயற்பா மூன்றும் (திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி) வேதத்ரயம் போலே. பண்ணார் பாடல் (திருவாய்மொழி) *''பண்புரையில் கொள் வேதம் போலே''* என்று அருளியது காண்க. மாமுனிகளும் உபதேசரத்தின மாலையில் *''வேதம் தமிழ் செய்த மாறன்''* என்று அருளினார்.

வேதத்தைத் தமிழ் செய்கையாவது –வேதமானால் உரிமை உடையவற்கு மட்டுமே உரிமையாய் இருக்குமாகையால், எல்லா அறிவுள்ள ஆத்மாக்களுக்கும் கற்று உய்விக்க முடியாது என்று எல்லாருக்கும் உரியதாய் எல்லாருக்கும் பயன் படுவதாயிருக்கும்படி தமிழ் மொழி சேர்த்தியாலே வேதத்தின் பொருளை விளக்கமாக்கி ஆழ்வார் அருளிச் செய்த படி. *"உயர்வே பரன்படியை உள்ளதெல்லாம் தான் கண்டு உயர் வேத நேர் கொண்டு"* என்று மாமுனிகள் திருவாய்மொழி நூற்றந்தாதியில் வேதப்பொருளைத் தமிழில் ஆழ்வார் அருளியதைச் சொல்லுவதும் காணலாகும். *''ஸ ஏகோ ப்ரஹ்மண ஆநந்த:''* என்ற தைத்திரீய உபநிடத வாக்யத்தை *''உயர்வற உயர்நல முடையவன்''* என்றும், *''யதா கப்யாஸம் புண்டரீகம் ஏவ மமக்ஷிணீ''* என்ற சாந்தோக்ய உபநிடதத் தொடருக்குச் சேர *''செய்யதாமரைக் கண்ணனாய்''* என்றும் ஆழ்வார் அருளியது காண்க. இங்ஙனே பல உள. விரிப்பில் பெருகும்.

(ஆதிகுரு) –ஆதி – ப்ரதம: முதல் குரு. குரு: – ஆசாரியன். வைஷ்ணவ குடிக்கு முதல் ஆசாரியராயிருக்கை. அடியார்களுடைய அறியாமையாகிய இருளைத் தம் பிரபந்தங்களால் போக்குபவனாகையாலே குரு என்ற படி. புவனம் என்பது தமிழில் புவி ஆகி பூமியைக் குறிக்கும்.

(நாதனுக்கு நாலாயிரம் உரைத்தது) – நாதன் – நாதமுனிகள் என்னும் ஆசாரியர். தகப்பனார் இட்ட திருநாமம் ஸ்ரீரங்கநாதன் என்பது. இவர் யோகாப்யாஸம் கைவந்தவராகையாலே ஸ்ரீரங்கநாதமுனிகள் என்றும் சுருக்கமாக நாதமுனிகள் என்றும் வழங்கப்பட்டார். அத்தகைய நாதமுனிகளுக்கு ஆழ்வார் நாலாயிரம் வழங்கிய வரலாறு – மேல்நாட்டிலிருந்து சில ஸ்ரீவைஷ்ணவர்கள் வீரநாராயணபுரத்து மன்னனாரைச் சேவித்து, அவர் முன்பு *"ஆராவமுதே"* என்ற திருவாய்மொழி பதிகத்தைச் சேவித்தனர்.

அதனை நாதமுனிகள் கேட்டு மிகவும் உகந்து, அவர்களைப் பார்த்து *"ஆயிரத்துள் இப்பத்தும்"* என்று இருந்தது. இந்தப் பிரபந்தம் முழுவதும் உங்களுக்குத் தெரியுமா? என்று கேட்டார். அவர்களும் இந்தப் பத்துப் பாட்டே வரும் என்றனர். இவர் அவர்களிடம் இந்த ஸ்ரீகோசம் உண்டோ? பாடம் சொல்லுவார் உண்டோ? என்று கேட்டார். அவர்களும் தங்களுக்கு இவ்வளவே வரும் என்றனர். பின்னர் அவர்களை உபசரித்து அனுப்பினார்.

உடனே இந்த பிரபந்தம் சடகோபன் அவதரித்த திருக்குருகூரில் இருக்கும் என்று எண்ணி அங்குச் சென்றார். அங்குள்ள பொலிந்து நின்ற பிரானைச் சேவித்து மதுரகவியின் சீடரான ஸ்ரீபராங்குசதாசரை விசாரித்தார். அவரும் திருவாய்மொழியும் மற்ற பிரபந்தங்களும் வெகு காலம் முன்பே மறைந்து விட்டன என்றும், தம் ஆசார்யரான மதுரகவிகள் ஆழ்வார் விஷயமான கண்ணிநுண் சிறுத்தாம்பு என்னும் பிரபந்தத்தை எங்களி

டம் அளித்து இதை பன்னீராயிரம் உரு ஆழ்வார் முன்பே அநுஸந்தித்தால் ஆழ்வார் பிரஸந்நமாவார் என்று கூறியதை நாதமுனிகளிடம் சொன்னார். நாதமுனிகளும் கண்ணிநுண் சிறுத்தாம்பை அவரிடம் உபதேசமாகப் பெற்று ஆழ்வார் முன்பே நியமத்தோடு பன்னீராயிரம் தடவை உரு அநுஸந்தித்தார். ஆழ்வாரும் அவர் மனக் கண்ணிலே தோன்றி "உமக்கு என்ன வேணும்" என்று கேட்க, "திருவாய்மொழி முதலான பிரபந்தங்கள் அருள வேணும்" என்று சொல்ல, ஆழ்வாரும் அவருடைய அறியாமையைப் போக்கி எம்பெருமானைப் பற்றிய அறிவையும் பக்தியையும் அருளினார். மற்றும், ரகஸ்ய த்ரயத்தையும், திருவாய்மொழி முதலான பிரபந்தங்களையும் அவற்றின் பொருளையும் அஷ்டாங்க யோக ரகசியத்தையும் அருளினார். இதுவே நாதனுக்கு நாலாயிரம் அருளினபடி... மாமுனிகளும் *"அருள் பெற்ற நாத முனி"* என்று உபதேசரத்தின மாலையில் அருளியதற்கு ஏற்ப *"அருள் மாறன் அருளைப் பெற்ற ஸ்ரீமந்நாதமுனி"* என்பர் சீயர்.

(நன் மதுரகவி வணங்கும் நாவீறன்) – மதுரகவிகளுக்கு நன்மையாவது *"தேவு மற்றறியேன்"* என்று நம்மாழ்வாரையே தெய்வமாகக்கொண்டு "கண்ணிநுண் சிறுத்தாம்பு" என்னும் பிரபந்தம் அருளினமை ஆகும். அவர் வணங்கும் அன்பன் நம்மாழ்வார். அவர் நாவீறு படைத்தவர். நாவுக்கு வீறாவது – பிரிதொன்றுக்கில்லாச் சிறப்பு. "ஆழ்வார் எம்பெருமானுக்கு அடிமையாகையாலே ஆழ்வாருக்குக் கருவியாய் அவனுக்கு அடிமையான நா" (திருவா.3.9.1) என்பர் நம்பிள்ளை. "உரிய விஷயத்தில் துதி செய்யக் கருவியான நாவைக் கொண்டு உரிமையல்லாத மனிதரைப் பாடுகைக்கு வந்த கவி அல்லேன்" என்று ஆழ்வார் மனத்தை உரைப்பர் வாதி கேசரி சீயர் (திருவா.3.9.9) *"மலக்கு நாவுடையேற்கு மாறுளதோ இம்மண்ணின்மிசையே"* (திரு.வா.6.4.9) என்று ஆழ்வார் தாமே சொல்லியதற்கு ஏற்ப "வாக்குக்கு எட்டாதவன்" என்று உபநிடதம் கூறிய எல்லாரைக் காட்டிலும் உயர்ந்தவனான எம்பெருமானை மாறுபாடு அடையும்படி செய்யும் நாவீறுடையவர் ஆழ்வார் என்பர் பெரிய வாச்சான்பிள்ளை. அதனால் பூமியில் எதிர் உண்டோ? ஈச்வரன் உளுக்கும்படி கவிசொல்லவல்லார் தம்மை ஒழியச் சிலர் இல்லாமையாலே வேறு என்னோடு ஒப்பார் இல்லை என்று ஆழ்வார் மனத்தைக் காட்டுவர். அப்படிப் பட்ட ஆழ்வாரை வணங்கியவர் மதுரகவிகள்.

(மாதவன் பொற்பாதுகை) – மா –ஸ்ரீதேவியைச் சொல்லுகிறது. தவ: – நாதன் என்னும் பொருளையுடையது. "மாயா: தவ:" – மாதவ:" – லக்ஷ்மீ நாதன் என்றபடி. பரமபதத்தில் பெரிய பிராட்டியுடன் எழுந்தருளியிருக்கும் இருப்பைக் குறிப்பதாகும். *"வடிவுடை மாதவன் வைகுந் தம்"* என்று நம்மாழ்வாரும் பரமபதத்தில் இருக்கும் எம்பெருமானை மாதவன் என்று அருளியது காணலாம். பொற்பாதுகை – விரும்பத்தக்க பாதுகையான சடகோபர்.

ஆழ்வார்களெல்லாரும் அவயவங்களாகையால் வந்த தன்னேற்றத்தையுடைய ஸ்ரீசடகோபன் திருநாமமே எம்பெருமான் திருவடி நிலைகளுக்கே அடையாளமாம் படி பண்ணினான். இதுபற்றியே *"மாதவன் பொற் பாதுகை"* ஆயிற்று. இது பற்றியே மாமுனிகள் அர்ச்சாவதாரத்திலும் *"பூமகள் கோன் தென்னரங்கர் பூங்கழற்குப் பாதுகமாய்த் தாமகிழச் செல்வச் சடகோபர்"* என்று ஆர்த்திப் பிரபந்தத்தில் (10) அநுபவிப்பர். திவ்ய தேசங்களில் இப்பாதுகை எல்லாருடைய தலையில் அணியாய் இருக்குமன்றோ. இப்படி மாதவன் பூங்கழலுக்கு ஸ்ரீசடகோபனும், சடகோபன் திருவடிக்கு இராமாநுசனுமாக வளர்ந்தது அறியற்பாலதாகும்.

(மகிழ் மாறன்) – மாறன் – இதுதான் முதல் உபாதாநமான திருநாமம். பிற மதத்தவர்களான குத்ருஷ்டிகளைத் தண்டித்து அவர்களுடைய பிறவியை நாசம் செய்தவர். அறியாமைக்கு மாறகர். மகிழ் மாறன் – எம்பெருமானும் பிச்சேறி ஊமத்தங்காய் தின்றவனைப் போலே ஆழ்வாரோடு ஒரு நீராகக் கலந்து மையலுடையனாம்படி பண்ண வல்ல ஞானப் பெருமையை உடையவராகையாலே மாறன் என்பர் பிள்ளைலோகம் சீயர். மகிழ்மாறன் – வகுளாபரணரான ஆழ்வார். அதாவது வகுள மாலையை தரித்தவரான ஆழ்வார். மாமுனிகள் திருவாய்மொழி நூற்றந்தாதியில் "மகிழ்மாறன்" என்று அருளியதற்கு ஏற்ப, உலகமுண்ட பெருவாயனில் ஆழ்வார் முறையாக சரணாகதி பண்ணுகையாலே, ஆழ்வார் கழுத்தில் சாத்தின திருமகிழ் மாலையும் வளப்பமாயிற்று. எம்பெருமான் தண்டுழாய் விரை நாறு கண்ணியனானாப் போலே ஆழ்வாரும் மகிழ் மாறனானார். அது தலைவனாம் தன்மையைத் தெரிவிக்கிறது. இது அடிமைத் தன்மையைத் தெரிவிக்கிறது என்பர். மகிழ்மாறனான சடகோபரை இவ்வையகத்தில் எப்போதும் வாழ்த்துவோமாக.

வாழித்திருநாமம் வளரும்...

108 திவ்விய தேசவைபவம்





36 (தலைச்சங்காடு)

# திருத் தலைச் சங்கநாண்மதியம்

உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.

**புராண வரலாறு :**

சந்திரன், தன் குருவான ப்ருஹஸ்பதியின் மனைவி தாரையிடம் தவறாக நடந்த காரணத்தால், ப்ருஹஸ்பதியால் சபிக்கப்பட்டு க்ஷய ரோகம் வந்து வருந்தினான். பின்னொரு சமயம், தக்ஷனின் இருபத்தேழு பெண்களையும் மணந்து, ரோஹிணி இடம் மட்டும் அதீத அன்புடன் இருந்ததால், தக்ஷனால் சபிக்கப்பட்டு, ஒளி மங்கினான். திருவரங்கத்தில் சந்த்ர புஷ்கரணியில் தபஸ் செய்து, ரங்கநாதரால் அருள் பெற்றான். பிறகு, திருஇந்தளூரில் குளக்கரையில் பரிமளரங்கரை நோக்கித் தவம் இருந்து, அவரால் அருளப்பட்டு, பிறகு இந்த ஊருக்கு வந்து தலத்து எம்பெருமான் கருணையாலே, அவராலேயே சூடிக்கொள்ளப் பெற்றான். ஆதலால், பெருமாளுக்கு நாண்மதியப் பெருமாள் என்கிற திருநாமம். சிவன் பிறை சூடினார், இந்த எம்பெருமான் பூர்ண சந்த்ரனைச் சூடிக் கொண்டார்.

| | |
|---|---|
| பெருமாள் | – நாண்மதியப் பெருமாள், கிழக்கு நோக்கி நின்ற திருக் கோலம். |
| உத்ஸவர் | – உலகநாதன் |
| தாயார் | – தலைச் சங்க நாச்சியார், செங்கமலவல்லி. |
| தீர்த்தம் | – சந்த்ர புஷ்கரணி. |
| விமானம் | – சந்த்ர விமானம். |
| ப்ரத்யக்ஷம் | – தேவர்கள், நித்ய சூரிகள், சந்த்ரன். |
| ஆகமம் | – பாஞ்சராத்ரம். |
| மங்களாசாஸனம் | – திருமங்கை ஆழ்வார், |
| சிறப்புகள் | – மிகச் சிறந்த சங்கைத் தாங்கி நிற்பதால், பகவான் இப்பெயர் பெற்றார். |

**த்யான ச்லோகம்**

*வ்யோமஜ் யோதிரி தீரித: சசிஸரஸ் தீரேருணாப் ஜாதவ:*
*பூர்வாம்போதி முகஸ் தலாருணவ நாக்யாதே புரே கேசரே!*
*சாந்த்ரே சந்த்ரநிபே விமுக்த பவிநாம் ப்ருந்தை ஸ்ஸுரைஸ் ஸேவித:*
*நித்யை ராச்ரித பாதபத்ம யுகலஸ் ஸாக்ஷாத்க்ருதோ பாஸதே!!*

----

**பாசுரம்**

*"கண்ணார் கண்ணபுரம் கடிகை கடிகமழும்*
*தண்ணார் தாமரைசூழ் தலைச்சங்க மேல்திசையுள்*
*விண்ணோர் நாண்மதியை விரிகின்ற வெஞ்சுடரை*
*கண்ணாரக் கண்டுகொண்டு களிக்கின்றது இங்கு என்று கொலோ"*

--------

*செப்புங்கால், ஆதவனும், திங்களும் வானும் தரையும்*
*அப்பும், காலும், கனலுமாய் நின்றான் - கைப்பால்*
*அலைச் சங்கம் ஏந்தும் அணி அரங்கத்தம்மான்*
*தலைச் சங்க நாண்மதியத்தான்.*

(பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் பாசுரம்)

**நாமாக்கள்**

311. *ஓம் சிகண்டிநே நம:*
(ஜெயிக்க முடியாத அளவற்ற மகிமை உடையவனே)

## வாசகர்களுக்கு அறிவிப்பு

பிரதி மாதம் ஸப்தகிரி மாத இதழ் உங்களுக்கு குறிப்பிட்ட காலத்தில் கிடைக்காமல் போனால் பிரதான ஆசிரியர் அலுவலகத்தை பணி நாளில் கீழ்காணும் தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டால் இவ்இதழினை உடனே அனுப்பி வைக்கப்படும்.

நீங்கள் கீழ் குறிப்பட்ட விவரங்களை தொலைபேசியில் தெரிவியுங்கள். உங்கள் சந்தா எண், உங்கள் முகவரி, உங்கள் பகுதி அஞ்சல் எண், உங்கள் கைபேசி எண்... சரியாக தெரிவியுங்கள்.

பிரதான ஆசிரியர்
அலுவலக தொலைபேசி எண்:
0877-2264543

*ஓம் ரோசிஷ்கர்யை நம:*
(ப்ரகாசத்தை அளிப்பவளே)

312. *ஓம் நஹுஷாய நம:*
(தன்னுடைய மாயையால் ஜீவனைக் கட்டுபவனே)
*ஓம் ஸ்வபிரகாசாயை நம:*
(தான் பிரகாசிக்க, வேறு உதவி வேண்டாதவளே)

313. *ஓம் வ்ருஷாய நம:*
(பக்தர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுபவனே)
*ஓம் சோபமாந விஹங்கமாயை நம:*
(எப்போதும் பிரகாசமான பரமபதத்தை அடைவிப்பவளே)

314. *ஓம் குரோதக்தே நம:*
(கோபத்தை ஒழிப்பவனே)
*ஓம் தேவாங்கஸ்தாயை நம:*
(பகவானின் மடியில் வீற்று இருப்பவளே)

315. *ஓம் குரோதக்ருதே நம:*
(துஷ்ட க்ஷத்ரியர்களிடம் கோபமுள்ளவனே)
*ஓம் பரிணத்யை நம:*
(அடியார்கட்கு, எளிதாக தாழ வந்து அருள்பவளே)

316. *ஓம் கர்த்ரே நம:*
(கார்த்த வீர்யனைத் துணித்தவனே)
*ஓம் காம வத்ஸாயை நம:*
(மன்மதனைப்புத்ரனாகப் பெற்றவளே)

317. *ஓம் விச்வபாஹவே நம:*
(உலகங்களுக்கு நன்மையளிக்கும் திருக்கைகளை உடையவனே)
*ஓம் மஹாமத்யை நம:*
(உயர்ந்த ஞானமுள்ளவளே)

318. *ஓம் மஹீதராய நம:*
(உலகங்களைத் தாங்குபவனே)
*ஓம் இல்வலாய நம:*
(அடியார்களை உயர்ந்த ஸ்தானத்துக்குச் செல்ல வைப்பவளே)

319. *ஓம் அச்யுதாய நம:*
(தன் நிலை தவறாதவனே)
*ஓம் உத்பலநபாயை நம:*
(நெய்தல் மலரையொத்த, திருநாபியை உடையவளே)

320. *ஓம் ப்ரதிதாய நம:*
(புகழ் பெற்றவனே)
*ஓம் ஆதி ஸமந்யை நம:*
(அடியார்களின் துயரைப் போக்குபவளே)

*ஸ்ரீ ஸிரஸ் ஸங்க நாயிகா ஸமேத*
*பூர்ண சந்த்ர நாமனே ஸ்ரீசந்த்ரசாபஹர பர ப்ரஹ்மணே நம:*

திவ்ய தேச வைபவம் வளரும்...

## சிறுவர் பகுதி விடைகள்

1. பெரிய திருமொழி.
2. அமலனாதிபிரான்.
3. திருவிருத்தம்.
4. திருவாசிரியம்
5. அழகிய மணவாளப் பெருமாள் நாயனார்.
6. குலசேகராழ்வார்.
7. நாராயணீயம்.
8. முதல் திருவந்தாதி.
9. யதீந்திர மயதீபிகை.
10. திருவாய்மொழி, நம்மாழ்வார்.

தொகுப்பு : ப. ஜனனி, புதுச்சேரி.




# வெற்றிக்கான உயிர் நாடி

வெற்றி பெறுதல் வேண்டும் என்பது ஒவ்வொரு மனிதனின் எண்ணமாகும். முக்கியமாக ஒவ்வொரு மாணவனும் தேர்வில் நல்ல மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற வேண்டும் என்றும், அதிகமான மதிப்பெண்கள் தனக்கு கிடைக்க வேண்டும் என்றும் எண்ணுவான். வெற்றிப் பெற வேண்டும் எனும் கோரிக்கை அனைவரிடமும் இருக்கக் கூடிய ஒன்றாகும். ஆனால் வெற்றி அனைவருக்கும் கிடைத்து விடாது. சிலருக்கு மட்டுமே தாம் கேட்டவை கேட்டபடி கிடைக்கும். நினைத்தபடியே வெற்றி கிடைக்க வேண்டுமெனில் என்ன செய்தல் வேண்டும்? நினைத்த படி வெற்றி கிடைக்காததற்கு காரணம் என்ன? இக்கேள்விகளுக்கான சரியான பதிலை கூறுவதே பகவத் கீதை.

வெற்றிக்கான உயிர்நாடி எது என்பதனை கீதை ஞானம் அழகாக விவரிக்கின்றது. இதனைப் பற்றி கீதாசார்யன் ஒரு ரகசியத்தை கூறுகின்றார். “தீவிரமான காற்றானது நீரில் சென்று கொண்டிருக்கும் ஓடத்தை இழுத்து செல்வது போன்று, மனத்திற்கு வசப்படாத ஒரு இந்திரியமே ஆனாலும் புத்தியை கவர்ந்து செல்லும்” (பகவத் கீதை 2–67).

இந்த கீதை உபதேசத்தில் ஸ்ரீகிருஷ்ண பகவான் வெற்றிக்கான உயிர் நாடியைக் குறித்து கூறுகின்றார். கடலில் ஓடம் அமைதியாக செல்ல வேண்டுமெனில் கடல் அலைகள் அமைதியாக இருத்தல் வேண்டும். உத்வேகத்துடன் எழும் அலைகள் ஓடத்தை கண்டபடி ஆட்டிப் படைக்கும். அதுபோன்றுதான் நாம் செயல்களில் வெற்றி பெற வேண்டும் என்றால் இந்திரியங்களின் வாயிலாகவே, அதாவது உடலின் வாயிலாகவே செயல் புரிதல் வேண்டும். கால்கள், கைகள், வயிறு, பிறப்புறுப்புகள், ஆசனவாய் இவையாவும் கர்மேந்திரியங்களாகும். கண்கள், காதுகள், மூக்கு, தொடுதல், நாக்கு இவை ஞானேந்திரியங்களாகும். இவையாவும் ஒன்றிணைந்ததே உடலாகும். இந்திரியங்களில் ஏதாவது ஒன்று இந்திரிய சுகத்தில் சிக்குண்டால் மனிதனுக்கு வீழ்ச்சி என்பது நிச்சயமானதாகும். அவருடைய வெற்றி வாய்ப்பு முழுமையாக தொலைகின்றது. உண்மையில் அனைத்து உயிரினங்களுக்கும் ஒரு இந்திரியமே பலமானதாக இருக்கும். அதுவே அதனின் பலவீனமானதாக அமைந்தும் விடுகின்றது.

உதாரணத்திற்கு மானிற்கு இசையென்றால் விருப்பம். வேட்டைக்காரனின் அழகான இசையை கேட்டவுடன் அது அசையாமல் நின்று விடுகின்றது. அப்பொழுது அவன் எளிதாக அதனை வேட்டையாடுகிறான். அக்னியை கண்டவுடன் விட்டில் பூச்சிகளுக்கு ஒரு வித ஈர்ப்பு உண்டாகிறது. அவை தானாகவே கூட்டம் கூட்டமாக வந்து அக்னியில் விழுந்து அழிகின்றன. இவ்விதமாக பல உயிரினங்கள் சாதாரணமாக ஒரு இந்திரியத்தால் ஆபத்துக்களில் சிக்குகின்றன. இனி மனிதன் அனைத்து இந்திரியங்களுக்கும் ஆட்பட்டால் வெற்றி எப்படி கிடைக்கும். அவன் வீழ்ச்சியடையாமல் எப்படி இருக்க முடியும்.

தெலுங்கு மூலம் : டாக்டர். வைஷ்ணவாங்கிரி சேவக் தாஸ்.
தமிழாக்கம் : திரு. வ.ஒ. சுரேஷ்.

வெற்றியை விரும்பும் மாணவர்கள் கபடி விளையாட்டை ஞானத்தை கற்றுக் கொடுக்கும் மார்க்கமாக எடுத்துக் கொள்ளல் வேண்டும். கபடி விளையாட்டு உலகில் இன்றைய காலகட்டத்தில் சிறந்து விளங்குகிறது. ஒரு அணியில் ஆடுபவர் எதிரணியை நோக்கிச் சென்று ஒருவரை தாக்கி விட்டு மீண்டும் திரும்பி வருதல் வேண்டும். அப்பொழுதுதான் புள்ளிகள் கிடைக்கும்.

அந்த ஆட்டக்காரன் எதிரணியில் யாரை தாக்குகின்றாரோ அவர் வெளியேறுவார். ஒரு சில நேரத்தில் ஆட்டக்காரன் எதிரணியை நோக்கிச் செல்லும் போது ஆறேழு பேர் ஒரே சமயத்தில் அவன் மேல் விழுந்து பிடித்தும் கொள்வர். அவன் எவ்வளவு முயற்சித்தாலும் பலன் இருக்காது. இப்பொழுது அந்த ஆட்டக்காரனும் வெளியேறுதல் வேண்டும்.

எந்த ஒரு மாணாக்கரும் தம் வாழ்க்கையில், தேர்வில் தேர்ச்சி அடைய வேண்டும் என்று எண்ணினால் இச்செயலை கவனத்தில் கொண்டு தன் இந்திரியங்கள் தன்னை விடுத்துச் செல்லாமல் பார்த்துக் கொள்ளல் வேண்டும்.

எதிரணியை நோக்கிச் சென்று ஒவ்வொரு ஆட்டக்காரனையும் வெளியேற்றி திரும்பி வருவது போன்று மாணாக்கர்களும் அனைத்து இந்திரியங்களையும் படிப்படியாக தனக்குள் கட்டுப்படுத்திக் கொள்ளல் வேண்டும். அப்பொழுது அந்த இந்திரியங்கள் வெற்றிப்பாதையில் செல்ல சிறப்பாக துணை புரிந்து சிறந்த பலனை அளிக்கும்.

இன்றைய காலகட்டத்தில் கபடி விளையாட்டை கண்டால் கம்பீரமாக உள்ளது. கபடி விளையாட்டில் ஒரு ஆட்டக்காரனை எதிரணியில் ஆறேழு ஆட்டக்காரர்கள் ஒரு புறமாக இழுப்பார்கள். அப்போது ஆட்டக்காரன் தோல்வியை அடைகின்றானே தவிர உயிர் விடுவதில்லை. ஒரு வேளை அனைவரும் அவரவர்கள் இஷ்டத்திற்கு இழுத்தால் உயிர்போகும். இன்றைய காலகட்டத்தில் மாணக்கர்களின் வாழ்க்கை நிலையும் இது போன்றே உள்ளது.

புத்தகங்கள் முன்பாக உட்காருவதற்குள் செல்போன் உபயோகிப்பதால் செவிகள் ஒரு புறமாக இழுக்கின்றது. வாட்ஸ்யாப் புகைப்படங்களால் கண்கள் ஒரு புறமாக செல்கின்றன.

துரித உணவுகள் நாக்கை வேறொரு பக்கமாக இழுக்கின்றன. இவை உண்மையாகவே மாணாக்கர்களுக்கும், இளைஞர்களுக்கும் ஆபத்தானவைகளாக விளங்குகின்றன.

ஆகவே, மாணாக்கர்களும் கீதை வாக்கியங்களை கவனமுடன் கவனித்து, வாழ்க்கையில் வெற்றிப் பெற்ற பெரியோர்களை வழிகாட்டியாக பெற்று ஒவ்வொரு இந்திரியங்களையும் கட்டுப்படுத்தி பாதுகாப்பாக முன்னேறிச் செல்லல் வேண்டும். அப்பேற்பட்ட மாணாக்கர்களுக்கு நிச்சயமாக வெற்றிக் கிட்டும். அதாவது இந்திரிய கட்டுப்பாடே வெற்றிப் பாதைக்கான உயிர் நாடியாகும்.

பகவத்கீதை தொடரும்...

## வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 33க்கான பதில்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 தி | ரு | ம | ழி | சை | யா | ழ் | வா | ர் | | 2 ஒ | 3 கு |
| 4 சூ | ரி | ய | ன் | வா | க | ப | யு | 5 வா | பி | ன் | ந் |
| | ம் | க | த | ந் | 6 ந | | | ழ் | ர | ப | தி |
| னி | ய | 7 ச | லா | | 8 வி | ன | தை | யா | 9 சு | தா | போ |
| ய | | ல் | க | க் | ரி | 10 ப | | ரி | | வ | ஜ |
| 11 ச | ந் | தி | ர | ன் | னை | ன் | 12 பு | 24 பெ | தை | து | ன் |
| ஜா | | | 13 பி | த் | ரு | தோ | ஷ | ம் | ந் | | கை |
| 14 அ | 15 ம | த் | த | க | ம் | ன | தா | 16 கோ | கி | 17 ஸ்ரீ | ன |
| கு | ங் | 18 ச | க் | க | ர | ம் | | | ஷ் | ர | ப |
| | 19 பி | ர | 25 ப | த் | தி | நெ | றி | | 20 கி | ங் | ப் |
| 21 பெ | ரி | ய | தி | ரு | வ | ந் | தா | தி | | க | ர் |
| 22 மா | ண் | டு | க் | ய | உ | ப | நி | ஷ | த | ம் | 23 சூ |

தொடர்



ஆயுர்வேதம்

# நாயுருவி




| | |
|---|---|
| தெலுங்கு மூலம் | : டாக்டர். சி. மதுசூதன சர்மா. |
| | : 90007 61390. |
| தமிழாக்கம் | : திருமதி. வி. உஷா. |


ஆயுர்வேதத்தில் நாயுருவி தாவரத்தை அபா மார்க்கிணி, க்ஷாரமத்யா, ப்ரத்யக் புஷ்பி என்று சமஸ்கிருத்தில் பல பெயர்களால் அழைக்கின்றனர்.

"நாயுருவி இல்லாத பூமியே இல்லை". இச்செடி மழைக்காலத்தில் வளரக் கூடிய ஒன்று. 2 மீட்டர் உயரம் வரை வளரும். இதன் அறிவியல் பெயர் "அபிராந்தஸ் அஸ்பரா" என்பதாகும். "அம ராந்தேசி" என்ற தாவரக் குடும்பத்தைச் சார்ந்தது.

ஆங்கிலத்தில் Chaff Tree என்று அழைப்பர். வாழ்க்கையில் மக்கள் வியாதிகளால் அவதிப்படுகின்றனர். அவற்றில் வியாதிகளை தீர்க்கும் அரு மருந்தாக பயன்தருகிறது இந்த "நாயுருவிச் செடி". அதனின் மருத்துவ குணங்களைப் பற்றி அறிந்து நாம் பயன் பெறுவோம்.

### தேள் விஷத்தை நீக்க :

இலைகளை நன்கு கசக்கி அதன் ரசத்தை எடுத்து தேள் கடித்த இடத்தில் பூச வேண்டும். அதனுடன் 5–10 மி.லி. இரசத்தையும் உட்கொள்ள வேண்டும். இவ்வாறு செய்தால் விஷம் நீங்கி உயிருக்கு எந்த அபாயமும் இருக்காது.

இந்த மருந்தை குளவி, தேனீ போன்ற பூச்சி கடிகளுக்கும் பயன்படுத்தலாம். புழுக்கடிகளால் ஏற்படக் கூடிய வலி, எரிச்சல் போன்றவை விரைவில் குணமாகும்.

### பல் ஈறுகள் சம்பந்தப்பட்ட உபாதைகள் குணமாக :

100 கிராம் நாயுருவி விதைகளின் பொடி, 10 கிராம் படிகப்பொடி (இவை ஆயுர்வேதக் கடைகளில் "சுப்ரபஸ்மா" என்ற பெயரில் விற்பனை ஆகிறது), 10 கிராம் உப்பு, 1 அல்லது 2 கற்பூர வில்லைகள் ஆகியவற்றை சேர்த்து மிருதுவாக அரைத்து ஒரு சீசாவில் வைத்துக் கொண்டு பற்பொடியாக உபயோகித்து வந்தால் பல்வலி, வீக்கம், ஈறிலிருந்து இரத்தம் கசிதல் போன்றவை குணமாகும். பற்களும் பளபளப்பாக இருக்கும்.

### தோல் பிரச்சனைகளுக்கு :

நாயுருவிப் பொடி, மிளகுப் பொடி ஆகியவற்றை சம அளவில் கலந்து வைத்துக் கொண்டு நாள்தோறும் 2 முறை 1 கிராம் அளவு பொடியை தேனுடன் அல்லது நீரில் கலந்து உட்கொண்டால் சரும வியாதிகள் நீங்கும்.

### காது வலி குறைய :

நாயுருவிச் செடியின் சாம்பலை தேங்காய் எண்ணெயில் கலந்து வைத்துக் கொண்டு 2 அல்லது 3 முறை, 3 சொட்டுகள் காதில் விட்டால் காது வலி குறையும்.

### கை கால் வீக்கம் குறைய :

1 மடங்கு நாயுருவிச் செடியின் சாம்பலை எடுத்துக் கொண்டு அதில் 16 மடங்கு தண்ணீர் ஊற்றி நன்கு கலந்து சில மணி நேரங்கள் விட்டு நீரை வடிகட்டி அதனை

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

பிரதி மாதம் முதல் வெள்ளிக்கிழமை போனில் மட்டுமே!
செயலாட்சித் தலைவருடன் பேசுங்கள்!

டயல் யுவர் ஈ.வோ.

பக்தர்களுக்கு அறிய வாய்ப்பு!

எந்த மாநிலத்திலிருந்தும், எம்மொழியிலும்
நீங்கள் நேராக
செயலாட்சித் தலைவருடன் பேசலாம்!
திருமலையான் ஆர்ஜித சேவைகள்,
வசதி வாய்ப்புகள் குறித்த
உங்களிடையே எழும் சந்தேகங்கள்,
கருத்துகள், ஆலோசனைகளை செயலாட்சித்
தலைவருடன் பகிர்ந்து கொள்ளலாம்.

டோல் நெம்பர் : 0877-2263261

நேரம் : காலை 8.30 மணி முதல் 9.30 மணி வரை.

இந்த வாய்ப்பினை அனைவரும் பயன்படுத்திக் கொள்ளவும்.

சூடுபடுத்தினால், நீர் முழுமையாக வற்றி ஓர் வெண்மைப் படிகம் போன்று நமக்கு கிடைக்கும். அதனை அபாமார்க க்ஷாரம் என்பர். நாள்தோறும் காலை மாலை வேளைகளில் ஒரு டம்பளர் நீரில் 100 மி.லி. நீரில் ஒரு கிராம் சுக்குப் பொடியினை போட்டு கொதிக்க வைத்து ஆறியபின் 3 அல்லது 4 சிட்டிகை இந்த க்ஷாரத்தை கலந்து உட்கொண்டால் உடலில் உள்ள கெட்டநீர் வெளியேறி வீக்கங்கள் குறையும்.

### கருப்பையில் ஏற்படுகின்ற வியாதிகளுக்கு :

நாயுருவிப் பொடி மற்றும் படிக வெல்லப் பொடியை 50 கிராம் வீதம் சம அளவில் எடுத்துக் கொண்டு நாள் தோறும் காலை, மாலை 2 வேளைகளில் 2 கிராம் பொடியை 100 மி.லி. நீரில் கலந்து உட்கொண்டால் பெண்களுக்கு மாதவிடாயின் போது ஏற்படக்கூடிய வயிற்றுவலி போன்ற பிரச்சனைகள் தீரும். மாதவிடாய் சீராய் ஏற்படும். அவைமட்டுமின்றி இம் மருந்தை இவ்வாறே உப யோகித்தால் வாய் மூக்கு மலத் துவாரம் ஆகியவற்றிலிருந்து வரக்கூடிய இரத்தப் போக்கு குறையும்.

### பானை வயிறு குறைய :

250 கிராம் நாயுருவி இரசத்தை 250 மி.லி. எள் ளெண்ணெய் உடன் கலந்து மிருதுவான சூட்டில் நன்கு சூடு படுத்தி ஆறியபின் வடிகட்டி ஒரு சீசாவில் ஊற்றி வைத் துக் கொண்டு நாள்தோறும் ஒரு முறை வயிற்றுப் பகுதி யில் தடவி விட்டு சிறிது நேரம் கழித்து சுடு தண்ணீர் கொண்டு ஒத்தடம் தந்தால் வயிற்றுப் பகுதியில் உள்ள கொழுப்புகள் குறையும்.

### இருமல் மற்றும் சுவாசக் கோளாறுகள் நீங்க :

நாயுருவிச் செடியினை நன்கு காய வைத்து அதனை எரித்து சாம்பலாக்கி ஆறிய பின் ஜல்லித்து ஒரு சீசாவில் வைத்துக் கொள்ளவேண்டும். நாள்தோறும் காலை மாலை ஆகிய இரு வேளைகளில் 1 கிராம் சாம்பலை தேனுடன் கலந்து உட்கொண்டால் இருமல், சளி மற்றும் மூக்கடைப்பு போன்றவை நீங்கும்.

### சரும வியாதிகள் குறைய :

நாயுருவிச் செடியின் சாம்பலை கடுகு எண்ணெய் உடன் கலந்து சொரி, தாமரை, சிரங்கு போன்றவற்றிற்கு தடவி விட்டால் சரும வியாதிகள் குறையும். இந்த நாயு ருவிப் பொடி மற்றும் விதைகள் ஆயுர் வேத மருந்துக் கடைகளில் கிடைக்கின்றன.

ஆயுர்வேதம் வளரும்...

திருமலை திருப்பதி தேவஸ்தானம்,
திருமலை

வயது முதிர்ந்தவர்கள் / உடல்
ஊனமுற்றோர்க்கான "தரிசன டோக்கன்கள்"
வழங்கும் மையம்

டோக்கன்கள் வழங்கும் நேரம் : காலை 7.00 மணி

- டோக்கன் வைத்திருப்பவர்கள் காத்திருக்கும் கூடத்தில் காலை 10.00 மணியளவில் 11 மணி தரிசனத்திற்கும், மாலை 2.00 மணியளவில் 3.00 மணி தரிசனத்திற்கும் ஆஜராக வேண்டும்.
- குறிப்பிட்ட ஒதுக்கீடு முடிந்ததும் டோக்கன் கௌண்ட்டர் மூடப்படும். யாத்திரிகர்கள் அடுத்த நாள் வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
- இந்த டோக்கனை பெற ஆதார் அட்டை/வாக்காளர் அட்டையை தவறாமல் காண்பிக்க வேண்டும்.
- இந்த டோக்கனை பெற்று தரிசனம் செய்தவர்கள் அடுத்த மூன்று மாதத்திற்கு பிறகே தரிசனத்திற்கு அனுமதிக்கப்படுவர்.



# 2019
# மே மாத ராசி பலன்

திரு. பராசரம் பாலசுப்ரமண்யம், திருச்சானூர்

| | | | |
|---|---|---|---|
| சந்திரன்<br>புதன்<br>சுக்ரன் | யுரேனஸ்<br>சூரியன் | செவ்வாய் | ராகு |
| | **மே - 2019**<br>03- புதன் -மேஷம்<br>07- செவ்வாய் -மிதுனம்<br>10- சுக்ரன் -மேஷம்<br>15- சூரியன் -ரிஷபம் | | |
| | | | |
| கேது<br>ப்ளூட்டோ<br>(சனி) | (குரு) | | |

**மேஷம்**

ராசி நாயகன் தன–குடும்ப ஸ்தானமாகிய 2ல் சஞ்சரிக்க அவரை குரு நோக்குகிறார். தனஸ்தானாதிபதி சுக்ரன் விரய ஸ்தானத்தில் உலவிடினும் அவரையும் குரு பார்க்கிறார். சந்திரன் 12ல் உலவிட மாதம் துவங்குகிறது. விற்ற பூமியை மீண்டும் வாங்கும் யோகம் உங்களுக்கு உண்டு.

**ரிஷபம்**

ராசி நாயகன் லாபஸ்தானத்தில் உச்சம் பெற்றுச் சஞ்சரிக்க அவரை குரு நோக்குவதால் திருமணத் திற்காகக் காத்திருப்பவர்களின் எண்ணம் ஈடேறும். சொத்துக்கள் சேரும். பண வரவு அதிகரிக்கும். செல்வந்தர்களும் பிரபலங்களும் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள். எதிரிகளின் வலிமை குன்றும்.

**மிதுனம்**

ராசியில் ராகு உலவிடினும் ராசி நாயகன் நீச பங்கம் பெற்றுத் தொழில் வீட்டில் சஞ்சரிப்பதால் தொழில், வியாபாரம், உத்தியோகம் ஆகியவற்றில் நல்ல முன்னேற்றம் காணலாம். தனஸ்தானம் குருவின் பார்வையைப் பெறுவதால் பணவரவு/பொருட்சேர்க்கை அதிகரிக்கும். கடன் சுமை குறையும்.

**கடகம்**

ராசி நாயகன் பாக்கிய ஸ்தானத்தில் உலவிட இம்மாதம் தொடங்குகிறது. செவ்வாயின் சஞ்சாரத்தால் இடம் வாங்குவதில் இருந்த தடைகள் அகலும். பூர்வீகச் சொத்துக்கள்/ பாகப் பிரிவினைகளில் இருந்த தகராறுகள் நீங்கும். சுக்ரன் உச்சம் பெற்ற நிலையில் மாதம் துவங்குவதால் தொழில் வளர்ச்சி பெருகும்.

**சிம்மம்**

மாத முதலிரண்டு வாரங்களில் ராசி நாயகன் ஒன்பதாம் இடத்தில் உச்சமாக சஞ்சரிப்பார். ஆரோக்கிய பாதிப்புகள் அகலும். அரசியலில் ஈடுபட்டிருப்பின் பதவியும், புது பொறுப்புகளும் தேடி வரும். உத்தியோகம் மற்றும் தொழிலில் எதிர்ப்பார்த்த இலக்கை அடைவீர்கள்.

**கன்னி**

ராசி நாயகன் புதன் மற்றும் தன – பாக்கியாதிபதியாகிய சுக்ரன் ஆகிய இருவரது சஞ்சாரமும் சிறப்பாக உள்ளது. பிள்ளைகளால் ஓரிரு எண்ணங்கள் நிறைவேறும். நான்கில் சனி வக்ரமாகச் சஞ்சரிப்பதால் நிலம், மனை வாங்குவதில் சிறிது கால தாமதம் ஏற்படலாம்.

**துலாம்**

ராசி நாயகன் சுக்ரன் மீனத்தில் குருவின் பார்வையுடன் சஞ்சரிக்கிறார். நட்பு வட்டம் விரியும். பாக்கிகள் வசூலாகும். வழக்குகளில் சாதகமான தீர்ப்பு கிடைக்கும். பணப் பெருக்கம் ஏற்படும். தொழிலில் புதிய பங்குதாரர்களைச் சேர்த்துக் கொள்வீர்கள். திருமணத்தால் வாழ்க்கைத் தரம் செல்வ நிலை உயரும்.

**விருச்சிகம்**

ராசி நாயகனும் தனஸ்தானாதிபதி குருவும் ஒருவருக்கொருவர் ஏழில் வீற்றுள்ளனர். தொழில் வீட்டிற்குரிய சூரியன் ஆறாமிடத்தில் உச்சம் பெற்றுள்ளதால் எல்லா காரியத்திலும் உடனடி வெற்றி கிடைக்கும். தடைகள் அகலும். உடன் பிறப்புகளின் உதவி கிடைக்கும்.

**தனுசு**

ராசி நாயகன் விரய வீடான பன்னிரண்டிலும், ராசியில் சனியுடன் கேதுவும் உள்ளதால் எதையும் யோசித்துச் செய்யவும். பத்திற்குரிய புதன் நான்கில் நீசபங்கம் பெற்றுள்ளதால் இடமாற்றம், இலாகா மாற்றம் வந்து சேரும். சுக்ரனின் உச்ச சஞ்சாரத்தால் மேலதிகாரிகளின் ஆதரவு கூடும்.

**மகரம்**

சென்ற மாதத்தில் நடைபெறாத சில காரியங்கள் இந்த மாதத்தில் நடைபெறத் தொடங்கும். ராசிநாதன் சனி பன்னிரண்டில் உக்ரமாக சஞ்சரிப்பதால் ஆரோக்கியத்தில் சற்று அக்கறைக் காட்ட வேண்டி யிருக்கும். திட்டமிட்ட காரியங்களைத் தள்ளிப் போடாமல் இருப்பது நல்லது.

**கும்பம்**

ராசி நாதன் லாப ஸ்தானத்திலும், 2ல் யோகக்காரர்கள் புதன் மற்றும் சுக்ரன் சஞ்சரிப்பது சிறப்பான தாகும். மங்கலச் செலவுகள் அதிகரிக்கும். சொத்துக்கள் வாங்க, விற்க எடுத்த முடிவுகள் வெற்றி தரும். பிரிந்து சென்ற உடன் பிறப்புகள் மீண்டும் வந்து இணைந்து பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்வர்.

**மீனம்**

தனஸ்தானாதிபதி செவ்வாய்க்கும் ராசி நாதன் குருவிற்கும் பார்வை பரிவர்த்தனை ஏற்பட்டுள்ளது. பொருள் வரவு பெருகும். ஆரோக்கிய பாதிப்புகள் அகலும். தொழில் வளர்ச்சி கூடும். அரசு மூலம் எதிர்ப்பார்த்த உதவிகள் எளிதில் கிடைக்கும். அரசியலில் பெரும் பதவி கிடைக்க வாய்ப்பு உண்டு.

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# ஸப்தகிரி

*(சமய மாத இதழ்)*

## சந்தாதாரர் விண்ணப்பப்படிவம்

1. பெயர் மற்றும் முகவரி :
(பெரிய எழுத்துக்களில்)

மாவட்டம் & பின்கோடு எண்

அலைபேசி எண்

2. தேவையான மொழி : ☐ தெலுங்கு ☐ தமிழ் ☐ கன்னடம் ☐ இந்தி ☐ ஆங்கிலம் ☐ சமஸ்க்ருதம்

3. வருட /ஆயுள் சந்தா : ☐ ரூ. 60/- ☐ ரூ. 500/-

4. சந்தா புதுப்பித்தல் :

(அ) சந்தா எண். :

(ஆ) மொழி :

5. செலுத்திய தொகை :

6. செலுத்திய வழி :

பணவிடை

(எம்.ஓ. கூபன் (எண்) : தேதி:

வங்கி கேட்பு வரைவோலை

(டி.டி. எண்.) : தேதி:

இடம் :

நாள்:

*சந்தாதாரர் கையொப்பம்*

---


திருமலை திருப்பதி
தேவஸ்தானம், திருப்பதி.

## தகவல் மையம்

## தி.தி.தே. கால்சென்டர்

### உங்களுக்காக

### 24 மணி நேரமும்

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களின் வசதிக்காக திருப்பதியில் தகவல் மையம் ஆரம்பித்துள்ளது. பக்தர்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்து விவரங்களையும் அறிய இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை டிக்கெட், தங்கு வசதி, நன்கொடை திட்டங்கள் குறித்து அறிய..... இங்ஙனே பல்வேறு சேவைகள் குறித்து.... தேவஸ்தானத்திற்குத் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் நீங்கள் உங்கள் ஊரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

*இம்மையம் 24 மணி நேரமும்
பணிபுரியும் எப்பொழுது
வேண்டுமானாலும்
நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.*

தொடர்பு கொள்ளவேண்டிய
தொலைபேசி எண்கள் :
**0877-
2233333
2277777**


---

- ஸப்தகிரி வருடச் சந்தா ரூ.60/- ஆயுள்சந்தா ரூ.500/-டி.டி.ஐ பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம். திருப்பதி எனும் பெயருக்கு எடுத்தல் வேண்டும்.
- ஸப்தகிரி சந்தாதாரராக சேர/சந்தா புதுப்பிக்க விரும்புவோர் இக்கூபனை பூர்த்தி செய்தோ அல்லது வெள்ளைத்தாளில் மேற்குறிப்பிட்ட விபரத்தை எழுதியோ அனுப்பலாம்.
- கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை மட்டுமே அணுகவும்.
- தி.தி.தேவஸ்தான ஆசிரியர் அலுவலகத்தைத் தவிர வேறு எங்கும் பணத்தை செலுத்தி ஏமாறாதீர்கள்.
- மணியார்டர் அனுப்புவோர் அதில் உங்கள் சந்தா விவரங்களை எழுதி கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவும்.
- சமஸ்க்ருதம் மொழி ஸப்தகிரி பத்திரிக்கைக்கு ஆயுள் சந்தா இல்லை. வருடச்சந்தா மட்டுமே உண்டு.


**எங்கள் முகவரி :**

பிரதான ஆசிரியர்,
ஸப்தகிரி அலுவலகம்,
தி.தி.தேவஸ்தான அச்சக வளாகம்,
கபிலதீர்த்தம் சாலை,
திருப்பதி – 517507.



*Edited and Published on behalf of T.T.Devasthanams by **Dr. K. Radha Ramana**, M.A., M.Phil., Phd., Chief Editor, T.T.D. and Printed at T.T.D. Press by **Sri. R.V. Vijayakumar,** B.A., B.Ed., Dy. E.O. (Publications & Press), T.T.D. Press, Tirupati - 517 507.*

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# நாராயணவனம்
# ஸ்ரீகல்யாணவேங்கடேஸ்வரஸ்வாமி
# பிரம்மோத்ஸவம்

**16-05-2019 முதல் 24-05-2019 வரை**

**16-05-2019 வியாழக்கிழமை**
பகல் : துவஜாரோஹணம்
இரவு : பெரிய சேஷ வாகனம்

**17-05-2019 வெள்ளிக்கிழமை**
பகல் : சிறிய சேஷ வாகனம்
இரவு : ஹம்ஸ வாகனம்

**18-05-2019 சனிக்கிழமை**
பகல் : சிம்ம வாகனம்
இரவு : முத்துப்பந்தல் வாகனம்

**19-05-2019 ஞாயிற்றுக்கிழமை**
பகல் : கல்பவிருக்ஷ வாகனம்
இரவு : சர்வபூபால வாகனம்

**20-05-2019 திங்கட்கிழமை**
பகல் : மோஹினி அவதாரம்
இரவு : கருட வாகனம்

**21-05-2019 செவ்வாய்க்கிழமை**
பகல் : ஹனுமத்வாகனம்
மாலை : வஸந்தோத்ஸவம்
இரவு : யானை வாகனம்

**22-05-2019 புதன்கிழமை**
பகல் : சூரியப்பிரபை வாகனம்
இரவு : சந்திரப்பிரபை வாகனம்

**23-05-2019 வியாழக்கிழமை**
பகல் : திருத்தேர்
இரவு : குதிரை வாகனம்

**24-05-2019 வெள்ளிக்கிழமை**
பகல் : சக்ர ஸ்நானம்
இரவு : துவஜாவரோஹணம்



SAPTHAGIRI (TAMIL) ILLUSTRATED MONTHLY
Published by Tirumala Tirupati Devasthanams 25-04-2019
Regd. with the Registrar of Newspapers under “RNI” No.10742, Postal Regd.No.TRP/12 - 2018-2020
Licensed to post without prepayment No.PMGK/RNP/WPP-04/2018-2020

